பக்கங்கள்: 24 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 29 ஞாயிற்றுக்கிழமை 15.10.2017 கதிர் 343

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு கண்கவர் ஆடைத் தெரிவுகளுக்கு
சரவணா ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
இல.171, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

# மைத்திரியைப் பலவீனப்படுத்தினால் பெரிய பேய்கள் தலையெடுக்குமாம்!

## யாழ்ப்பாணத்தில் அவரே தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 15

“நீங்கள் எல்லோரும் சேர்ந்து பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக என்னை ஜனாதிபதியாக்கினீர்கள். இப்போது என்னைப் பலவீனப்படுத்தினீர்களானால் மீண்டும் பெரிய பேய்கள் தலையெடுத்தாடும் நிலைமை வரும்.”

- இவ்வாறு யாழ்ப்பாணத்தில் வைத்து ஒரு செய்தியை விடுத்திருக்கின்றார் நாட்டின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

பக்கம் 22



யாழ். இந்துவில் ஜனாதிபதி

## கறுப்புக் கொடி காட்டியோரை தேடிச் சென்றார் ஜனாதிபதி



“நான் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள வந்த போது எனக்கு எதிராகக் கறுப்புக்கொடி காட்டிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். நான் எனது வாகனத்தை விட்டு இறங்கி அவர்களிடம் சென்று அவர்களின் பிரச்சினையைக் கேட்டேன். அவர்கள் தமது கோரிக்கையை என்னிடம் கூறினார்கள். அந்த விடயம் குறித்துப் பக்கம் 22

## கறுப்புக் கொடி காட்டியோரை பேச அழைத்தும் வரவில்லையாம்!

### ஜனாதிபதி மைத்திரி ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ்ப்பாணம் வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வழியில் கறுப்புப் கொடி காட்டியோரை, தேடிச்சென்று உரையாடினார் அவர்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அருகே, கே.கே.எஸ்.வீதி – கல்லூரி வீதிச் சந்தியில் – ‘காலைக்கதிர்’ நாளிதழின் அச்சகத்துக்கு முன்பாக – பக்கம் 22

## பேய்கள் வந்து விடும் என்பதற்காகத் தமிழர்கள் தொடர்ந்தும் துன்பங்களைச் சுமக்க முடியாது!

### ஜனாதிபதிக்குச் சம்பந்தன் பதிலடி

கொழும்பு, ஒக்.15

“பேய்கள், பிசாசுகள் வந்து விடும் என்பதற்காகத் தமிழ் மக்கள் தொடர்ந்தும் துன்பம், துயரம், அவலத்தைச் சுமந்தபடி வாழ முடியாது. அவர்களது துயரத்துக்கு ஒரு முடிவு விரைந்து எட்டப்படவேண்டும். இனியும் அவர்கள் காவல் இருக்க முடியாது.”

– இவ்வாறு நேற்றிரவு குறிப்பிட்டார் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

‘தன்னைப் பலவீனப் படுத்தினால் பெரிய பேய்கள் தலையெடுக்கும்’ – என்று யாழ்ப்பாணத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளமை குறித்துக் கருத்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

பக்கம் 22

## மைத்திரி இனிமேலும் யாருடன் கூடி பேசப் போகிறார் என சுரேஷ் கேள்வி

யாழ்ப்பாணம், ஒக்.15

கூடிப்பேசுவோம் என மைத் திரி சொல்கின்றார். அநுராதபுரம் சிறையில் அந்தக் கைதிகள் உயிருடன் போராடுகின்றார்கள். 20 நாள்கள் கடந்து அவர்களது போராட்டம் தொடரும் நிலையில் இப்போது மைத்திரி யாருடன் கூடிப் பேசப்போகின்றார் என்பது தெரியவில்லை – இப்படித் தெரிவித்துள்ளார்

பக்கம் 22

## அரசியல் கைதிகள் விடுவிப்பில் இனிமேலும் தாமதிக்க முடியாது என்கின்றார் சம்பந்தன்

### திட்டவட்ட முடிவெடுக்க இரு நாள்களில் ஜனாதிபதியைச் சந்திக்கிறார்

கொழும்பு, ஒக்.15

“அரசியல் கைதிகள் அனைவரும் விரைந்து விடுவிக்கப்பட வேண்டும். இனிமேலும் அவர்களின் விடயத்தை இழுத்தடிக்க முடியாது. இப்பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

“ இந்த விடயம் குறித்து திட்ட வட்டமான – தீர்க்கமான – முடிவுகளை எடுப்பதற்காக இன்னும் இரண்டொரு நாள்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேசுவேன்.”

– இவ்வாறு நேற்றிரவு ‘காலைக் கதிர்’ நாளிதழுக்குக் கருத்துக் கூறினார் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன்.

கைதிகள் விடயம் ஒரு தொடர்கதையாக நீடிக்கின்றமை பக்கம் 22

## உண்ணாவிரதக் கைதிகளின் உடல் நிலைமை மிக மோசம்

### நேற்றிரவு அ’புரம் ஆஸ்பத்திரிக்கு

உண்ணாவிரதப் போராட்டதில் குதித்துள்ள அரசியல் கைதிகளது உடல்நிலை மீண்டும் இரண்டாவது தடவையாக மோசமடைந்ததமையை அடுத்து அவசர அவசரமாக அவர்கள் அநுராதபுரம் அரசினர் வைத்தியசாலையில் நேற்றிரவு சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களது உடல்நிலைமை கவலைக்கிடமாக இருந்ததால் சிறைச்சாலை அதிகாரிகள் பலாத்காரமாக அவர்களை மீண்டும் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்று சேர்த்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பக்கம் 22

# வடக்கில் அமைதியை குழப்பும் கூட்டமைப்பு

கொழும்பு, ஒக். 15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கில் அமைதியைக் குழப்பி வருகிறது என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன குற்றம்சாட்டியுள்ளார்.

பியகமவில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விளக்கமறியலில் உள்ள விடுதலைப் புலி சந்தேக நபர்கள் மோசமான குற்றங்களை இழைத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

அவர்களை விடுவிக்கக் கோரி வடக்கில் எத்தகைய போராட்டங்களை நடத்தினாலும், நீதித்துறை நடைமுறைகளின்றி அவர்களை விடுவிக்க முடியாது.



## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் குற்றச்சாட்டு!

வடக்கில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட முழு அடைப்புப் போராட்டம் அரசியல் நோக்கம் கொண்டது. அரசியல் நலனை அடைய முனையும் குழு வொன்றே இதற்குப் பின்னால் உள்ளது.

முழு அடைப்புப் போராட்டத்தை நடத்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் வடக்கிலுள்ள மக்களின் நாளாந்த வாழ்க்கையை சீர்குலைக்க முனைகின்றனர்.

கூட்டமைப்பு கூறுவது போல, அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை. சிறையில் உள்ளவர்கள் போரின் போது மோசமான குற்றங்களுடன் தொடர்புபட்டிருந்தார்கள் என்று விசாரணைகள் வெளிப்படுத்தியுள்ளன.

அவர்களை எந்த நீதித்துறை விசாரணைகளும் இன்றி விடுவிக்க முடியாது.

நீதிச் செயற்பாடுகள் தாமதமடைந்தால் அது நிச்சயம் தீர்க்கப்பட வேண்டும். எனினும், சிறைக்கைதிகள் நீதிச் செயற்பாடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டும்.

அதன் முடிவிலேயே விடுவிப்பா அல்லது தண்டனையா என்பது தீர்மானிக்கப் படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேசிய பாதுகாப்புக்கான நவீன அச்சுறுத்தல்களை முறியடிப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.


கொழும்பில் இடம்பெற்ற விமானப்படையின் கருத்தரங்கில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

தேசிய பாதுகாப்பு நாடுகளின் முதன்மையான நோக்கமாக இருக்கின்றது. ஏனைய நாடுகளுடன் எப்படி மிகச் சிறந்த பாதுகாப்பு ஒத்துழைப்பு இணக்கப்பாடுகளில் நுழையலாம் என்று தலைவர்கள் முனைகின்றனர்.

கொழும்பு விமான கருத்தரங்கு போன்ற சர்வதேச கருத்தரங்குகள், இத்தகைய ஒத்துழைப்புகளுக்கு பலமான அடித்தளமாக அமையும். சைபர் தாக்குதல்கள், ஆளில்லா விமானங்கள், நாச வேலை, தற்கொலைகள், தீவிரவாத உத்திகள், ஊடக பரப்புரைகள், கரந்தடித் தாக்குதல்கள், அச்சுறுத்தும் உத்திகள் என்பன இன்று பொதுவான பிரச்சினையாக உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொழும்பில் கடும் காற்றுடன் மழை!



கொழும்பு, ஒக். 15

நாட்டின் பல பகுதிகளிலும் சீரற்ற காலநிலை நிலவி வரும் நிலையில் கொழும்பின் பல பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது.

அந்த வகையில், நேற்றுக் காலை முதல் கொழும்பின் குறிப்பிட்ட சில பகுதிகளில் தொடர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. இந்த நிலையில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க வர்த்தகச் செயலருடன் அமைச்சர் மங்கள சமரவீர பேச்சு!

கொழும்பு, ஒக். 15

அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை நிதி அமைச்சர் மங்கள சமரவீர, அமெரிக்காவின் வர்த்தகச் செயலர் வில்பர் ரோஸை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் அரசாங்கத்தில், மூத்த அமைச்சர்களில் ஒருவரான வில்பர் ரோஸுடனான இந்தச் சந்திப்பில், இருதரப்பு உறவுகள், மற்றும் வர்த்தகத்தை விரிவுபடுத்து வது குறித்துக் கலந்துரையாடப் பட்டது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, மிலேனியம் சவால் நிதியத்தின் பிராந்திய பிரதி உதவித் தலைவர் பத்திமா சுமரையும் நிதி அமைச்சர் மங்கள சமரவீர சந்தித்துப் பேச்சு நடத்தினார்.



இதன்போது, அடுத்த ஐந்து ஆண்டுகளில் சிறிலங்காவுக்கு 700 மில்லியன் டொலர் உதவி மிலேனியம் சவால் நிதியத்தின் ஊடாக வழங்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைப் படைத் தளபதிகளைச் சந்தித்தார் அமெரிக்காவின் உதவிப் பாதுகாப்புச் செயலர்!





இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் தெற்கிழக்காசிய பிராந்தியத்துக்கான பிரதி உதவிச் செயலர், கேணல் ஜோசப் பெல்டர், இலங்கையின் பாதுகாப்பு உயர்மட்டத்தினருடன் பேச்சுக்களை நடத்தி வருகிறார்.

நேற்று முன்தினம் காலை இலங்கை இராணுவத் தலை மையகத்துக்குச் சென்ற கேணல் ஜோசப் பெல்டர், சிறிலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இருதரப்பு, பலதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங் கள் குறித்தும், தற்போதைய பாதுகாப்பு முன்னேற்றங்கள் மற்றும் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

அதேவேளை, இலங்கை கடற்படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவையும், கேணல் பெல்டர் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போது, கடல்சார் பாது காப்பு, இருநாட்டு கடற்படை களுக்கும் இடையில் உறவுகளை வலுப்படுத்தல், தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

# சுய தொழில் துறைகள் ஊடாக வாழ்வாதாரத்தை மேம்படுத்தல்

## டக்ளஸ் எம்.பி. வவுனியாவில் விளக்கம்

சுயதொழில் துறைகளை வளர்த்தெடுப்பதனூடாகவே மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற முடியும் என்றும் அதற்கேற்ற வகையில் மக்கள் துறைசார்ந்த தொழில்துறைகளை இனங்கண்டுகொள்ளவேண்டும் என்றும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியாவுக்குநேற்று விஜயம் மேற்கொண்டுள்ளடக்ளஸ்தேவானந்தா அங்குள்ள மக்களைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தேவைப்பாடுகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

அங்கு வருகை தந்திருந்த மக்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போது – மக்களின் பொருளாதார மேம்பாடு என்பது அவர்கள் சார்ந்து வாழுகின்ற கிராமங்களின் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் மூலமே மேம்பாடு கண்டு வருகின்றது. கிராமங்களில் கிடைக்கின்ற உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி அவற்றை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்திகளை மேற்கொண்டு சிறந்த முடிவுப்பொருள்களை உற்பத்திசெய்யவேண்டும்.

இவ்வாறு உற்பத்திசெய்யப்படும் பொருள்களுக்கு உரிய சந்தைவாய்ப்பினை பெற்றுக்கொள்ளும் போது அதனூடாகக் கிடைக்கப்பெறும் வருமானம் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு அமையும்.

எனவே சுயதொழில்வாய்ப்புக்களை பலப்படுத்தி வளப்படுத்தி கிராமங்களினதும் மக்களினதும் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் நாம் தொடர்ந்தும் அயராது பங்களிப்பைவழங்கதயாராக இருக்கின்றோம். – என்றும் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

இதன்போது கட்சியின் தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம், கட்சியின் வவுனியா மாவட்ட நிர்வாகசெயலாளர்திலீபன், கட்சியின் யாழ் மாவட்ட உதவி நிர்வாக செயலாளர் சிவகுரு பாலகிருஷ்ணன் ஆகியோரும் உடனிருந்தனர்.

# 10 வயதுச் சிறுமியை நள்ளிரவில் தூக்கிக் கடத்திச் செல்ல முயற்சி

## நெடுங்கேணியில் சம்பவம்

வவுனியா நெடுங்கேணி கீரிசுட்டான் கிராமத்தில் பத்துவயது சிறுமியை கடந்த வியாழன் இரவு கடத்திச் செல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் சிறுமியின் தகப்பனால் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றி தெரியவருபவை வருமாறு:-

ஒலுமடு வித்தியாலயத்தில் கல்விகற்றுவரும் பத்து வயதுச் சிறுமியை நேற்று முன்தினம் நடுநிசியில் வீட்டுக்குள் நுழைந்து மர்மநபரொருவர் கடத்திச் செல்ல முயற்சித்தவேளை வீட்டுக்கு வெளியே படுத்திருந்த தந்தையார் உஷாராகி அந்த மர்மநபரை விரட்டிச்சென்ற நிலையில் அந்த நபர் சிறுமியை கீழே போட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் குறித்து நெடுங்கேணி பொலிஸாரிடம் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. சம்பவம் இடம்பெற்ற வீட்டிற்குச் சென்ற பொலிஸார் அங்கு தேடுதல் மேற்கொண்டனர். சந்தேகநபரினது எனச் சந்தேகிக்கப்படும் ஒரு செருப்பை அவர்கள் கைப்பற்றினர். அவர்கள் விரிவான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சிறுமி கடந்த ஒருவருடத்திற்கு முன் 60 வயதுடைய சுப்பிரமணியம் என்பவரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட நிலையில் அந்த நபர் தற்போதும் விளக்க மறியலில் உள்ளார். அந்நபருக்கு நீதிமன்றம் பிணைவழங்க மறுத்துவருகிறது. தொடர்ந்து அச்சந்தேக நபர் சிறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை பெற்றோரை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

# மழையால் தமிழ்த் தினவிழா நேற்றுக் காலையில் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிரசன்னத்தில் நடைபெற ஏற்படாகியிருந்த தேசியத் தமிழ்த் தின விழாவின் காலை நிகழ்வுகள் மழை காரணமாக இறுதி நேரத்தில் இடம்மாற்றப்பட்டன.

கல்லூரிக்குள் இருந்த சபாலிங்கம் கலையரங்கில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்தக் கடைசி நேரத் திடீர் மாற்றத்தால் நிகழ்வில் பங்கு பற்ற வந்திருந்த மாணவர்கள், பொது மக்கள் இடையே குழப்பமும் விசனமும் ஏற்பட்டமை தவிர்க்க முடியாததாயிற்று.

பெரும் பணச் செலவில், தடல் புடலாக மைதானத்தில் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளை ஜனாதிபதி பங்குபற்றிய காலை நிகழ்வின்போது கைவிட வேண்டியதாயிற்று.

எனினும் நேற்று மாலை காலநிலை சீரடைந்தமையை அடுத்து மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான பந்தலில் தமிழ்த்தின விழா நிகழ்ச்சிகள் கோலாகலமாக நடைபெற்றன. இந்தியப் பேச்சாளர் சுகி.சிவத்தின் சிறப்புரை நேற்று இடம்பெற்றது.

# முன்னாள் எம்.பி. சூசை மறைவுக்கு சம்பந்தன் நேற்று இரங்கற் செய்தி

கொழும்பு, ஒக்.15

தமிழர்விடுதலைக் கூட்டணியின் மன்னார் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.எஸ். சூசைதாசனின் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனையடைகின்றேன். அன்னாருடன் நான் மிக நீண்டகாலமாகத் தொடர்புகளைக் கொண்டிருந்தமையோடு நாடாளுமன்றத்தில் அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பையும் பெற்றிருந்தேன்.

அனைவருடனும் அன்புடன் பழகும் சுபாவம் கொண்ட அவர் ஒரு சிறந்தபண்பாளராவார். தொழில்முறையில் பட்டயக்கணக்காளரான அவர், ஸாம்பியா நாட்டு அரசாங்கத்தின் நிதிக் கட்டுப்பாட்டாளர் என்னும் பெருஞ் செல்வம் ஈட்டக் கூடிய உயர் பதவியைச் சகல வசதி, வாய்ப்புக்களுடனும் வகித்திருந்தபோதும், தான் சார்ந்த தமிழ் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டுமென்ற உயர்ந்த குறிக்கோளுடன் அப்பதவியை விட்டுவிலகி, 1977ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பாகப் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியிருந்தார்.

நிதித்துறை சார்ந்த விவாதங்களின் போது அவர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகள் காத்திரமானவையாக அமைந்திருந்தன. நாடாளுமன்றத்திற்கு முதன் முறையாகத் தெரிவு செய்யப்பட்ட ஓர் உறுப்பினராக இருந்தபோதும், அவரது தகைமைகளை அங்கீகரிக்கும் வகையில் நாடாளுமன்றக் கணக்குக் குழுவின் தவிசாளராக அவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அப்பணியை மேற்கொண்டகாலத்தில் நேர்மையாகவும் அனைவரும் பாராட்டும் வகையிலும் அவரது செயற்பாடுகள் அமைந்திருந்தன.

மறைந்த சூசைதாசன் அவர்கள், தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் முயற்சியில் இறுதிவரைச் செயற்பட்டார். அத்தகு பெருமகனாரது மறைவு பொதுவாக இந்நாட்டுமக்களுக்கும் குறிப்பாகத் தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும்.

இவ்வேளையில் அன்னாரது ஆத்மா சமாதானத்தில் இளைப்பாறப் பிரார்த்திப்பதுடன், அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரது மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர் மற்றும் அவரை நேசித்த நல்லுள்ளங்கொண்டோர் அனைவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும், தமிழரசுக் கட்சி சார்பிலும், தமிழ் மக்கள் சார்பிலும் எனது சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். என்றுள்ளது.


# யாழ். மாவட்டசெயலகம், இலங்கை

## கணினி, இலத்திரனியல் மற்றும் மின்னிணைப்புப் பொருள்களுக்கு கேள்விப் பத்திரங்கள் கோரல்

யாழ். மாவட்ட செயலகத்தின் மற்றும் பிரதேச செயலகங்களின் அலுவலகத் தேவைக்காக 01.12.2017 - 31.05.2018 காலப்பகுதிக்கு பின்வரும் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக விலைமனு கோரப்படுகின்றது. இவை தொடர்பான விவரங்களையும், கேள்விப் பத்திரங்களையும் 17.10.2017 - 01.11.2017 ஆம் திகதிவரை யாழ். மாவட்ட செயலக பெறுகை அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். இந்தக் கேள்வி கோரல் தொடர்பான கேள்வியாளர்களுக்குரிய முற்கேள்வி விளக்கக் கூட்டம் 27.10.2017 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலக சிறிய மாநாட்டு மண்டபத்தில் (அறை இல. 17) நடைபெறும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை 02.11.2017 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கல் பொருளின் விவரத்தினைக் குறிப்பிட்டு தலைவர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அல்லது யாழ். மாவட்ட செயலக அரசாங்க அதிபரின் அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் 02.11.2017 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்குத் திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

01. Laptop Computers
02. Desktop Computers
03. UPSS
04. Printers
05. Photocopiers
06. Projectors
07. Projectors Screens (Electric and Normal)
08. Server, NAS and Online UPS
09. Monitors (Touch and Normal)
10. LED TVs
11. Fax machine
12. Digital Cameras
13. Barcode Printers and Readers
14. Network Items (Wireless Routers & Adapters, Switches, Cat 6 Cable)
15. CLI Land Phones
16. RAM Tester
17. Tab 7.0
18. ICT Spare Parts
19. Convertors and Cables
20. CCTV Camera System
21. Antivirus
22. Furniture (Wooden, Steel, MDF)

**நா.வேதநாயகன்,**
**தலைவர்,**
**கேள்விச் சபை,**
**மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## பேசிப் பேசியே காலத்தை இழுத்தடிக்கும் 'மைத்திரியிஸம்'

வடமாகாண மக்களின் பலத்த கருத்து எதிர் நிலைப்பாட்டுக்கு மத்தியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்துக்கு வந்து, நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, உரையாற்றி, வெற்றிகரமாகத் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்து விட்டுச் சென்று விட்டார்.

இங்கு கிளப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு சமயோசிதமாகத் தாம் பதிலளித்து சமாளித்துவிட்டார் என அவர் திருப்திப்படக்கூடும்.

ஆனால், அது அப்படி இல்லை என்பதுதான் மறுக்கப்பட முடியாத உண்மை.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வந்த ஜனாதிபதி, தமக்குக் கறுப்புக்கொடி எதிர்ப்புக் காட்டிய மக்களை நோக்கி, தாமே தமது வாகனத்தை நிறுத்திவிட்டு, இறங்கிச் சென்று உரையாடியமை பெரும் அரசியல் துணிச்சல் என்று சிலர் கூற முற்படுகின்றமையைப் பார்க்கும் போது சிரிப்புத்தான் வருகின்றது.

உண்மையில் அப்படிக் கறுப்புக்கொடி எதிர்ப்பைக் காட்ட முற்பட்ட மக்களையும் மக்கள் பிரதிநிதிகளையும்தான் உண்மையில் துணிச்சலுடையவர்கள் என்று மெச்ச வேண்டும்.

நாட்டின் ஜனாதிபதியின் வருகைக்காக இராணுவம், விசேட அதிரடிப்படை, பொலிஸார் எனப் பல்லாயிரம் காவற்றுறையினர் நிகழ்வு நடைபெறும் யாழ். இந்துக் கல்லூரி சூழல் முழுவதும் குவிந்து கிடக்க, நிகழ்ச்சி நடைபெறும் இடத்திலிருந்து ஐம்பது மீற்றர் தொலைவில் உள்ள சந்தியில் ஜனாதிபதி வரும் நேரம், அவருக்குக் காட்டுவதற்காகக் கறுப்புக் கொடியுடன் துணிச்சலாக - பகிரங்கமாக - திரண்டு நின்ற மக்களும் மக்கள் பிரதிநிதிகளும்தான் உண்மையில் தைரியசாலிகள்.

அதீத பாதுகாப்புடன் வந்த ஜனாதிபதி மைத்திரிபால வாகனத்தை நிறுத்திவிட்டு அவர்களை நோக்கி உரையாடச் சென்றமையில் அரசியல் துணிச்சல் ஏதும் இருப்பதாக எமக்குத் தோன்றவில்லை.

ஆனால், அப்படித் தாம் இறங்கிச் சென்று எதிர்ப்பாளர்களுடன் பேசியமையை ஒரு சமயோசித நடவடிக்கையாகக் காட்டி, அதன் மூலம் அந்த மக்கள் முன்வைத்த பிரச்சினையைத் திசை திருப்பும் வகையில் பின்னர் ஜனாதிபதி உரையாற்றியமையைப் பார்க்கும் போது அதில் அவரின் அரசியல் சாணக்கியம் சற்றுப் புலப்படவே செய்கின்றது.

தமக்கு எதிராகப் போராட்டம் செய்பவர்கள், அந்த விடயம் குறித்துத் தம்முடன் கொழும்பில் வந்து பேசித் தீர்க்கலாம் என்று கதை விட்டுச் சென்றிருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால.

இங்கு நமது மக்களின் பிரச்சினையே அதுதான். பேசிப் பேசியே காலத்தை இழுத்தடித்து மக்களை ஏமாளிகளாக்கியதன் விளைவுதான் நேற்றைய கறுப்புக் கொடி எதிர்ப்பு நடவடிக்கை. அதைத் தீர்ப்பதற்கும் இனியும் பேச்சுத்தான் என்றால் அழுவதா, சிரிப்பதா என்ற நிலைமைதான் இனி மிச்சம்.

சுமார் பதினைந்து ஆண்டுகள் மிகக் கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் முறையற்ற விதத்தில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் அதே சட்டத்தின் கீழ் தமக்கு அநீதி இழைக்கப்படுவதைத் தாங்க முடியாமல் - வேறு வழியின்றி - மார்க்கம் ஏதும் இல்லாமல் - தம்மைத் தாமே மாய்க்கும் வழியில், சாகும் வரையான உண்ணாவிரதத்தில் குதித்து விட்டார்கள் அரசியல் கைதிகள். அவ்வாறு உண்ணாவிரதத்தில் இருபது நாள்களைக் கடந்து விட்ட மூன்று கைதிகளின் நிலைமை மோசமான கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

ஏற்கனவே மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்து இந்த இரண்டரை வருடகாலத்தில் இவ்விடயம் குறித்துப் பல தடவைகள் - பல மட்டங்களில் - பேசியாகிவிட்டது.

இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டச் சீரழிவு குறித்துப் பல இராஜதந்திரிகள் அவருடன் பேசிவிட்டனர். ஐ.நா. உட்படப் பல சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள் பல நூறு தடவைகள் பேசிவிட்டனர். ஏன் - இந்த அரசியல் கைதிகளின் உறவினர்கள், காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் எனப் பலரும் பல்வேறு தடவைகள் அவருடன் விரிவாகக் கலந்துரையாடிவிட்டனர்.

அத்தனை பேச்சுகளின் பின்னரும் பலன் ஏதும் கிட்டாத நிலையில்தான் சிறை உண்ணாவிரதமும் நேற்றுமுன்தினம் மாகாணம் தழுவிய கடையடைப்பும், நேற்று கறுப்புக்கொடி எதிர்ப்பும் அரங்கேறின.

இவ்வளவு பேச்சுக்களுக்கும் பின்னர் - அந்தக் கைதிகளின் உடல்நிலை சோர்வுற்று அவர்கள் துவளும் கட்டத்தில் தள்ளாட - யாழ். வந்து தனது அரசியல் விவகாரங்களைக் கனகச்சிதமாக ஒப்பேற்றிவிட்டு, மேற்படி விடயம் குறித்து மீண்டும் பேச வாருங்கள் கொழும்புக்கு என்று 'நையாண்டித்தனமாக' அழைப்பு விடுக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தன்னைப் பலவீனப்படுத்தினால் 'பெரிய பிசாசு' தான் அதிகாரத்துக்கு வரும் என்றும் அவர் சொல்கிறார்.

அந்தப் பிசாசு வந்தாவது இந்தப் பிரச்சினைக்கு விரைந்து ஒரு தீர்வு வராதா என்பதும் -

பன்னீராயிரம் போராளிகளை ஏறத்தாழ ஒரே சமயத்தில் சமூகத்துக்குள் விடுவித்த ஒரு சக்தியால்தான் இது போன்ற விடயங்களுக்கு - பேசிப் பேசிக் காலத்தை இழுத்தடிக்காமல் - விரைந்து ஒரு முடிவைக் காண முடியும் என்பதும் -

தமிழர்களின் சிந்தனையாக மாறி வருகின்றது என்பதை ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டுவது நமது கடமையாகின்றது.

# இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டை மேற்கத்தைய நாடுகள் விலக்க வேண்டும்!

### பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கோரிக்கை

கொழும்பு, ஒக்.15

மேற்கத்தைய நாடுகள், இலங்கைக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள் என்ற நிலைப்பாடுகளை கைவிட வேண்டும் என்று பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் மைக்கல் மொரிஸ் பாரோன் நேஸ்பி பிரபு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கை தொடர்பாக பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போது இந்தக் கோரிக்கையை அவர் விடுத்தார்.

இலங்கையின் நல்லிணக்கம் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் பரிந்துரைகள் எந்தளவு நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை அளவிடும் வகையில் இந்த விவாதம் நடத்தப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரை அதற்கு தமிழர்களை கொலை செய்ய வேண்டிய அவசியம் இருக்கவில்லை என்று இதன்போது அவர் வாதிட்டார்.

நடைமுறை அரசு, இலங்கையில் நல்லிணக்கத்தை கொண்டுவரும் முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக பாரோன் பிரபு நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (க)

# ஐ.நா. விசேட அதிகாரிகளுடன் வடக்கு ஆளுநர் குரே சந்திப்பு!



கொழும்பு, ஒக்.15

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையிடும் அதிகாரி பெப்பலோ டி கிறீப் குழுவினருக்கும் வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேவுக்குமிடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது வடமாகாணத்தின் தற்போதைய நிலைமைகள், மக்களின் காணி விடுவிப்பு, அரசியல் நிலைமைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

நல்லிணக்கத்தினை ஏற்படுத்த முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பிலும் அனைத்து மக்களும் சமமாக வாழ்வதற்கு அரசு முன்னெடுத்துவரும் பணிகள் தொடர்பிலும் ஆளுநர் பெப்பலோ டி கிறீப் குழுவினருக்குத் தெளிவுபடுத்தினார். (க)

### வண்ணார்பண்ணை, நாவாந்துறையில்

# கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

விசேட டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் நாளை திங்களும் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமையும் அனுஷ்டிக்கப்படவுள்ளது என யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்திருக்கின்றார்.

டெங்கு நுளம்பு பெருகக் கூடிய சூழலை அகற்றி டெங்குத் தாக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாக்கும் முகமாகத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இதன் மூலமே அதிகரித்து வரும் டெங்கு நோய்த் தாக்கத்திலிருந்து விடுபட முடியும்.

இந்தத் தேசிய நிகழ்வு, அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புகள் வழங்கித் தங்கள் தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள்,



**களத்தரிசிப்பு நாளையும் நாளைமறுதினமும்**

அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச்சந்தைகள், மயானங்களின்சுற்றுச்சூழலைத் துப்புரவாகப் பேணுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த நாள்களில் பின்வரும் கிராம அலுவலர் பகுதிகளில் டெங்கு களத்தரிசிப்பு நடைபெறும்.

★16.10.2017 - வண்ணார் பண்ணை (J/100, 102, 98)
★17.10.2017 - நாவாந்துறை (J/88, 85, 84)

இந்தமுறை டெங்குப் பெருக்கத்துக்குச் சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்புக்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத் திய அதிகாரி அறிவித்துள்ளார். (இ)

**உலக மார்பகப் புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் ஐப்பசி - 2017**

சுய மார்பகப் பரிசோதனையை, ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட திகதியில் குறிப்பாக மாதாந்த மாதவிடாய் நின்று ஒரு வாரத்தின் பின்பு செய்து வரவும்.



Be Breast Aware

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

**16.10.2017**
**திங்கட்கிழமை**

நட்சத்திரம் : மகம் மு.ப. 8.11 வரை
திதி : துவாதசி பி.இ. 1.23 வரை
சுபநேரம் : 12.02 – 1.32 வரை
இராகுகாலம்: 7.32 – 9.02 வரை

# கேப்பாபிலவில் 111 ஏக்கர் காணிகள் டிசெம்பருக்குள் விடுவிக்கப்படும்!



## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 15

கேப்பாபிலவில் மிகுதியாக உள்ள 111 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கு 10 கோடியே 80 லட்சம் ரூபா இராணுவத்தி னருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க டிசெம்பர் மாதத்துக்குள் இந்தக் காணி கள் பொதுமக்களிடம் மீள ஒப் படைக்கப்படும் என்று சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு புனர் வாழ்வளிப்பு மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர்டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள் ளவை வருமாறு:-

26.07.2017 ஆம் திகதி எமது அமைச்சில் கேப்பாபிலவு காணிவிடுவிப்பு தொடர்பாக விசேட கலந்துரையாடல் எனது தலைமையில் நடை பெற்றது.

இந்தக் கூட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந் தன், நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண முதலமைச்சரின் பிரதிநிதியாக வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரன், திறைசேரி பிரதிநிதி, இரா ணுவத்தளபதியின் பிரதிநிதி, முல்லைத்தீவு இராணுவ அதி காரிகள், முல்லைத்தீவு அரச அதிபரின் பிரதிநிதி, கரை துறைப்பற்று பிரதேச செயலா ளர் மற்றும் கேப்பாபிலவு மக்களின் ஏழு பேரும் கலந்து கொண்டார்கள்.

முதல் கட்டமாக 243 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டது எனவும், எமது அமைச்சின்நிதி ஒதுக்கீட்டின் மூலம் (50 லட் சம்) 189 ஏக்கர் காணி விடு விக்கப்பட்டது எனவும் இராணு வத்தினர் இந்தக் கூட் டத்தில் உறுதிப்படுத்தினர்.

கேப்பாபிலவு மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான 111 ஏக்கர்காணியை மூன்றாம் கட்டமாக விடுவிக்க இராணு வத் தரப்பினர் இங்கு இணக்கம் தெரிவித்தார் கள்.

இந்தக் காணிக்குள் உள்ள தங்களது பாது காப்பு முகாம்களை அகற்றி மாற்றிடத்தில் அமைத்திட 14கோடியே 80 லட்சம் ரூபா தேவை என் பதை அறியத்தந்தமையின் நிமித்தம் இந்தத் தொகையை அமைச்சரவை பத்திரம் ஒன்றின் மூலம் பெற்றுத்தர நான் இணக் கம் தெரிவித்திருந்தேன்.

இந்த முடிவுக்கு இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட கேப்பாபிலவு பொதுமக்கள் தமது நன்றியைத் தெரிவித் தார்கள். 2017.08.01 அன்று என்னால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் 111 ஏக்கர் காணி கேப்பா பிலவில் விடுவிப்பதற்காக 14 கோடியே 80 லட்சம் ரூபா இராணுவத்துக்கு வழங்கு வதற்கு அமைச்சரவை அங்கீ காரம் அளித்தது.

கடந்த மாதம் இந்தத்தொகை இராணுவத்துக்கு வழங்கப் பட்டதற்கு இணங்க 111 ஏக் கர்காணியை பொதுமக்களுக்கு டிசெம்பர் மாதத்துக்குள் வழங்கு வதற்கான நடைமுறை வேலைத் திட்டங்களை இராணுவத் தரப்பு மேற்கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# தலதாவுடன் இணைந்து ரஷ்யா செல்லும் மாவை!



நீதி மற்றும் வெளி நாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்து கோரள ரஷ்யாவுக்கு பயணம் மேற்கொண் டுள்ளார்.

ரஷ்யாவின் புனித பீட்டர்ஸ் பெர்க் நகரில் இடம்பெறும் 137 ஆவது சர்வதேச நாடாளுமன்ற சங்கத்தின் பிரதான மாநாட்டில் பங்கேற்ப தற்காக அவர் அங்கு சென்றுள்ளார்.

இதன்போது, சர்வதேச ரீதியில் நாடாளுமன் றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தைப் பலப்படுத்துவது தொடர் பாக அவர் உரையாற்ற உள்ளார்.

அத்துடன், பெண் களின் பிரதிநிதித்து வத்தை அதிகரிப்பது தொடர்பான தீர்மானம் ஒன்றும் அங்கு நிறை வேற்றப்பட உள்ளது என அமைச்சரின் ஊட கப் பிரிவு குறிப்பிட்டுள் ளது.

இந்த மாநாட்டில் சபா நாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பி னர் மாவை சேனாதி ராசா மற்றும் நாடாளு மன்ற செயலாளர் நாய கம் ஆகியோரும் பங் கேற்க உள்ளனர் என நீதி மற்றும் வெளி நாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள் ளது.

# தேயிலை தூளில் கலப்படம் செய்த இருவர் பொலிஸாரால் கைது!



கொழும்பு, ஒக். 15

நீண்டகாலமாகக் கழிவு தேயிலை தூளுடன் நல்ல தேயிலை தூளை கலப்படம் செய்து வியாபார நட வடிக்கையில் ஈடுபட்டுவந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ள னர்.

இந்த சந்தேகநபர்களை வில் பிரட் பகுதியில் வைத்து நேற்று மாலை ஹட்டன் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஹட்டன் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைய டுத்து, ஹட்டன் - வில்பிரட்புர பகுதியில் வீடு ஒன்றில் கழிவு தேயிலையுடன், நல்ல தேயிலை தூளை கலப்படம் செய்து கொண் டிருக்கும் பொழுது சம்பவ இடத் துக்கு விரைந்த பொலிஸார் இவர் களைக் கைதுசெய்துள்ளனர்.

இந்த இடத்தில் நீண்டகாலமாக கழிவு தேயிலைத் தூளுடன் நல்ல தேயிலைகளை கலப்படம் செய்து வியாபார நடவடிக்கையில் ஈடு பட்டுள்ளமை பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளிலி ருந்து தெரியவந்துள்ளது.

அதேவேளை, இந்த இடத்திலி ருந்து 297 கிலோகிராம் கழிவு தேயிலை தூளுடன், தேயிலை தூளை சலிப்பதற்கு பயன்படுத் திய சல்லடை வகைகள், பொதி செய்யும்பொதிகள், அரைப்பதற்கு பயன்படுத்திய இயந்திரம் என் பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது, கலப்பட நடவடிக் கையில் ஈடுப்பட்ட உரிமையாள ரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், அவர் ஹட்டன் - வில் பிரட்புர பகுதியை சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசா ரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார், கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களான இருவரையும், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஹட்டன் பிரதான நீதிவான் நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்த உள்ளனர் என மேலும் தெரிவித் துள்ளனர். (க)

# 8 மாதம் கடந்தும் தீர்வின்றித் தொடரும் கேப்பாபிலவு மக்களின் போராட்டம்!



கொழும்பு, ஒக். 15

கேப்பாபிலவு மக்களின் தொடர் கவனவீர்ப்பு போராட்டம் தொட ரும் மழைக்கும் மத்தியிலும் இடம் பெற்று வருகின்றது.

எட்டு மாதங்களைத் தமது போராட்டம் எட்டியுள்ள போதும் தம்மை மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் எவையும் முன் வைக்கப்படவில்லை என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த 2008 ஆம் ஆண்டி லிருந்து அகதி வாழ்க்கை தொடர் கிறது எனத் தெரிவிக்கும் மக்கள், தமது பூர்வீக நிலத்தைக் கோரியே போராடுகின்றனர் எனக் குறிப் பிடுகின்றனர்.

எனினும், தமது போராட்டம் தொடர்பில் உரிய தரப்பினர் கவ னம் செலுத்தித்தீர்வை முன்வைக்க வேண்டும் எனவும் கேப்பாபிலவு பூர்வீக நில மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக் கது.

# தமிழ் மக்களுக்காகப் போராடக் கூடிய ஒரேயொரு சக்தி கூட்டமைப்பு மட்டுமே!




## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக். 15

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களுக்காகப் போராடக்கூடிய ஒரேயொரு சக்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இறுதியான - உறுதியான - தீர்வைப் பெற்றுக் கொள்ளப் பாடுபட்டு வருகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு ஊறணி சரஸ்வதி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்குள்ள ஒரேயொரு சொத்து கல்வி மட்டுமே. கடந்த காலத்தில் பல சோதனைச் சாவடிகளைத் தாண்டிச் சென்று கல்வி கற்கவேண்டிய சூழ்நிலை இருந்தது.

ஆற்றைக் கடந்து பல கஷ்டங்களுக்கு மத்தியில் செல்ல வேண்டிய நிலையிருந்தது. ஆனால், இந்த நிலைகள் இன்று மாற்றப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதிக்குப் பின்னர் இந்தச் சூழ்நிலையில் இன்னும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இன்று சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் பேசும் மக்களே இந்த நிலைமையை உருவாக்கி உள்ளோம். இந்தநிலைமையை விரும்பாத சிலர் தமிழ் மக்கள் மத்தியிலும் உள்ளனர்; தெற்கிலும் உள்ளனர்.

வடக்கு - கிழக்கில் ஒரு சுமுகமான சூழ்நிலையிருக்கக் கூடாது. ஒரு பதற்றமான சூழ்நிலை இருக்க வேண்டும். அதன் ஊடாகத் தாங்கள் அரசியல் நடத்த வேண்டும்.

வடக்கு - கிழக்கில் உள்ள சக்திகள் தங்களது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்ற வகையில் செயற்பட்டுவருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் வழி நடத்தல் குழுவுக்கு ஒரு தீர்வித் திட்டத்தை வழங்கியுள்ளது. அத்துடன், அதற்கொரு பின்னோட்டத்தையும் வழங்கியுள்ளனர்.

இணைந்த வடக்குக் கிழக்கில் அதிகாரப்பரவலாக்களுடன் கூடிய சமஷ்டிக்கு ஒத்ததான தீர்வு ஒன்று வரவேண்டும். அதன் மூலம் சகல அதிகாரங்களும் வழங்கப்படவேண்டும்.

மத்திய - மாகாணசபைகளுக்கு இடையே செனட் சபை ஒன்று இருக்கவேண்டும். இரண்டு சபைகளுக்கும் இடையே ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்க்கும் வகையில் இந்த செனட் சபை உருவாக்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகப் பல சக்திகள் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன. அதற்கு ஏற்றாற் போல் அரசுக்கு வெளியேயும் அரசுக்கு உள்ளேயும் சில சக்திகள் செயற்பட்டு வருகின்றன.

ஆனால், இலங்கை சிறைச் சாலையில் அரசியல் கைதிகள் என்று யாரும் இல்லை என நீதி அமைச்சர் கூறியுள்ளார். அப்படியென்றால் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் யார்? என அவரிடம் கேட்கவிரும்புகின்றேன்.

அரசியல் ரீதியாகத் தமக்கு உரிமை கிடைக்காது என்று போராடச்சென்றவர்களே இன்று அரசியல் கைதிகளாக உள்ளனர். சுமார் 130 பேர் பல சிறைச்சாலைகளில் வாடிக்கொண்டுள்ளனர். இவர்கள் அனைவரும் அரசியல் கைதிகளாவர்.

யுத்தம் முடிந்து எட்டு வருடங்கள் சென்ற பின்னரும் கைதிகளைச் சிறையில் வைத்திருக்கின்றமையை நான் எதிர்க்கின்றேன் என அமைச்சர் ராஜித சேனாரட்னகூறியுள்ளார். ஆனால், அரசியல் கைதிகள் இல்லை என்று நீதி அமைச்சர் சொல்கின்றார்.

இதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் மக்களுக்காகப் போராடக்கூடிய ஒரேயொரு சக்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நெல் திருட்டு; ஏறாவூர் வர்த்தகர் கைது!


மட்டக்களப்பு ஒக்15

செங்கலடியில் இயங்கிவரும் தனியார் வங்கிக்குச் சொந்தமான களஞ்சியசாலையில் இருந்து, ஐந்தரைக் கோடி ரூபா பெறுமதியான நெல்லைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் ஏறாவூரைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடன் ஒன்றுக்குப் பிணையாக இந்த நெல் மூடைகள் வங்கியின் களஞ்சிய சாலையில் வைக்கப்பட்டிருந்தன எனக் கூறப்படுகிறது.

முப்பத்தைந்து வயதான ஏறாவூர் வர்த்தகர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டார்.

## புதுக்குடியிருப்பில் பொதுமக்களின் காணிகள் இராணுவ மருத்துவப் பிரிவினரால் சுவீகரிப்பு!



முல்லைத்தீவு, ஒக். 15

புதுக்குடியிருப்பில் 682ஆவது படைப்பிரிவு இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளில் ஒரு பகுதியை இராணுவ மருத்துவப் பிரிவினர் சுவீகரிப்புசெய்யவுள்ளனஎனத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொதுமக்கள் தமது சொந்த நிலங்களை விடுவிக்குமாறு கோரி இந்த ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி ஜனநாயகரீதியில் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்தக்காணிகள் பொதுமக்களிடம் கையளிப்பது தொடர்பாக ஜனவரி மாதம் 28 ஆம் திகதி முல்லைத்தீவு இராணுவ கட்டளை அதிகாரியால் எழுதப்பட்ட (SFHQ (MLT)LOG157/2017) இலக்கக் கடிதம் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில் மூன்று படிநிலைகளில் காணிகள் விடுவிக்கப்படும் என்று முல்லைத்தீவு இராணுவக்கட்டளை அதிகாரி வாக்குறுதி அளித்திருந்தார்.

இந்தநிலையில், படிநிலை ஒன்றின்படி 7.75 ஏக்கர் காணிகள் இரண்டு வாரத்தில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளன.

மேலும் படிநிலை 2.3 இன் மூலம் விடுவிக்கப்படும் காணிகள் 3, 6 மாத கால இடைவெளியில் விடுவிக்கப்படும் என்று இராணுவ அதிகாரியால் பொதுமக்களுக்கு வாக்குறுதி வழங்கப்பட்டது.

இந்தநிலையில், இராணுவத்தால் விடுவிக்கப்பட வேண்டிய பொதுமக்களின் உறுதி காணிகளில் ஒரு பகுதியில், இராணுவத்தினரின் மருத்துவப் பிரிவைக் குறிக்கும் பதாகை ஒன்றும் நடப்பட்டுள்ளது எனப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆறு மாதங்கள் கடந்த நிலையிலும் இராணுவத்தினர் சொன்னபடி செய்யாத நிலையில் இந்தக் காணிகள் அடங்கிய இராணுவ முகாம் வேலியில் 'இராணுவத்தினருக்கு சொந்தமான சொத்து' என்றுஎழுதப்பட்டபதாகை ஒன்றையும் ஏற்கனவே வைத்துள்ளனர் என பொதுமக்கள் மேலும் குற்றம்சாட்டியுள்ளனர்.

## வெள்ளிப் பதக்கம் வென்றார் மண்டூர் கிராம மாணவன்!



மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள பிரதேசங்களும் மிகவும்வறுமையில்வாழ்பவர்கள் வசிக்கும் இடங்களாகும்.

அவ்வாறான பிரதேசங்களில் ஒன்றான மண்டூர் 40 ஆம் கிராமத்திலுள்ள அரசினர்தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த மாணவர் ஒருவர் பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டி கொழும்புதியகமமஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தப் போட்டியில் தரம் 8 இல் கல்வி பயிலும் பரமேஸ்வரன் குகேந்திரன் என்ற மாணவன் 14 வயதின் கீழ் குண்டு வீசுதல் நிகழ்ச்சியில் பங்குபற்றி 12.99 மீற்றர் தூரம் எறிந்து, இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இந்தச் சாதனையை நிலைநாட்டிய மாணவன் மட்டக்களப்பு களுதாவளைப் பிள்ளையார் ஆலய முன்றிலில் வைத்து மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு பட்டாசுவெடிகள் முழங்கவெப்வாகனத்தில் ஊர்வலமாக அவரது பாடசாலை வரை அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்த விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி தேசிய சாதனையை நிலைநாட்டி, பட்டிருப்பு கல்வி வலயத்துக்குப் பெருமை சேர்த்தமையையிட்டு அந்தப் பகுதியின் கல்விச் சமூகம், விளையாட்டு ஆர்வலர்கள் என அனைவரும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

## பணிப் புறக்கணிப்புக்குத் தயாராகிறது ஜே.வி.பி.!

கொழும்பு, ஒக். 15

சைட்டம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக எதிர்வரும் நாள்களில் சுகாதாரம் மற்றும் கல்வித் துறையுடன் இணைந்து மிகப் பெரிய பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை ஆரம்பிக்க உள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்கமான தேசிய தொழிற் சங்க மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தில் ஆசிரியர் மிகப் பெரியபணியைச்செய்யவேண்டும் எனத் தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின்தலைவர் கே.டி.லால் காந்த கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா, ஊழல் அரசியல் முறைக்குப் பதிலாகப் புதிய அரசியல் முறையை உருவாக்க வேண்டிய காலம் வந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் பொறுப்பு அமைச்சர் பைசர் முஸ்தபாவின் கைகளில்!



## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தும் சகல நகர்வுகளும் உரிய அமைச்சரின் கைகளிலேயே உள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க் கிழமை மாநகர, நகர, பிரதேச சபை திருத்தச்சட்டம் வர்த்தமானி அறிவித்தலுக்கு விடப்படும் என நம்புகிறார் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

19 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தல் ஆணைக்குழுவின் கூட்டத்தின் பின்னர் வேட்புமனுத் தாக்கல் மற்றும் தேர்தல் திகதிகள் வெளியிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாநகர, நகர, பிரதேச சபை திருத்தச்சட்ட பிரதிகளை நேற்று மாகாணசபை மற்றும் உள்ளூராட்சிச் சபை அமைச்சர் பைசர் முஸ்தபா, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவிடம் கையளித்திருந்தார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களைச் சந்தித்த ஆணைக் குழுத் தலைவர், இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல் சட்டமூலத்தை வெளிப்படுத்துவது அமைச்சரின் கடமையாகும். எமக்குக் காரணிகளைத் தெரிந்துகொள்ளவே இன்று சட்டமூல பிரதி கையளிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டமூலம் தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தலை வருகின்ற வாரம் செவ்வாய்க்கிழமை வெளியிடுவார் என நாம் நம்புகின்றோம்.

அவ்வாறு வெளியிட்டால் எதிர்வரும் 19 ஆம் திகதி எமது தேர்தல் திணைக்களக் கூட்டத்தின் போது வேட்புமனுத் தாக்கல் தொடர்பான அறிவித்தலை எப்போது அறிவிப்பது என்பது தொடர்பாகத் தீர்மானம் ஒன்றை எடுக்கமுடியும்.

வாக்காளர் பெயர் பட்டியலை நேற்றைய தினத்துடன் நாம் பூரணப்படுத்தியுள்ளோம். ஒவ்வொரு பிரதேச சபைகளுக்குமான பெயர்ப் பட்டியலை ஒதுக்கும் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க ஒரு வாரகாலம் தேவைப்படும். ஆகவே, இந்த மாத இறுதிக்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட வேண்டும். அவ்வாறு வெளியிடப்படும் என நாம் நம்புகின்றோம். ஆனால், என்னால் வாக்குறுதி வழங்க முடியாது. ஆணைக்குழுவின் கூட்டத்தின் போதே நாம் தீர்மானம் எடுக்க வேண்டும்.

எவ்வாறுஇருப்பினும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்த முடியும் என நாம் நம்புகின்றோம். அதற்கு முன்னர் தேர்தலை நடத்த முடியாது என்ற ஒரு பிரச்சினை உள்ளது. பாடசாலை பரீட்சைகளைக் குழப்ப முடியாது.

ஆகவே, டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி வரையில் எம்மால் தேர்தலை நடத்த இயலாது. விரைவில் தேர்தலை நடத்த வேண்டும் என்பதையே நாமும் எதிர்பார்க்கின்றோம். நாம் தேர்தலுக்குத் தடையான வர்கள் அல்லர்.

எனினும், இப்போது தேர்தல் நடத்துவதா தள்ளிப்போடுவதா என்பதை அமைச்சரே தீர்மானிக்க வேண்டும். பந்து அவரின் கையில் உள்ளது. 17 ஆம் திகதி எம்மிடம் ஒப்படைப்பார் என நாம் நம்புகின்றோம்.

எம்முடனான சந்திப்பின் போதும் அவர் இந்த வாக்குறுதிகளை வழங்கியுள்ளார். ஆகவே, சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

எனினும், நான்கு பிரதேசசபைகள் இன்னும் சிக்கலில் உள்ளன. புதுக்குடியிருப்பு மற்றும் கரைச்சி பிரதேச சபைகளுக்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றே சட்டமூலத்தில் உள்ளது. 2011 ஆம் ஆண்டு பெயர்ப் பட்டியலின் அடிப்படையில் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதனை நீக்கும் வர்த்தமானி அறிவித்தல் நாடாளுமன்றத்தில் வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயத்துக்குத் தீர்வுகண்ட பின்னரே அவற்றில் திருத்தங்களைக் கொண்டுவர முடியும். அதேபோல், நுவரெலியா மற்றும் அம்பகமுவ ஆகிய இரண்டு பிரதேச சபைகளையும் நான்கு பிரதேச சபைகளாக மாற்றியமைக்க வேண்டும் என்ற கோரிக்கை உள்ளது.

இவற்றை சரிவர செய்ய முடியுமாயின் அவற்றையும் சட்டமூலத்தில் இணைத்துக் கொண்டு செயற்பட முடியும். தேர்தல் தொடர்பாக அறிவித்தலை 75-60 நாள்களுக்குள் அறிவிக்க வேண்டும்.

ஆகவே, வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்ட பின்னர் 19 ஆம் திகதி எமது திணைக்களக் கூட்டத்தில் எப்போது வேட்புமனுத் தாக்கல் அறிவித்தல் விடுவது மற்றும் தேர்தல் வாக்கெடுப்பை எப்போது நடத்துவது என்பதை தீர்மானிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அம்பாந்தோட்டை ஆர்ப்பாட்டம்; 16 வயது சிறுவனும் சிறையில்?



அம்பாந்தோட்டையில் ஆர்ப்பாட்டத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் 16 வயது சிறுவன் ஒருவரும் இருக்கிறார் என அதிர்ச்சித் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

தென்னிலங்கையின் கடும் போக்குவாத பிக்குகள் அமைப்புக்களில் ஒன்றான ராவணா பலயவின் இணைப்பாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியால் இந்த ஆர்ப்பாட்டம் கடந்த வாரம் அம்பாந்தோட்டையில் முன்னெடுக்கப்பட்டது.

நீதிமன்றத் தடையுத்தரவையும் மீறி ஆர்ப்பாட்டம் செய்த மற்றும் கலகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 35 இற்கும் அதிகமானவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைத் தவிர, ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறுவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், தங்காலை சிறைச்சாலைக்கு இவர்களைச் சந்திப்பதற்காகச் சென்ற இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர், அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டார்.

இதன்போதே அவர்களில் 16 வயதுமிக்க சிறுவன் ஒருவரும் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றமையைக் கண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி மைத்திரியின் வேட்புமனு தொடர்பாக சட்டப் பிரிவுகளைக் கையிலெடுக்கிறார் மஹிந்தர்!

கொழும்பு, ஒக். 15

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட கட்சி தொடர்பிலும், அவரால் வழங்கப்பட்ட வேட்பு மனு தொடர்பாகவும் சட்டப் பிரிவுகளைக் கையிலெடுத்து அதிரடி ஆட்டத்தை ஆரம்பிக்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அன்னச் சின்னத்தில் 2015 ஆம் ஆண்டு போட்டியிட்ட புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவரும், லிற்றோ எரிவாயு நிறுவன முன்னாள் தலைவருமான சஷீல முனசிங்க தாய்வான் வங்கி மோசடியில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் எதிர்வரும் நாள்களில் எடுக்கவுள்ள அதிரடி நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக கொழும்பில் கூடவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணி அளவில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொழும்பு விஜேராமயவிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற உள்ளது.

சஷீல முனசிங்க ஒரு பிரித்தானியப் பிரஜை என்பது இரகசிய பொலிஸார் நடத்திய ஆரம்பக்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக அவரது கட்சி எவ்வாறு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும் என்பதுடன், அந்தக் கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளரது தற்போதைய பதவி செல்லுபடியாகும் தன்மை, சட்ட ரீதியில் காணப்படுகின்ற சிக்கல்கள் உள்ளிட்ட பல விடயங்களை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது சட்டத்தரணிகளுடன் ஆலோசனை நடத்தவுள்ளார் என அறியமுடிகின்றது.

அதேபோன்று, எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி, ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணி உள்ளிட்ட பல கட்சிகள் கூட்டாக போட்டியிடுகின்றமை தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது ஆராயப்படவுள்ளது.

## பர்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்தின் மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு!

*கொழும்பு, ஒக். 15*

*பர்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு மீதான விசாரணை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு உயர் நீதிமன்றத்தால் நேற்றுமுன்தினம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.*

*இலங்கை மத்திய வங்கியால் தமது நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிப் பத்திரத்தை இரத்துச்செய்வதற்கு எடுத்திருக்கும் தீர்மானத்தை இரத்து செய்ய உத்தரவிடுமாறு கோரி இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**சந்திராட்டமநாள்:** உத்தரம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1, 2 ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

**15.10.2017**
**21.10.2017**

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 22 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை திருதியைத் திதி மாலை 4.58 மணிவரை. பின்னர் சதுர்த்தி. நட்சத்திரம்: பரணி மாலை 3.58 மணிவரை. பின்னர் கார்த்திகை. மரணயோகம் மாலை 3.58 மணிவரை. பின்னர் சுபயோகம்.*

*பிறந்த நட்சத்திர வழிபாடு: பரணி.*

*ராகுகாலம்: மாலை 4.26 மணிமுதல் 5.55 மணிவரை.*

*சுபநேரம்: காலை 9.02 மணி முதல் 10.33 மணிவரை.*

*திவசம் செய்ய வேண்டிய திதி:- புரட்டாதி மாத வளர்பிறை திருதியை.*

**கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)**

## மேஷம்:

மேடராசியினருக்கு கவலையான வாரம். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். குடும்ப அமைதி குன்றும். உடல்நிலை பாதிப்படையும். உறவினர்கள், நண்பர்கள் பாராமுகமாக நடந்துகொள்வார்கள். வியாபாரத்தில் லாபம்கிடையாது. உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். சக ஊழியர்களுடன் வீண்பிரச்சினைகள் உண்டாகும். உயர் அதிகாரிகளின் கண்டனத்துக்கு ஆளாக நேரும். மாணவர்கள் உடல்சோர்வு அவதியால் கல்வியில் அக்கறையின்றிக் காணப்படுவார்கள். கொடுக்கல் வாங்கலில் பிரச்சினைகள் உண்டாகும்.

## ரிஷபம்:

இடப ராசியினருக்கு சம பலன்கள் உள்ள வாரம். பொருள்வரவு சுமாராக இருக்கும். அளவுக்கு மீறிய செலவுகளால் கடன்பட நேரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் குறைவடைவதால் வருமானமும் குறையும்.

பொருள் இழப்புகள் வேலைச்சுமை வந்து நீங்கும். வீண் அலைச்சல்களும் உண்டாகும். தொழிலாளர்கள் கடும் முயற்சியால் வேலைவாய்ப்புகளைப் பெறுவார்கள். கலைஞர்களுக்கு போட்டி அதிகரிப்பால் வாய்ப்புகள் குறையும். மாணவர்கள் கல்வியில் அதிக ஊக்கம் எடுக்க வேண்டும்.

## மிதுனம்:

மிதுனராசியினருக்கு ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. பண வரவு அதிகரிக்கும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உடல் நலம் சீராகும். உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

வேலையற்றோருக்கு வேலை கிடைக்கும். பெண்களுக்குத் தடைப்பட்ட திருமணம் ஒப்பேறும். மாணவர்கள் வெற்றிபெறவேண்டும் என்ற ஆர்வத்தில் படிப்பார்கள்.

உத்தியோகத்தில் மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்பட்டு அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள்.

## கடகம்:

கடகராசியினருக்கு மகிழ்ச்சியான வாரம் ஆகும். பணபலம் அதிகரிக்கும். நீண்டநாள் அலைச்சல்கள் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரித்துக் காணப்படும். வியாபாரம் ''ஓகோ'' என்று நடக்கும். சுயதொழிலில் முன்னேற்றமும் வருமானமும் அதிகரிக்கும். தாய்வழிச் சொத்துக்கள் வந்துசேரும். ஆடை, ஆபரணங்கள் சேரும். உடன்பிறந்தோர் ஆதரவாக இருப்பார்கள். பிரிந்திருந்த உறவுகள் பழையபடி சேர்வார்கள். உத்தியோகத்தில் உயர்வுகள் எதிர்பாராத வகையில் கிடைக்கும்.

## சிம்மம்:

சிங்கராசியினருக்கு சலனம் மிகுந்த வாரம். பிள்ளைகளால் வீண் செலவுகளும் அலைச்சல்களும் உண்டாகும். உடல் உபாதைகள் வந்துநீங்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். தொழிலில் வேலைச்சுமை அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்களுடன் அளவுடன் பழகவேண்டும். உத்தியோகத்தர்களின் தொழிலில் கவனக்குறைவு ஏற்படலாம். அவதானம் தேவை. மாணவர்கள்களுக்கு ஞாபகசக்தி குறைவால் கல்வியில் குழப்பம் ஏற்பட இடமுண்டு. வழக்கு விவகாரங்கள் தாமதமாகும். பயணங்களைத் தவிர்ப்பது நன்று.

## கன்னி:

கன்னி ராசியினருக்கு விருத்தியான வாரம். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை உணர்வு காணப்படும். வியாபாரம் அமோக வளர்ச்சி அடையும். உத்தியோகத்தர்களுக்குத் திறமையின் அடிப்படையில் உயர்வுகள் விரும்பியபடி கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் மேம்பாடடைவார்கள். பெண்களின் தொழில் முன்னேற்றமடையும். கலைஞர்கள் கலைத்தொழிலில் பிரச்சினைகள் ஏற்படும். தொழிலாளர் முதலாளிமார் நல்லுறவு விருத்தி அடையும் அரசியல் வாதிகளின் செல்வாக்கு மதிப்பு உயர் வடையும்.

## துலாம்:

துலாம் ராசியினருக்கு சமபலன்கள் உள்ளவாரம் பொருளாதாரம் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். எடுக்கும் கருமங்கள் முயற்சியின் மேல் அனுகூலமாகும்.

தேகசுகம் பாதிப்படை யும். திடீர்ச் செலவுகள் உண்டாகும். குடும்பத்தில் ஓரளவு அமைதி நிலவும். வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். தொழிலில் அலைச்சலும் அதிக உழைப்பும் காணப்படும். திட்டமிட்ட செலவு களும் அதிகமாகும். கொடுக்கல் வாங்கல் களில் எச்சரிக்கை தேவை.

## விருச்சிகம்:

விருச்சிக ராசியினருக்கு இணக்கமான வாரம் ஆகும். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் இணக்கமான நிலை காணப்படும். வியாபாரிகளுக்கு வெளிநாட்டு ஒப்பந்தத்தால் போதிய வருமானம் கிடைக்கும். தொழிலாளி முதலாளி நல்லுறவு வளரும். தொழிலதிபர்கள் தொழிலாளர்களின் ஒத்துழைப்பால் முன்னேற்றமடைவார்கள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளுக்கு கீழ்ப்பணிந்து நடப்பார்கள். சகோதர வழி உறவு பலப்படும். கொடுக்கல் வாங்கலில் இணக்கம் காணப்படும்.

## தனுசு:

தனுசு ராசியினருக்கு துயரமான வாரமாகும். வருமானம் குறைவடையும். குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் உண்டாகும். வியாபாரம் தேக்க நிலையில் இருக்கும். சுயதொழிலில் போட்டிகளும் பொறாமைகளும் அதிகரிக்கும். சகோதரவழியால் செலவுகள் உண்டாகும். விவசாயத்தில் பயிர் அழிவால் பெரும்நட்டமுண்டாகும். மாணவர்களுக்கு கல்வி ஊக்கம் குறையும். குடும்பங்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் சிலர் தொழிலில் கவனக் குறைவால் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாக நேரும்.

## மகரம்:

மகரராசியினருக்கு மத்திமமான வாரம். பொருளாதாரம் மத்திமமாக இருக்கும். வரவை மிஞ்சிய செலவுகள் உண்டாகும். தேகசுகம் பாதிப்படையும். மருத்துவச் செலவுகளும் உண்டாகும். குடும்பத்தில் அமைதி பேணப்படும். எண்ணிய கருமங்கள் தாமதாகம். சகோதர உறவு வலுவுடையதாக இருக்கும். பிரிந்திருந்தவர்கள் மீண்டும் ஒன்றுசேரும் சந்தர்ப்பம் உண்டாகும். வியாபாரத்தில் சம லாபம் காணப்படும். தொழிலில் பிரயாசை அதிகரிக்கும். வீண் அலைச்சல்களால் உடலில் சோர்வு உண்டாகும்.

## கும்பம்:

கும்பராசியினருக்கு மேன்மையான வாரம் ஆகும். பொருளாதாரம் ஏற்றமடையும். நீண்ட நாள் பிரார்த்தனைகள் நிறைவேறும். சோர்வு நீங்கி துடிப்புடன் செயற்படுவார்கள்.

வியாபாரத்தில் எதிர்பாராத மேலதிக லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வு என்பன கிடைக்கும்.

மாணவர்களுக்கு ஞாபக சக்தி அதிகரிக்கும். பெண்களின் சுயதொழில் அதிரடி வளர்ச்சி அடையும்.

## மீனம்:

மீன ராசியினருக்கு இனிமையான வாரம். நினைத்த காரியம் நிறைவேறும். பணப்புழக்கம் மன நிறைவைத்தரும். குடும்பத்தில் இனிமையான சூழல் நிலவும். சகோதரவழியால் நன்மைக் உண்டாகும். இதுவரை தீவிர நோயால் பாதிக்கப்பட்டவர்கள் நோய்நீங்கி ஆரோக்கியம் அடைவார்கள்.

சிலர் குடும்பத்துடன் சேர்ந்து இனிய சுற்றுலா செல்வார்கள். சிலர் விரும்பியபடி கௌரவப் பதவிகள் கிடைத்து மகிழ்ச்சி அடைவார்கள்.



# முழு உலகையே திகைக்க வைத்த புரட்சியாளர் சேகுவேரா

சே குவேரா அல்லது எல் சே என பொதுவாக அறியப்பட்ட எர்னெஸ்டோ குவேரா டி லா செர்னா (Ernesto Guevara de la Serna) (ஜூன் 14, 1928- ஒக்ரோபர் 9, 1967) ஆர்ஜென்டீனாவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒரு சோசலிசப் புரட்சியாளர், மருத்துவர், மார்க்சியவாதி, அரசியல்வாதி, கியூபா மற்றும் பல நாடுகளின் (கொங்கோ உட்பட) புரட்சிகளில் பங்குபற்றிய போராளி எனப் பல முகங்களைக் கொண்டவர்.

'சே' என்பது வியப்புச்சொல் ஆகும். இந்தச் சொல்லை ஆர்ஜென்டீனர்கள், குவேரனி இந்தியர்களிடமிருந்து பழகினர் என்று கருதப்படுகிறது. அந்த இந்தியர், 'எனது' என்ற பொருளில் பயன்படுத்துவர் என்று மானுடவியல் அறிஞர் கூறுவர். ஆனால், தென்னமரிக்கப் பாம்பாஸ் புல்வெளியினருக்கு வியப்பு, மகிழ்ச்சி, வருத்தம், நாணயம், ஆட்சேபம், அங்கீகாரம் போன்ற பல மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் சொல்லாக அமைகிறது. இடத்திற்கு ஏற்பவும், ஒலிப்புக்கு ஏற்றவாறும் அந்தச் சொல் பயனாகிறது. இந்தச்சொல்லின் மீதுள்ள பற்றால், கியூபா புரட் சியாளர்கள், 'சே' என்று செல்லமாக அழைத்தனர். அவரது பெற்றோர், அவரை 'டேட்டி' என்று செல்லமாக அழைப்பர்.

சே குவேரா 1928 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் நாள் ஆர்ஜென்ரீனாவில் உள்ள ரொசாரியோ என்னும் இடத்தில் பிறந்தார். ஸ்பானிய, பாஸ்க்கு, ஐரிசிய மரபுவழிகளைக் கொண்ட ஒரு குடும்பத்தில் ஐந்து பிள்ளைகளில் இவர் மூத்தவர். இவரது குடும்பம் இடதுசாரி சார்பான குடும்பமாக இருந்தமையால் மிக இளம் வயதிலே யே அரசியல் தொடர்பான பரந்த



நோக்கு இவருக்குக் கிடைத்தது. இவரது தந்தை, சோசலிசத்தினதும், ஜுவான் பெரோனினதும் ஆதரவாளராக இருந்தார். இதனால், ஸ்பானிய உள்நாட்டுப் போரில் ஈடுபட்ட குடியரசு வாதிகள் இவர் வீட்டுக்கு அடிக்கடி வருவர். இது சோசலிசம் பற்றிய இவரது கருத்துக்களுக்கு வழிகாட்டியது.

வாழ்க்கை முழுவதும் இவரைப் பாதித்த ஆஸ்மா நோய் இவருக்கு இருந்தும் இவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரராக விளங்கினார். இவர் ஒரு சிறந்த 'ரக்பி'விளையாட்டு வீரர். இவரது தாக்குதல் பாணி விளையாட்டு காரணமாக இவரை 'பூசெர்'என்னும் பட்டப் பெயர் இட்டு அழைத்தனர். அத்துடன், மிக அரிதாகவே இவர் குளிப்பதால், இவருக்கு 'பன்றி' என்னும் பொருளுடைய 'சாங்கோ' என்ற பட்டப்பெயரும் உண்டு.

தனது தந்தையிடமிருந்து சதுரங்கம் விளையாடப் பழகிய சே குவேரா, 12 ஆவது வயதில் உள்ளூர் சுற்றுப் போட்டிகளிலும்கலந்துகொண்டுள்ளார். வளர்ந்த பின்பும், பின்னர் வாழ்நாள் முழுவதும்

## சேகுவேராவின் நீண்ட புரட்சிப் பயணம்

★1928 ஜூன் 14 - பிறப்பு

★1945 - மருத்துவப்படிப்பை மேற்கொள்ளுதல்.

★1950 - உந்துருளியில் 3000 மைல் தூரம் ஆர்ஜென்டீனா முழுவதும் சுற்றிவரும் பயணத்தை ஆரம்பிக்கிறார்.

★1952 - தனது நண்பன் அல்பெர்த்தோ கிரனடாவுடன் பெரு, கொலம்பியா, வெனிசூலா, ஆகிய நாடுகளுக்கு பயணம் செல்லுகிறார். பெருவில் தொழுநோயாளர் குடியிருப்பில் பணிபுரிதல்.

★1953 ஜூன் 12 - மருத்துவராக பட்டம் பெறுதல்.

★ஜூலை 6 - லத்தீன் அமெரிக்கா பயணத்தை மேற்கொள்ளுதல்

★1955 ஜூலை- ஃபிடல் காஸ்ட்ரோவை சந்தித்தல். கரந்தடிப் போராளிகளுக்கான பயிற்சியை மேற்கொண்டிருக்கும் குழுவினருக்கு மருத்துவராக அவர்களுடன் இணைந்து பின் போராளியாகிறார். இங்குதான் அவரை முதன் முதலில் சே என அழைக்க ஆரம்பித்தார்கள்.

★ஒகஸ்ட் 18 - குவாதமாலாவில் தாம் சந்தித்த பெரு நாட்டைச்சேர்ந்த தீவிர அரசியலில் ஈடுபட்டிருந்தவரான ஹிடா காடியாவை மணந்துகொள்கிறார்.

★1956 பெப்ரவரி 15 - சே வுக்கும் ஹில்டாவுக்கும் ஹில்டா பிட்ரீஸ் குவேரா பிறக்கிறாள்.

★ஜூன் 24 சே மற்றும் ஃபிடல் காஸ்ட்ரோவுடன் 26 பேர் கைதுசெய்யப்படுகிறார்கள். சே 57 நாள்கள் சிறையில் இருக்கிறார். (18 ஆம் பக்கம் பார்க்க...)



நினைவு தினம் ஒக்ரோபர் 09

இவர் கவிதைகளின் மீது ஆர்வம் கொண்டிருந்தார். நெருடா, கீட்ஸ், மாச்சாடோ, லோர்க்கா, மிஸ்ட்ரல், வலேஜோ, வைட்மன் ஆகியோரது ஆக்கங்கள் மீது இவருக்குச் சிறப்பு ஆர்வம் இருந்தது.

குவேராவின் வீட்டில் 3 ஆயிரம் நூல்களுக்கு மேல் இருந்தன. நூல்களை வாசிப்பதில் அவருக்கு இருந்த ஆர்வத்துக்கு இது ஒரு காரணம் எனலாம். இவற்றுள், மார்க்ஸ், போல்க்னர், கைடே, சல்காரி, வேர்னே போன்றவர்கள் எழுதிய நூல்களில் அவருக்குச் சிறப்பான ஆர்வம் இருந்தது. இவை தவிர நேரு, காப்கா, காமுஸ், லெனின் போன்றவர்களது நூல்களையும், பிரான்ஸ், ஏங்கெல்ஸ், வெல்ஸ், புரொஸ்ட் ஆகியோருடைய நூல்களையும் அவர் விரும்பி வாசித்தார்.

அவரது வயது அதிகரித்த போது, அவருக்கு இலத்தீன் அமெரிக்க எழுத்தாளர்களான குயிரோகா, அலெக்ரியா, இக்காசா, டாரியோ, ஆஸ்டூரியாஸ் போன்றோருடைய ஆக்கங்களின் பால் ஈடுபாடு ஏற்பட்டது. செல்வாக்குமிக்க தனி நபர்களின் கருத்துருக்கள், வரைவிலக்கணங்கள், மெய்யியற் கருத்துக்கள் போன்றவற்றை எழுதிவந்த குறிப்புப் புத்தகத்தில் இவர்களுடைய கருத்துக்களையும் அவர் குறித்து வந்தார். இவற்றுள், புத்தர், அரிஸ்டோட்டில் என்போர் பற்றிய ஆய்வுக் குறிப்புக்கள், பேட்ரண்ட் ரஸ்ஸலின் அன்பு, தேசபக்தி என்பன தொடர்பான ஆய்வு, ஜாக் லண்டனின் சமூகம் பற்றிய கருத்துக்கள், நீட்சேயின் இறப்பு பற்றிய எண்ணங்கள் என்பனவும் அடங்கியிருந்தன. சிக்மண்ட் பிராய்டின் ஆக்கங்களாலும் கவரப்பட்ட சே குவேரா, அவரைப் பல வேளைகளில் மேற்கோள் காட்டியுள்ளார்.

1948 ஆம் ஆண்டில் மருத்துவம் படிப்பதற்காக சேகுவேரா, புவனஸ் அயர்ஸ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். ஆனால், 1951 ஆம் ஆண்டில் படிப்பில் இருந்து ஓராண்டு விடுப்பு எடுத்துக்கொண்டு, அவரது நண்பரான ஆல்பர்ட்டோ கிரெனாடோவுடன் சேர்ந்துகொண்டு, மோட்டார் ஈருளியில் தென்னமெரிக்கா முழுதும் பயணம் செய்தார். பெரு நாட்டில் அமேசன் ஆற்றங்கரையில் இருந்த தொழு நோயாளர் குடியேற்றம் ஒன்றில் சில வாரங்கள் தொண்டு செய்வது அவரது இந்தப் பயணத்தின் இறுதிநோக்கமாக இருந்தது. இந்தப் பயணத்தின் போது அவர் எடுத்த குறிப்புக்களைப் பயன்படுத்தி 'மோட்டார் ஈருருளிக் குறிப்புக்கள்' (American Popular Revolutionary Alliance) என்னும் தலைப்பில் நூலொன்றை எழுதினார். இது பின்னர் நியூயோர்க் டைம்ஸின் அதிக விற்பனை கொண்ட நூலாகத் தெரிவுசெய்யப்பட்டது. பின்னர், 2004 இல், இதே பெயரில் எடுக்கப்பட்ட திரைப்படம்7 விருதுகளையும் பெற்றது.

பரவலான வறுமை, அடக்குமுறை, வாக்குரிமை பறிப்பு என்பவற்றை இலத்தீன் அமெரிக்கா முழுதும் கண்ணால் கண்டதாலும், மார்க்சிய நூல்களின் செல்வாக்கும் ஒன்று சேர ஆயுதம் ஏந்திய புரட்சி மூலமே சமூக ஏற்றத் தாழ்வுகளுக்குத் தீர்வுகாண முடியும் என சேகுவேரா நம்பலானார். பயணத்தின் முடிவில், இவர், இலத்தீன் அமெரிக்காவைத் தனித்தனி நாடுகளாகப் பார்க்காமல், ஒட்டுமொத்தமான கண்டம் தழுவிய விடுதலைப் போர்முறை தேவைப்படும் ஒரே பகுதியாகப் பார்த்தார். எல்லைகளற்ற ஹிஸ்பானிய அமெரிக்கா என்னும் சேகுவேராவின் கருத்துரு அவரது பிற்காலப் புரட்சி நடவடிக்கைகளில் தெளிவாக வெளிப்பட்டது.

ஆர்ஜெண்டினாவுக்குத் திரும்பிய சேகுவேரா தனது படிப்பை முடித்து 1953 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மருத்துவ டிப்ளோமாப் பட்டம் பெற்றார்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா





**அவரது ''அமெரிக்கா முதலில்'' சித்தாந்தத்தை ஊக்குவிப்பதே ட்ரம்ப் உரையின் மையத்தில் இருந்தது**

அவரது ஒவ்வொரு பொது உச்சரிப்பிலும், ட்ரம்பின் பைத்தியக்காரத்தனமான கருத்துக்கள் கடந்த நவம்பரில் - அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பின்னர் - அமெரிக்காவின் செல்வச் செழிப்பை மீட்டமைப்பதற்காக என்று கூறப்படுபவைகளுடன் தொடங்கின. அவர் வாதத்தின்படி பார்த்தால், அது வோல் ஸ்ட்ரீட் பங்குச்சந்தைக் குமிழியிலும், 700 பில்லியன் டொலர் இராணுவ வரவு-செலவு திட்டத்தை நிறைவேற்றியதிலும் தான் வெளிப்பாட்டைக் கண்டன.

அவரது 'அமெரிக்கா முதலில்' சித்தாந்தத்தை ஊக்குவிப்பதே ட்ரம்ப் உரையின் மையத்தில் இருந்தது. அமெரிக்க ஜனாதிபதி தேசியவாத ஊக்குவிப்பை இந்தப் புவியின் எல்லாப் பிரச்சினைகளுக்குமான தீர்வாக முன்வைத்தார். ''மனித இன நிலைமைகளை உயர்த்துவதற்குத் தேசிய அரசு சிறந்த வாகனமாகத் திகழ்கிறது'' என்று அவர் ஓர் உரையில் பிரகடனப்படுத்தினார். அதில் 'இறையாண்மை அரசு' அல்லது 'இறையாண்மை' என்ற வார்த்தைகள் 21 முறை திரும்பத்திரும்பக் கூறப்பட்டன.

ஒவ்வொரு நாட்டு இறையாண்மைக்கும் அவர் ஆதரவு இருக்கின்றது என அறிவித்த அதேவேளையில், வோஷிங்டனின் கட்டளைகளுக்கு அடிபணிய மறுக்கும் எந்தவொரு நாட்டுக்கு எதிராகவும் அவர் நிர்வாகம் போர் தொடுக்கத் தயாராக இருப்பதையும் ட்ரம்ப் தெளிவுபடுத்தினார்.





**வெனிசூலாவையும் அவர் பிரத்யேகமாகச் சுட்டிக்காட்டினார். அதன் உள்நாட்டு நிலைமை ''முற்றிலுமாக ஏற்கத்தக்கதல்ல. நாம் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது'' என்றார்**

நெடுந்தொலைவுக்குப் பாயும் ஏவுகணைகள் மற்றும் அணுஆயுத சோதனைகளுக்காக வடகொரியாவை எரித்து சாம்பராக்க அச்சுறுத்தியதற்கு மேலாக, ஈரானுடனான 2015 அணுசக்தி ஒப்பந்தத்தை 'குழப்பமானது' என்று விவரித்து, அதை விட்டொழிக்கவும் அச்சுறுத்தினார். இந்த விதத்தில் அவர் அமெரிக்காவை ஈரானுக்கு எதிரான போர்ப் பாதையில் நிறுத்தினார். ஈரான் அரசை ஓர் 'ஊழல் சர்வாதிகாரம்' என்றும், ஒரு 'தான்தோன்றித்தனமான அரசு', ஒரு 'கொலைகார ஆட்சி' என்றும் அவர் விவரித்தார்.

வெனிசூலாவையும் அவர் பிரத்தியேகமாகச் சுட்டிக்காட்டினார். அதன் உள்நாட்டு நிலைமை 'முற்றிலுமாக ஏற்கத்தக்கதல்ல. நாம் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது' என்றார். அவர் தொடர்ந்து கூறுகையில், ''அந்த ஆட்சியைப் பொறுப்புணர்வுடன் கொண்டு வர, அமெரிக்கா முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வெனிசூலா மக்கள் மீது எதேச்சதிகார ஆட்சியைத் திணிக்க வெனிசூலா அரசு அதன் பாதையிலேயே பயணித்துக்கொண்டிருந்தால், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க நாங்கள் தயாராக உள்ளோம்'' என்றார்.

ஈரானிய வெளியுறவுத்துறை அமைச்சர் மொஹம்மத் ஜாவத் ஜரீஃப் ட்டுவிட் செய்தியில் விடையிறுத்து கூறுகையில், ''ட்ரம்பின் அர்த்தமற்ற வெறுப்பு உரை -21 ஆம் நூற்றாண்டு ஐ.நா. சபைக்குரியதல்ல- மத்திய காலத்துக்குரியது. ஒரு பதிலளிக்கும் அளவுக்குக் கூட மதிப்புடையதல்ல'' - என்றார்.



வெனிசூலா வெளியுறவுத்துறை அமைச்சர் Jorge Arreaza 'பலவந்த ஆட்சி மாற்றத்துக்கு' முயல்வதாக ட்ரம்பைக் குற்றஞ்சாட்டினார். அவர் ''அவரது சொந்த நாட்டையே ஆள முடியாத போது, உலகை ஆள விரும்புகிறார்'' என்பதையும் அவர் சேர்த்துக் கொண்டார்.

**அந்த உரையின் 'மெய்யியல்' உள்ளவாறே, பாசிச சித்தாந்தத்திலிருந்து தருவிக்கப்பட்டுள்ளது**

எல்லா நாடுகளது தேசிய இறையாண்மையை அவர் கையிலெடுக்கின்றமைக்கும், எந்தவொரு நாட்டுக்கு எதிராகவும் அமெரிக்க ஏகாதிபத்தியம் பொருத்தமாக உணர்ந்தால், குண்டு வீசவும், படையெடுக்கவும் அல்லது ஆட்சி மாற்றத்தை நடத்தவும் அதற்கு 'உரிமை' இருக்கின்றது என அவர் வலியுறுத்துகின்றமைக்கும் இடையிலான வெளிப்படையான முரண்பாட்டைக் குறித்து விவரிக்க ட்ரம்ப் எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

அவர் உரைக்கு முன்னதாக, வெள்ளை மாளிகையின் ஒரு மூத்த அதிகாரி செய்தியாளர்களுக்குத் தெரிவிக்கையில், அமெரிக்க ஜனாதிபதி அவர் உரையின் 'ஆழ்ந்த மெய்யியல்' குணாம்சத்தைச் சிந்திக்க நிறைய நேரமெடுத்துக்கொண்டது எனத் தெரிவித்திருந்தார்.


என்னவொரு பிதற்றல்கள்! அந்த உரையின் 'மெய்யியல்' உள்ளவாறே, பாசிச சித்தாந்தத்திலிருந்து தருவிக்கப்பட்டுள்ளது. உண்மையில் வடகொரியாவுக்கு எதிராக ட்ரம்ப் உச்சரித்த இந்த விதமான அச்சுறுத்தல் பேச்சை, அடோல்ப் ஹிட்லர் 1939 இல் நாடாளுமன்ற ஆட்சிப்பீடம் ஏறி ஐரோப்பிய யூதர்களை நிர்மூலமாக்க எச்சரித்ததற்குப் பின்னர், எந்தவோர் உலகத் தலைவரும் பேசியதில்லை.

ஐக்கிய நாடுகள் சபையில் ட்ரம்ப் முன்வைத்த ஒருவிதமான தேசியவாத கோட்பாடு, 1930 களில் ஹிட்லர் மற்றும் முசோலினியின் நிலைப்பாடுகளைத் தனித்துவமாக எதிரொலிக்கின்றன. லியோன் ட்ரொட்ஸ்கி, 'தேசியவாதமும் பொருளாதார வாழ்வும்' என்ற அவரது 1934 கட்டுரையில் எழுதினார்: ''இத்தாலிய பாசிசவாதம் தேசிய 'பரிசுத்தமான தன்னலத்தை' அதன் தனித்துவமான ஆக்கக்கூறாகப் பிரகடனப்படுத்துகிறது. ஜேர்மன் பாசிசம், மனித இனத்தின் வரலாறைத் தேசிய வரலாறாகக் குறைத்த பின்னர், தேசத்தை இனமாகவும், இனத்தை இரத்தமாகவும் குறைக்க முன்நகர்ந்தது... முசோலினி மற்றும் ஹிட்லரால் கண்டுபிடிக்கப்பட்ட, தேசத்தின் நித்திய மதிப்பு, 19 ஆம் நூற்றாண்டின் ஜனநாயகம் மற்றும் சோசலிசம் என்ற மதிப்புகளுக்கு எதிராகப் போலி மதிப்புகளாக இப்போது எதிரீடு செய்யப் படுகிறது.''

இந்த சமாந்தரங்கள் தற்செயலானவை அல்ல. ட்ரம்ப் உரையின் எழுத்துக்கள் கண்கூடாக ட்ரம்பின் பாசிசவாத மூத்த கொள்கை ஆலோசகரும் உரையாசிரியருமான ஸ்டீபன் மில்லரின் கைரேகைகளைத் தாங்கியுள்ளது. வரவிருக்கும் நாள்களில் இவர் ஹிட்லரின் *எனது போராட்டத்தின் (Mein Kampf)* ஒரு தொகுதியைச் சிறப்பாக எழுதுவார் எனத் தெரிகிறது.

1930 களில் இதேபோன்ற பிற்போக்குத் தேசியவாதத்தின் ஊக்குவிப்புத்தான் உலக முதலாளித்துவத்தின் சித்தாந்த வெளிப்பாடாக இருந்து, உலகப் போருக்குள் இறங்கச் செய்தது. இன்றும் அவ்வாறே உள்ளது.






(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

126




## அத்தியாயம் - VII

## யாழ்ப்பாணத்தில் போர் வெடித்தது

கட்டவிழ்ந்து வரும் இந்த ஆபத்தான சூழ்நிலை என்னையும் பாலாவையும் திகைப்பூட்டச் செய்தது. தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தம்மால் பாதுகாக்க முடியுமெனவிடுதலைப்புலிகளின்தளபதிகள் சிலர், அதீத தன்னம்பிக்கை தெரிவித்தபோதும் நானும் பாலாவும் அப்படிக் கருதவில்லை. யாழ்ப்பாணம்மீது ஒரு பெரும் படையெடுப்புக்கு அரசு தயாராகி வருகிறது என்பதை உணர்ந்த நாம், விடுதலைப் புலிகளின் படையணிகள் இதற்கு முகம் கொடுக்க முடியாதிருக்கும் என நாம் சரியாகவே நிலைமையை எடைபோட்டோம். பலாலிப் பெருந்தளத்தில் பிரமாண்டமான படைக் குவிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதேவேளை, குண்டு வீச்சு விமானங்கள், டாங்கிகள், கவச வாகனங்கள், பீரங்கிகள் என்ற ரீதியில் கனரக ஆயுதங்களும் பலாலியில் குவிக்கப்பட்டு வந்தன. இந்தப் பெரும் படைக் குவிப்பே எமக்கு அச்சத்தை ஏற்படுத்தியது.

இலங்கைத் தீவு முழுவதிலும் தனது இறையாட்சி நடைபெறுவதாகக் கூறி வந்த சிறிலங்கா அரசுக்கு யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் ஒரு தனியாட்சி நடத்துகின்றமை ஒரு சவாலாகவும் அவமானமாகவும் இருந்தது. சில அரச நிறுவனங்களைச் செயற்பட அனுமதித்த விடுதலைப் புலிகள், சட்டம் ஒழுங்கையும் நீதிபரிபாலனத்தையும் தமது பொறுப்பில் வைத்திருந்தமையுடன், ஊழலையும், சீர்கேட்டையும் தவிர்த்து, மக்களின் நலன்பேணும் நோக்குடன் அரச நிறுவனங்கள் அனைத்தையும் மேற்பார்வை செய்தனர். புலிகளின் ஆட்சியை சர்வாதிகார ஆட்சியென அரசு கண்டித்தபோதும், தமிழ் மக்களின் பேராதரவு புலிகள் பக்கமே இருந்தது. இதனால், கொழும்பு அரசு சினம் கொண்டது. அத்தோடு, சுயநிர்ணய உரிமை என்றும், அரசியல் சுதந்திரம் என்றும், தனியரசு என்றும் விடுதலைப் புலிகள் தமது கொள்கைப் பிரகடனங்களை அறிவித்து வந்தமையும் சிங்கள அரச தலைமைக்கு அங்கலாய்ப்பைக் கொடுத்தது. விடுதலைப் புலிகளின் நிர்வாகத் திறனும், இராணுவப் பலமும், படிப்படியாகத் தமிழர் தாயகத்தை மீட்டெடுக்கும் அவர்களது உறுதிப்பாடும், ஈற்றில் தனியரசு என்ற தமிழ் மக்களின் அபிலாஷையை மெய்ப்பித்துவிடலாமென சிங்களத் தலைமை அஞ்சியது.

எனவேதான், யாழ்ப்பாணத்தை இராணுவ ரீதியில் கைப்பற்றுவது சந்திரிகா குமாரதுங்க அரசின் முக்கிய குறிக்கோளாக அமைந்தது. இந்த இராணுவக் குறிக்கோள் நிறைவேறுமானால், வடக்கில் தமிழரின் மேலாதிக்கத்துக்குச் சாவு மணி அடிப்பதோடு புலிகளின் படை பலத்தையும் முறியடித்து விடலாம் என அரசு கருதியது. அத்தோடு, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிவிட்டால், தமிழரின் இராச்சியத்தை வெற்றிகொண்ட வீராங்கனையாக சிங்கள - பௌத்த பேரினவாதச் சக்திகள் மத்தியில் தமக்குப் புகழோங்கும் என்றும் சந்திரிகா எண்ணினார். சமாதான தேவதை என சர்வதேச உலகுக்கு வேடம் பூண்டு நடந்தபோதும் சந்திரிகா இராணுவப் பாதையைத் தேர்ந்தெடுத்தார். போர் மூலம் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துக் கைப்பற்றிவிட்டால், தமிழரின் சுதந்திர இயக்கத்தை முற்றாக ஒழித்துக் கட்டிவிடுவதுடன், சிங்கள தேசியவாதிகள் மத்தியிலும் ஆதரவை நிலைநாட்டிக் கொள்ளலாமென அவர் உறுதியாக நம்பினார். யாழ்ப்பாணப் படையெடுப்புக்குப் பொறுப்பதிகாரியாகத் தனது மாமனாரான ஜெனரல் ரத்வத்தையையும், களத் தளபதியாக ஜெனரல் ஜனகப் பெரேராவையும் சந்திரிகா நியமித்தார். ஜெனரல் ஜனக பெரேரா ஒரு கடும் போக்காளர். கிழக்கு மாகாண தளபதியாக இருந்த போது கூட்டுக் கொலைகள் புரிந்து பெருந்தொகையான தமிழர்களை





அழித்தவர். எண்பதுகளில் ஜே.வி.பி. கிளர்ச்சியை நசுக்க பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களைக் கொன்றொழித்தவர்.

பேச்சுகள் தோல்வியடைந்தமையை அடுத்து, யாழ்ப்பாணத்தில் மோதல்கள் நிகழலாமென மக்கள் எதிர்பார்த்தார்களேயன்றி, பெரிய எடுப்பில் பெரிய படையெடுப்புக்கு அரசு தயாராகிக் கொண்டிருப்பதை அவர்கள் அறியவில்லை. ஆகாய மார்க்கமாகவும், கடல் வழியாலும் பல்லாயிரக்கணக்கான படையினரும், கனரக ஆயுதங்களும் பலாலிப் பெருந்தளத்தில் குவிக்கப்பட்டு வந்தன. கிழக்கு மாகாணத்திலிருந்தும், தென்னிலங்கையிலிருந்தும் முப்பதாயிரத்துக்கும் நாற்பதாயிரத்துக்கும் மத்தியிலான துருப்புகள் அங்கு குவிக்கப்பட்டன எனப் பின்னர் அறிந்தோம். இடைக்கிடையே, பீரங்கி எறிகணைத் தாக்குதலும் விமானக் குண்டுவீச்சுகளும் நடைபெற்றனவாயினும், யாழ்ப்பாணத்தில் மக்களின் வாழ்க்கை இயல்பாகவே ஓடிக்கொண்டிருந்தது. பிரமாண்டமான அளவில், சிங்கள அரசு போர் ஆயத்தங்களைச் செய்துவருகிறது என்பதை மக்கள் அறியவில்லை. அப்படித்தான் சிங்கள இராணுவம் யாழ்ப்பாணம் மீது படையெடுத்தாலும், விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைப் பாதுகாப்பார்கள் என்றும் மக்களிடையே நம்பிக்கை நிலவியது. உண்மையைச் சொல்லப்போனால், யாழ்ப்பாணம் மீதான படையெடுப்புத் தொடர்பாக நானும் பாலாவும் அங்கலாய்ப்புடன் இருந்தோம். யாழ்ப்பாணம் மீது பெரும் படையெடுப்பு நிகழ்ந்தால் பெருமளவில் உயிரிழப்பும் பொருளழிவும் ஏற்படுமென நாம் அஞ்சினோம். மிகவும் அடர்த்தியாகத் தமிழ் மக்கள் வாழ்ந்து வரும் இப் பகுதியில் ஒரு பயங்கரமான மரபுவழி யுத்தம் வெடிக்குமானால், அதனால் ஏற்படக்கூடிய பேரழிவை எண்ணி நாம் திகிலடைந்தோம். தமிழீழ மக்களின் பண்பாட்டுத்தலைநகரான யாழ்ப்பாணம் சிங்கள இராணுவ ஆதிக்கத்தின் கீழ் வீழ்ந்துவிடும் சாத்தியம் தொடர்பாகவும் நாம் கவலையடைந்தோம்.

1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் திகதி யாழ்ப்பாணம் மீதான படையெடுப்பின் முதலாவது கட்டம் ஆரம்பமானது. 'முன்னோக்கிய பாய்ச்சல்' என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையில் விமானத் தாக்குதல், பீரங்கி எறிகணைத் தாக்குதல் ஆகியவற்றின் உதவியுடன் பல்லாயிரம் படையினர், யாழ்ப்பாண நகரை நோக்கி இரு முனைத் தாக்குதலை மேற்கொண்டனர். ஒரு படைப் பிரிவு, பலாலியிலிருந்து தெல்லிப்பழை ஊடாக அளவெட்டி, சண்டிலிப்பாய் நோக்கியும், மற்றைய படைப் பிரிவு, மாதகலில் இருந்து பொன்னாலைக் கடலோரமாக வட்டுக்கோட்டை நோக்கியும் நகர்ந்தன. விடுதலைப் புலிகளிடமிருந்து மட்டுப்படுத்தப்பட்ட எதிர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையால், சிங்களப் படையணிகள் நான்கு நாள்களுக்குள் வட்டுக்கோட்டையினதும் சண்டிலிப்பாயினதும் எல்லைகளை நெருங்கின. சிங்கள இராணுவம் மகத்தான போர்ச் சாதனைகளைப் புரிந்து வருகிறது எனக் கொழும்பு ஊடகங்கள் அரசுக்குப் புகழாரம் சூட்டின. யாழ்ப்பாணப் படையெடுப்பின் முதலாவது கட்டம் வெற்றியீட்டி வருவதைக் கண்ட யாழ்ப்பாண மக்களிடம் பீதியும் பதகளிப்பும் ஏற்பட்டது. சிங்களத்தின் படையெடுப்பை முறியடிப்பதற்காகப் பெரியதோர் எதிர்த் தாக்குதலை மேற்கொள்ள ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன எனப் பிரபாகரன் தன்னிடம் கூறினார் எனப் பாலா என்னிடம் கூறினார். அப்போதுதான் எனக்கு மன ஆறுதல் ஏற்பட்டது.

1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் திகதி 'புலிப் பாய்ச்சல்' என்ற பெயரில் விடுதலைப் புலிகள் இயக்கம் எதிர்த்தாக்குதல் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. அளவெட்டியிலும் சண்டிலிப்பாயிலும் ஊடுருவி நின்ற சிங்கள இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகளின் கொமாண்டோ படையணிகள் தாக்குதல்களை நிகழ்த்தி எதிரிக்குப் பெரும் உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தின. இந்தச் சண்டைகளின்போது சிங்கள விமானப் படையின் 'புக்காரா' குண்டுவீச்சு விமானம் ஒன்று ஏவுகணையால் சுட்டு வீழ்த்தப்பட்டது. அதேசமயம், காங்கேசன்துறை துறைமுகத்துக்குச் சமீபமாக, 'எடித்தோரா' என்ற போர்க்கப்பலும் கடற் கரும்புலிகளால் தகர்த்து கடலில் மூழ்கடிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் உக்கிரமான எதிர்த் தாக்குதலுக்கு முகம்கொடுக்க முடியாது திணறிய அரச படைகள் இறுதியில், தமது இராணுவ நடவடிக்கையைக் கைவிட்டு தமது தளத்துக்குப் பின்வாங்கின.

(தொடரும்...)

# விழிப்புலனற்றோரின் ஒளி விளக்காக வெண் பிரம்பு

லயன் சி.ஹரிகரன்,
செயலாளர்,
சுன்னாகம் லயன்ஸ் கழகம்.

விழிப்புலனற்றவர்கள் தாம் நடந்து செல்வதற்கு முற்காலத்தில் மூங்கில் தடியை அல்லதுமரத்தின்சிறுதடியை உபயோகித்தனர். இதனால் பாதையில் எதிர்ப்படும் தடைகளை அவர்களால் உணரக்கூடியதாக இருந்தது.

இரண்டாவது உலக மகா யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வருவதற்கு அமெரிக்கா ஜப்பானில் ஹிரோஷிமாவிலும், நாகசாகியிலும் அணுகுண்டை வீசியது உலக வரலாற்றில் மறக்க முடியாத ஒரு கறை படிந்த நிகழ்வாக அது அமைந்தது. இன்றும் கூட இப்பகுதிகளில் பிறக்கின்ற குழந்தைகள் பல குறைபாடுகளுடனேயே பிறக்கின்றமையை நாம் செய்திகள் மூலம் அறிகின்றோம். அவற்றுள் முக்கியமான ஒன்றாக விழிப்புலன் அற்றோரின் நிலையையும் காண்கின்றோம்.

இவ்வாறு பெருமளவிலானோர் ஜப்பானில் பார்வை இழக்கவே அதற்கான சிகிச்சையை பெற்றுக்கொள்வதற்காக அவ்வேளை ஜப்பானில் பிரபல்யமாக இருந்த வைத்தியர் ஹேயை மக்கள் நாடினர்.

தம்மை நாடி வந்தோரில் கூடியளவிலானோரின் பார்வையை வைத்தியரால்பெற்றுக்கொடுக்கமுடியவில்லை. இத்தகையதொரு பரிதாபகரமான நிலைமையை எதிர்நோக்கிய வைத்தியர் ஹேய், மனிதர்கள் என்ற வகையில் அவர்களையும்சமூகத்தில்நடமாடவைப்பதற்கு வழிதேடினார். அதன் பிரதிபலனாக உருவானதே வெள்ளைப் பிரம்பாகும்.

வைத்தியர் ஹேயின் சிந்தனையில் விசையும் திசையும் உதித்தது. ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு ஆபத்து ஏற்படாத வண்ணம் நகர்வதற்குப் பயன்படுத்தக்கூடிய முறையில் வெள்ளைப் பிரம்பு மகத்துவம் பெற்றது.

வெள்ளைப் பிரம்பைப் பயன்படுத்துவோர் விழிப்புலனற்றோர் ஆவர். இந்த விழிப்புலனற்றோர், ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு நகரும்போது அல்லது நடமாடும்போது அவர்களுக்கு பக்கத்துணையாக தாம் நகரும் இலக்கை நோக்கிய பயணத்துக்கும் வெள்ளைப் பிரம்பைப் பயன்படுத்துகின்றனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, விழிப்புணர்வுஉள்ளோர்வெள்ளைப் பிரம்பை பயன்படுத்தி வரும் ஒருவரை விழிப்புலனற்ற ஒருவர் என்று இனம் கண்டு கொள்ளவும், அவர்களுக்கு உதவுவதற்கும் வெள்ளைப்பிரம்பு உதவுகின்றது.

இந்த இயந்திர யுகத்தில் தங்களுக்கென ஒரு துணையாக இந்த வெள்ளைப் பிரம்பை உருவாக்கி அதனை விழிப்புலனற்றோரினது கையிலேயே துணையாகத் தந்து எவரது உதவியுமின்றி தாமாகவே நகருவதற்கு இவ் வெள்ளைப் பிரம்பு ஒரு மனிதனாகவே உதவுவது விழிப்புலனற்றோருக்குக் கிடைத்துள்ள ஒரு வரப்பிரசாதமாகும். அண்மையில் அமெரிக்காவில் நவீன இலத்திரனியல் பிரம்பு கண்டு பிடிக்கப்பட்டமையும் ஒருவரப் பிரசாதமே.

விழிப்புலனற்றோரைக் கௌரவிக்கவும், அவர்கள் பற்றிய உணர்வுகளை ஏற்படுத்தவும் அத்தகையோருக்கு உதவிகளை வழங்குவதற்கும் ஒக்ரோ பர் மாதம் 15 ஆம் திகதி சர்வதேச விழிப்புலனற்றோர் தினம் அல்லது வெள்ளைப் பிரம்பு தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

உலக சுகாதார ஒழுங்கமைப்பின் புள்ளி விவரத் தகவலின்படி உலகில் ஏறத்தாழ 390 லட்சம் பேர் பார்வையற்றவர்களாக இருக்கின்றனர். இதில் 82 சதவீதமானோர் ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள். 18 சதவீதமானோர் ஐம்பது வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள். பிறவியிலேயே பார்வையின்றிப் பிறப்பவர்கள் மிகச் சிலரே.



எனினும் பலர் தம் குழந்தைப் பருவத்தில் தவிர்க்கப்படக் கூடிய காரணிகளால் பார்வையை இழக்கின்றனர். பிள்ளைகளில் போசணைக் குறைபாடே பார்வைக் குறைபாட்டுக்கான பிரதான காரணியாக இருக்கின்றது. வளர்ந்தவர்களில் நீரிழிவு நோய், உயர் குருதி அமுக்கம், விழித்திரை மையத்தின் சிதைவு என்பன குருட்டுத் தன்மையை ஏற்படுத்தும் முக்கிய காரணிகளாகும்.

விழிப்புலனற்றோர் படிக்க உதவும் முறையை 1929 இல் விழிப்புலனற்றோருக்கான எழுத்து முறையொன்றை லூயிஸ் பிரெய்ல் கண்டு பிடித்தார். பிரெயில் எழுத்து விழிப்புலனற் றோருக்கு கல்வியைத்தொடர்வதற்கு வரப்பிரசாதமாக அமைகிறது.



பிரெயில்என்றஎழுத்து முறை மூலம் இலட்சக் கணக்கான விழிப்புலனற்றோர் படித்து பட்டதாரிகளாகவும் கலாநிதிகளாகவும் பேராசிரியர்களாகவும் மேதைகளாகவும் நாவலாசிரியர்களாகவும் இசையமைப்பாளர்களாகவும் சட்டத்தரணிகளாகவும்முன்னேறியுள்ளனர். ஏன் உதாரணத்துக்கு வாழ்வகத்தின் மதிப்பார்ந்த நிர்வாகி ஆர். இரவீந் திரன் அவர்களையே நாம் குறிப்பிடலாம். அவர் ஒரு பட்டதாரியாகி, பட்ட மேற்படிப்புக்களை நிறைவுசெய்து இன்று எத்தனையோஆசிரியர்களைஉருவாக்கும் திறமைகொண்ட விரிவுரையாளராகக் காணப் படுகின்றார்.

இதைவிட, அவர் ஓர் எழுத்தாளர். சிறந்த கணிணி அறிவு படைத்தவர். அவரது ஞாபகசக்தி, கிரகிக்கும் தன்மை, பேச்சாற்றல் என்பவை அவருக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட தனிக் கொடைகள்.

இன்று கண்பார்வை அற்றவர்களைக் குருடர் என்று சமூகத்தில் ஒதுக்கி வைக்கின்ற காலம் மலையேறிவிட்டது. அவர்கள் மாற்றுத் திறனாளிகள் என்று அழைக்கப்படுகின்றார்கள். அவர்கள் சாதனை நாயகர்களாகத் திகழ்கின்றார்கள். புலன்கள் ஒழுங்காக இருப்பதிலும் பார்க்க, இருக்கின்ற புலனை சரியாகப் பயன்படுத்தத் தெரிதல் வேண்டும். இவர்கள் புலன் குறைபாடுடையதாயினும் சோர்ந்துவிடாமல் சாதனை படைக்கின்றார்கள்.

இன்று சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினமாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.



இயற்கையாகவோ அன்றேல் விபத்துக்கள், கவனவீனங்கள், அறியாமைகள் காரணமாகவோ ஏற்படக்கூடிய பார்வைக் குறைபாட்டை மனிதன் என்ற வகையில் எம்மால் குறைவான நிலையில் மதிப்பிடுகின்றமை தவறாகும். விழிப்புலனற்றோர்களும் மனிதப் பிறவிகளே. அவர்களுக்கும் சமூகத்தில் சமவுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே மனிதாபிமான நிலை.

சமூகத்தில் அவர்களாலும் உயர்ந்த நிலைக்கு வரமுடியும். சமூகத்தில் அவர்கள் குறை பிறவிகள் அல்லர் போன்ற எண்ணக்கருக்களை விதைப்பது தொடர்பாகத் தேசிய, சர்வதேச ரீதியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்காக வேண்டி பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதற்காகவே லயன்ஸ் கழகத்தினர் வெள்ளைப் பிரம்பு தினத்துக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார்கள்.

விழிப்புலனில் ஏற்படக்கூடிய குறைபாடு காரணமாக பார்வையை இழந்துள்ளோரை கௌரவிக்கவும் அவர்கள் பற்றிய உணர்வுகளை ஏற்படுத்தவும் அத்தகையோருக்கு உதவிகளை வழங்குவதற்கும் வெள்ளைப் பிரம்பு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

விழிப்புலனற்றோர்களை சமுதாயத்தினர், ஏனையவர்களைப் போன்று அங்கீகரித்து சமத்துவம் கொடுப்பதன் மூலம் விழிப்புலனற்றோர்களிடத்தில் தன்னம்பிக்கையையும் தனித்திறன்களையும் வளர்க்க முடியும் என்பதை சமுதாயம் உணர வேண்டும்.

1931 ஆம் ஆண்டு அமெரிக்காவில் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாநாட்டில் வெள்ளைப் பிரம்பு கண்பார்வை அற்றவர்களின் அடையாளச் சின்னம் எனப் பிரகடனம் செய்யப்பட்டதுடன் இதற்கான சட்ட அங்கீகாரமும் வழங்கப்பட்டது.

உலகெங்கும் பரந்து வாழும் இலட்சக் கணக்கான விழிப்புலன் அற்ற மக்களுக்கு உதவும் நோக்கத்துடனும், மக்களின் கவனத்தை ஈர்த்து சமூக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடனும் ஆண்டு தோறும் ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் நினைவுகூரப்படுகிறது.

1969 ஆம் ஆண்டு சர்வதேச விழிப்புலனற்றோர் சம்மேளனம் கொழும்பில் நடத்திய சர்வதேச மாநாட்டில் இது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

விழிப்புலனற்றவர்களின் வாழ்வில் வழிகாட்டும் ஒளிவிளக்காக வெண் பிரம்பு கருதப்படுகிறது. அவர்களின் வழிநடைக்கான ஊன்றுகோலாகவும், உதவு சாதனமாகவும், அடையாளச் சின்னமாகவும் வெள்ளைப் பிரம்பு விளங்குகின்றது.

# வாழப்பிறந்தவர்கள் நாம்!

உலகெங்கிலும் பரந்து வாழும் விழிப்புல வலுவிழந்த உடன்பிறப்புக்களே! உங்களோடு உரையாடஇ உறவாடக் கிடைத்த இந்த உன்னத வாய்ப்பினை வழங்கிய ஊடகத்துக்கு முதற்கண் எனது உளமார்ந்த நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கின்றேன்.



மனித வாழ்க்கை மகத்தானது அர்த்தம் பொதிந்தது ஆச்சரியம் நிறைந்தது. இந்த வாழ்வின் அம்சங்கள் அனைத்துமே நம் அனைவர்க் கும் சொந்தமானவை. இந்த மண்ணில் பிறந்த நாம் அனைவரும் வாழப் பிறந்தவர்களே. நமது வாழ்க்கைப் பாதையை நாமே வகுத்துக் கொள்ளவேண்டும் அதில் நாமே நடை பயிலவும்வேண்டும்.

தடைகள் வருகின்றபோது துணிச்சலோடு எதிர்கொள்பவர்களுக்கும் தவறி விழுகின்றபோதெல்லாம் மேலும் மேலும் வீரியத்தோடு எழுந்துகொள்பவர்களுக்குமே வாழ்க்கை வசப்படும். சாதனைகள் கைவரப்பெறும். உயர்ந்த இலட்சியங்களோடும் உன்னத உறுதியோடும் வாழ்க்கைப் பாதையில் அடியெடுத்து வைக்கின்ற எவரும் தோல்வி காண்பதுமில்லை துவண்டுபோவதுமில்லை.

யாதேனுமொரு செயலை மேற்கொள்ள உங்களால் முடியாது என்று யாராவது உங்களைப் பார்த்துக் கூறினால் அது அவர்களது தனிப்பட்ட அபிப்பிராயம் மட்டுமே. ஒருபோதும் அது உண்மையாகிவிடாது என்பதை உறுதியாக நம்புங்கள்.'என்னால் முடியும் என்ற மந்திரத்தை உங்கள் தாரக மந்திரமாகக் கொள்ளுங்கள். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். வல்லமையில்லாதவனுக்கு ஆயுதமும் புல் என்ற மகத்தான உண்மையை உங்கள் மனதில் பதித்துக் கொள்ளுங் கள். என்ன விலை கொடுத்தேனும் நவீன அறிவியல் யுகத்தோடு உங்களையும் இணைத்துக்கொள்ளுங்கள். அத்தோடு மட்டும் நின்றுவிடாது உங்களது உடன்பிறப்புக்களும் அவ்வாறே இணைந்துகொள்ள உங்களாலான அனைத்தையும் செய்யுங்கள்.

நிச்சயமாய் காலம் நமக்குக் கைகொடுக்கும். ஞாலம் நமது வசப்படும்.

அனைவருக்கும் என் இனிய வெள்ளைப்பிரம்பு தின வாழ்த்துக்கள்.

**ஆறுமுகம் ரவீந்திரன்,**
தலைவர், வாழ்வகம்,
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.



டிசி4 விண்கல் குறித்த ஓவியரின் கற்பனை.

# நூலிழையில் தப்பிய பூமி

## கடந்த சென்றது டிசி4 விண்கல்

விண்வெளியில் வலம் வந்து கொண்டிருக்கும் டிசி4 என்ற விண்கல், பூமி மீது மோதாமல் நூலிழையில் கடந்து சென்றுள்ளதாக விஞ் ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பூமியிலிருந்து சுமார் 38,500 கிலோ மீற்றர் தொலைவில் டிசி4 விண்கல் கடந்து சென்றதால், பூமிக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனால், இதே விண்கல், தனது சுற்றுவட்டப் பாதையில், 2079ம் ஆண்டு நிச்சயம் பூமியைத் தாக்கும் என்றும் கணித்துள்ளனர்.

இந்த விண்கல், அடுத்து 2050ஆம் ஆண்டில் பூமியை எதிர்கொண்டாலும், பூமியுடன் மோத வாய்ப்பில்லை என்பதும் சற்று ஆறுதலான விடயமாகவே உள்ளது.

சுமார் 15 முதல் 30 மீற்றர் வரை அகலம் கொண்ட விண்கல் ஒன்று, விண்வெளியில் சுற்றிவருவதை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். டிசி4 என்று பெயரிடப்பட்டுள்ள அந்த விண்கல், 2012 ஆம் ஆண்டின் ஒக்ரோபர் மாதம், 12 ஆம் திகதி அந்தாட்டிக்கா கண்டத்துக்கு மிக நெருக்கத்தில் கடந்து சென்றது.

இந்த நிலையில், அந்த விண்கல் மீண்டும் 2017 ஆம் ஆண்டு பூமியை நெருங்கும் என்று விண்வெளி ஆய்வாளர்கள் கணித்துக் கூறியிருந்தனர்.

அதன்படி, டிசி4 விண்கல் பூமியை கடந்த வியாழக்கிழமை மிக நெருக்கத்தில் கடந்து சென்றது. எனினும், 38 ஆயிரத்து 500 கிலோ மீற்றர் தொலைவிலேயே விண்கல் பூமியைக் கடந்து விட்டதால், அது பூமியுடன் மோதும் ஆபத்து ஏற்படவில்லை என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், விண்கற்களால் பூமிக்கு ஆபத்து நேரிடும் சூழலில், அதனைத் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்புக் கருவிகள் மற்றும் அமைப்புகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைத் தெரிந்துகொள்வதற்கு, இந்த டிசி4 விண்கல்லின் வருகை உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# செத்து மடியும் பென்குயின்கள்

கிழக்கு அண்டார்டிகாவில் உள்ள அடேலி வகை பென்குயின்கள் வசிக்கும் ஒரு குடியிருப்பில், இந்த இனப் பெருக்க காலத்தில் பிறந்த இரண்டு குஞ்சுகளைத் தவிர அனைத்து பென்குயின் குஞ்சுகளும் உணவின்றி பட்டினியால் இறந்துள்ளதை 'பேரழிவு' என்று வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் அடேலி பென்குயின் குஞ்சுகள் மொத்தமாக இறப்பது இது இரண்டாவது முறை. அண்டார்டிகாவை ஒட்டியுள்ள கடல் பகுதிகளில் அளவுக்கும் அதிகமான பனி சூழ்ந்துள்ளதால், பென்குயின்கள் தங்கள் குஞ்சுகளுக்கு உணவு தேட மிகவும் நீண்ட தூரம் கடலுக்குள் செல்ல வேண்டியுள்ளது. அதனால், உணவு கிடைக்கத் தாமதமாகி பட்டினியால் அந்த இளம் குஞ்சுகள் இறந்துள்ளன.

இதே போல கடந்த 2015 ஆம் ஆண்டின் இனபெருக்க காலத்தில் பிறந்த அடேலி பென்குயின் குஞ்சுகளில் ஒன்று கூட பிழைக்காமல் அனைத்தும் உயிரிழந்தன.

சுமார் 36,000 பென்குயின்கள் வசிக்கும் அந்த பென்குயின் குடியிருப்பில் கடல்சார் உயிரினங் களின் பாதுகாப்பு பகுதி ஒன்றை அவசரமாக உருவாக்க வேண்டும் என்று சுற்றுச்சூழல் அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. அந்தப் பகுதிகளில் இறால் வகை மீன்கள் பிடிக்கப் படுவது தடை செய்யப் பட்டால், அங்கு பென்குயின்களுக்கு உணவுக்கான போட்டி குறைந்து அவை உணவு தேடி நீண்ட தூரம் செல்வது குறையும் என்றும் அதனால் அடேலி வகை பென்குயின்கள் உட்பட அனைத்து கடல்வாழ் உயிரினங்களும் பாதுகாக்கப்படும் என்று 'வேர்ல்ட் வைட் ஃபண்ட் ஃபார் நேச்சர்' எனும் சுற்றுச்சூழல் அமைப்பு கூறியுள்ளது.

கடந்த 2010 – ஆம் ஆண்டு முதல் பென்குயின்களின் எண்ணிக்கையை கண்காணித்து வரும் பிரெஞ்சு அறிவியலாளர்களின் குழுவுக்கு அந்த அமைப்பு உதவி செய்து வருகிறது. 25 ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ள கொமின் ஃபார் திகன்சர்வேன் ஆஃப் அண்டார்டிக் மரைன் லிவிங் ரிசோர்சஸ் அமைப்பு நாளை திங்கட்கிழமை நடத்தவுள்ள கூட்டத்தில் இந்தத் தடை குறித்து விவாதிக்கப்படவுள்ளது. 'பென்குயின்களைப் பற்றி பலரும் கொண்டுள்ள கருத்துக்கு மாறானதாக இந்த மோசமான நிகழ்வு அமைந்துள்ளது,' என்று வோர்ல்டு வைடு ஃபண்ட் ஃபார் அமைப்பின் துருவத் திட்டங்களுக்கான தலைவர் ரோட் டவ்னி கூறியுள்ளார்.

அடேலி பென்குயின்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் இரண்டு மோசமான இனப்பெருக்க காலத்தை சந்தித்துள்ள நிலையில், அந்தப் பகுதியில் பென்குயின்களின் உணவாக உள்ள இறால் வகை மீன்களைப் பிடிப்பதை அனுமதிப்பது, நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒன்று, என்று அவர் கூறியுள்ளார்.எனவே கிழக்கு அண்டார்டிக்கா பகுதியில் புதிய கடல் சார் உயிரினங்களின் பாதுகாப்பு பகுதி ஒன்றை உருவாக்கி பென்குயின்களின் வாழ்விடத்தைப் பாதுகாக்க வேண்டும், என்றும் அவர் தெரிவித்துள்ளனர்.

அண்டார்டிகாவை ஒட்டியுள்ள கடல் பகுதிகளில் அளவுக்கும் அதிகமான பனி சூழ்ந்துள்ளதால், பென்குயின்கள் தங்கள் குஞ்சுகளுக்கு உணவு தேட மிகவும் நீண்ட தூரம் கடலுக்குள் செல்ல வேண்டியுள்ளது.



# கொண்டாட்டமாக காலத்தை கழித்த ‘பிளேபோய்’ ஹெப்னர்!



கடந்த செப்ரெம்பர் 27 ஆம் திகதி ‘பிளேபோய்’ ஹெப்னர் தமது 91 ஆவது வயதில் காலமானார்

அன்று வேலை முடிந்து திரும்பிய ஹெப்னர் சரியான மன நிலையில் இல்லை. அப்போது ‘எஸ்கொயர்’ என்ற புகழ்பெற்ற ஆண்கள் இதழின் விளம்பர ஆலோசகராகவும், கொப்பி எடிட்டராகவும் பணிபுரிந்து வந்தார் ஹூ ஹெப்னர். பின்னாளில் பிளேபோய் இதழின் நிறுவுநர். தொடர்ந்து தன் உழைப்பும் கற்பனைத் திறனும் தேவையின்றி மாதச்சம்பளத்துக்கு வீணாகப் போவதாக உணர்ந்ததால் வந்த மனக் குழப்பம் அது.

ஏன், நீங்களே ஒரு பத்திரிகை தொடங்கக்கூடாது? – என்று அப்போது ஹூஹெப்னரின் மனைவி மில்ரெட் வில்லியம்ஸ் கேட்டார். தன் கல்லூரித் தோழியைத் தான் காதலித்து மணம் முடித்திருந்தார் ஹெப்னர். ‘சரியான யோசனைதான், பணம்?’ என்று புருவம் உயர்த்திய ஹெப்னரிடம், தன் சேமிப்பு ஐந்நூறு டொலரை எடுத்து நீட்டினார். அதன் பின்னர் ஹெப்னரின் சகோதரர், தாய் எனக் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களிடம் இருந்து 8 ஆயிரம் டொலர்கள் சேர்ந்தன. இளங்கலை – உளவியல் படித்திருந்த ஹெப்னருக்கு ஆண்களின் மனநிலையைப் படம் பிடிப்பது இலகுவாக இருந்தது. அவர்களின் விருப்பமும் ஆர்வமும் எப்படி இருக்கும் என்று அவரால் புரிந்து கொள்ளமுடிந்தது. மேலும், மிகக் கொடுமையான இரண்டாம் உலகப் போர் முடிந்து, அமெரிக்க ஆண்கள் ‘ரிலாக்ஸ்’ நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்த காலகட்டம் அது.

முதல் அடி, அது எதிராளியை ஒரே குத்தில் வீழ்த்திவிடும் ‘டைனமைட் பஞ்ச்’ ஆக இருக்க வேண்டும். என்கிற எண்ணத்துடன் திரிந்துகொண்டிருந்த வரிடம், ஒரு கலிபோர்னியா போட்டோகிராபரிடம் அன்று உலகையே கலக்கிய மர்லின் மன்றோவின் முழு நிர்வாணப் படம் இருக்கின்றமை தெரியவந்தது. கலண்டருக்காக எடுக்கப்பட்ட அந்தப் படம் என்ன காரணத்தாலோ பயன்படுத்தப்படவில்லை. பார்த்தவுடன் பிடித்து விட்டது. உடனே அதை அனைத்து உரிமைகளுடன் விலைக்கு வாங்கினார். நடுப்பக்கத்தில் சிவப்பு நிற வெல்வெட் துணியில் அமர்ந்திருக்கும் மர்லின் மன்றோவின் படம் அச்சாகியது. தன் புதிய புத்தகத்துக்கு ‘ஸ்டாக் பார்ட்டி’ என்று பெயர் வைத்தார்.

அப்போது ‘ஸ்டாக்’ என்கிற பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. கிட்டதட்ட அந்தப் பெயரிலேயே புதிய பத்திரிகை வரவிருப்பதை அறிந்த அந்தப் பத்திரிகை, ஹெப்னருக்கு வழக்கறிஞர் மூலம் நோட்டீஸ் அனுப்பியது. அதன்பின்னர் பத்துக்கும் மேற்பட்ட பெயர்களைத்தன் விற்பனையாளர்களுடன் பரிசீலித்த போது அவரின் மனைவி மில்ரெட் கூறிய பெயர்தான் ‘பிளேபோய்’.

ஒருவழியாக 1953 ஆம் ஆண்டு பிளேபாய் இதழ் வெளியானது. ஆனால், அது தனிச்சுற்றுக்கான பத்திரிகையாகத்தான் வெளிவந்தது. காரணம், அன்றைய அமெரிக்க அரசு தணிக்கை விவகாரங்களில் கடுமையாக இருந்தது தான். ஆனாலும், சூடுபிடித்தது. அன் றைய திகதியில் வெளியான சில வாரங் களில் 50 ஆயிரம் பிரதி விற்ற தனிச்சுற்று பத்திரிகை பிளேபோய் மட்டுமே.

அதன்பின்னர் ஆட்டம் பிடித்து, அமெரிக்க இதழியல் துறை பெரிய பெரிய உச்சங்களை எல்லாம் தொட்டது பிளேபோய். பிளேபோயின் மூலம் வந்த வருமானத்தைக் கொண்டு ஹெப்னர் படங்கள் எடுத்தார். டொக்குமென்ட்ரிகளைத் தயாரித்தார். தொடர்ந்து கல்வி நிறுவனங்களுக்கும், திரைப்பட பள்ளிகளுக்கும் நிதி உதவிகளை வழங்கி வந்தார்.

70களில் கொட்டிய பணத்தை என்ன செய்வதென்றே தெரியவில்லை. 5 ஏக்கரில் விக்டோரிய கால மொடலில் கட்டப்பட்ட பங்களாவை வாங்கிய ஹூ ஹெப்னர், புகழ்மிக்க ‘பிளேபோய்’ மேன்சனை நிறுவினார். லொஸ் ஏஞ்சல்ஸில் நடக்கும் ‘வி.வி.ஐ.பி. பார்ட்டி’கள் அனைத்துமே அங்குதான் நடந்தன. (PLAYBOY MANSION)

80களுக்குப் பிறகு சினிமாவும் வீடியோவும் களத்தில் இறங்கவும் பிளேபோய் இதழ் கொஞ்சம் லாபம் குறைந்தது. ஆனால், அதை மிகச் சாதாரணமாக தன் வருமானத்தால் ஈடு கட்டியது பிளேபோய் மேன்சன்.

எண்பதுகளின் இறுதியில் நிர்வாகப் பொறுப்பைத் தன் மூத்த மகள் கிறிஸ்டியிடம் வழங்கி வாழ்க்கையை இன்னும் கொண்டாட்டமாக அனுபவிக்கத் தொடங்கினார் ஹெப்னர். கடந்த 2015 முதல் தன் புகழ்பெற்ற நடுப்பக்க ஸ்பெஷல் படத்தையும் நிறுத்திவிட்டது. காரணம் விரல் சொடுக்கினால் மொபைலில் வரும் கவர்ச்சிப் படங்கள்.

என் வெற்றியை என் பெற்றோர்கள் கொண்டாடவேயில்லை. என் ஆரம்ப கட்ட வேலைகளில் என் தந்தை உதவியிருக்கிறார். என் அம்மா கொடுத்த 1,000 டொலர் மிகப்பெரிய முதலீடு. அவர்கள் என்னை ஒரு வெற்றிகரமான மனிதனாகக் கண்டனர். ஆனால், பிளேபோயின் மீதும் அதன் செயல்பாடுகள் மீதும் பெரிய மகிழ்ச்சியை அவர்கள் வெளிக்காட்டவில்லை. இத்தனைக்கும் அதுதான் அவர்களை கோடீஸ்வரர்களாக்கியது என்று பெற்றோரால் தாம் அங்கீகரிக்கப்படாத சோகத்தை ஒருமுறை பகிர்ந்து கொண்டார் ஹூ ஹெப்னர்.

பார்ட்னராகவும், பார்ட்டியின் முடிவில் பிளேபோய் மேன்சனின் விருந்தினராகவும் ஹெப்னரின் வாழ்க்கையில் வந்துபோனவர்கள் கணக்கே இல்லை. ஆனால், அதிகாரபூர்வமாகத் திருமணம் செய்தது மூன்று பெண்களை. முதல் திருமணம் கல்லூரித்தோழி வில்பிரெட், இரண்டாவது திருமணம் மொடல் பெண்ணான கிம் பர்லி கான்ராட். இருவரையும் விவாகரத்து செய்த ஹெப்னர், மூன்றாவதாக கிறிஸ்டல் ஹாரிஸை மணம் முடித்தார்.

மொடலும், தொலைக்காட்சி நடிகையுமான கிறிஸ்டல் ஹாரிஸுக்கு ஹெப்னருக்கும் 60 வயது வித்தியாசம். இருவருக்கும் முதலில் ஜூன் 14 ஆம் திகதி திருமணம் நிச்சயம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், திருமணத்துக்கு 5 நாள்களுக்கு முன் தமக்கு அதில் சம்மதமில்லை என்று சொல்லிவிட்டு போய்விட்டார். அந்த மாத பிளேபோய் இதழில், இருவரின் படம் போட்டு விற்பனைக்கு வந்துவிட்டது. பிறகு அதை ஸ்டிக்கர் வைத்து மறைத்து விற்பனை செய்தனர். மீண்டும் மனம் மாறி டிசெம்பர் 31. 2012 இல் திருமணம் செய்துகொண்டார் கிறிஸ்டல்.

இந்தத் திருமணம் ஹெபனரின் இறுதி மூச்சு வரை நீடித்தது. சொந்தங்களும் சுற்றங்களும் சூழ அமைதியான முறையில் ஹூஹெப்னரின் மரணம் நிகழ்ந்தது என அவரின் குடும்பத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹெப்னரின் வாழ்க்கையில் சில நகை முரண்கள். அவரின் பிளேபோய் புத்தகத்தைவிட அந்தப் புத்தகத்தின் சின்னமான முயல்தான் அதிக லாபத்தை ‘பேடன்ட்’ முறையில் ஈட்டிக் கொடுக்கிறது என்பது அதில் ஒன்று.






மற்றொன்று வாழ்க்கை முழுவதும் கொண்டாட்டமும், சல்லாபமுமாக ஹெப்னர் இருக்கக் காரணமான ‘பிளேபோய்’ என்கிற பெயர் அவரின் முதல் மனைவி வில்பிரட் பரிந்துரைத்தது.

ஹெப்னருக்குத் தெரியாமல் அவர் இல்லாத நேரத்தில் பழைய காதலருடன் தொடர்பு வைத்துக் கொண்டதாக வில்பிரட் தாமே முன் வந்து ஒப்புக்கொண்டார். வில்பிரட்டின் அந்தத் துரோகம் மன்னிக்கவே முடியாததாகவும், தனது இந்த வரம்பற்ற பாலியல் வாழ்க்கைக்குக் காரணம் அதுவாகக்கூட இருக்கலாம் என்றும் ஒருமுறை ஹெப்னர் குறிப்பிட்டார். ★

காலைக்கதிர்
Kalaikkathir





**நீங்கள் ஆண் குழந்தையை கருவில் சுமப்பவராக இருந்தால், உங்களது சருமம் வறட்சியாக இருக்கும். உங்களது சருமம் மிகவும் பளப்பளப்பாகவும், மிருதுவாகவும் இருந்தால், உங்களுக்குப் பிறக்கப்போவது பெண் குழந்தை என்பதைக் கணிக்கலாம். உங்களது தலைமுடி மிகவும் பளப்பளப்பாகவும், அடர்த்தியாகவும் இருந்தால், உங்களுக்கு பிறக்கப்போவது ஆண் குழந்தை என்பதைக் கண்டுபிடிக்கலாம்.**

# பிறக்கப்போகும் குழந்தை ஆணா, பெண்ணா?

## தாயின் முகத்தை பார்த்தே கண்டு பிடித்து விடலாம்!



உடலில் தோன்றும் ஒருசில அறிகுறிகள், சில விசித்திரமான சோதனைகள் மூலமாகவும் குழந்தையின் பாலினத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

முகத்தை வைத்தே பிறக்கப்போகும் குழந்தையின் பாலினத்தை அறியலாம். உடலில் தோன்றும் ஒருசில அறிகுறிகளை வைத்துக்கூட நமது முன்னோர்கள் பிறக்கப்போவது ஆணா, பெண்ணா என்பதைக் கண்டறிந்தனர்.

மேலும் அவர்கள் சில விசித்திரமான சோதனைகள் மூலமாகவும் குழந்தையின் பாலினத்தைக் கண்டறிந்தனர்.

நீங்கள் ஆண் குழந்தையை கருவில் சுமப்பவராக இருந்தால், உங்களது சருமம் வறட்சியாக இருக்கும். உங்களது சருமம் மிகவும் பளப்பளப்பாகவும், மிருதுவாகவும் இருந்தால், உங்களுக்குப் பிறக்கப்போவது பெண் குழந்தை என்பதைக் கணிக்கலாம்.

உங்களது தலைமுடி மிகவும் பளபளப்பாகவும், அடர்த்தியாகவும் இருந்தால், உங்களுக்குப் பிறக்கப் போவது ஆண் குழந்தை என்பதைக் கண்டுபிடிக்கலாம். உங்களது தலைமுடி வறட்சியாகவும், அதிகமாக உதிர்ந்தாலும் உங்களுக்குப் பிறக்கப்போவது பெண் குழந்தையாக இருக்கும்.

உங்களது உடலில் உள்ள முடிகள் மிகவும் வேகமாகவும், அடர்த்தியாகவும் வளர்ந்தால், உங்களுக்குப் பிறக்கப்போவது ஆண் குழந்தை எனவும், உடலில் உள்ள முடிகள் குறைந்தால், பெண் குழந்தை எனவும் முன்னோர்கள் கணித்தார்கள்.


மார்பகங்கள் ஒன்று சிறியதாகவும், மற்றொன்று பெரியதாகவும் இருக்கும். இது இயல்பானதுதான்.

நீங்கள் கண்ணாடியில் பார்க்கும்போது, வலது மார்பகம் பெரியதாக இருந்தால் உங்களது கருவில் இருப்பது ஆண் குழந்தையாகவும், இடதுபுற மார்பகம் பெரியதாக இருந்தால் உங்களுக்கு பிறக்கப்போவது பெண் குழந்தையாகவும் இருக்கும்.

நமது முன்னோர்கள் கர்ப்பிணிப் பெண்ணின் முகத்தை வைத்தே பிறக்கபோவது ஆண்குழந்தையா..? இல்லை பெண் குழந்தையா என்பதைக் கண்டறிந்தனர்.

நீங்கள் மிகவும் அழகாகவும், பிரகாசமாகவும் ஒரு தேவதை போல முன்பு எப்போதும் இல்லாதது போன்ற முகப்பொழிவுடன் இருந்தால் உங்களுக்குப் பிறக்கப்போவது ஆண் குழந்தையாகவும், சோகமான கண்கள், பொழிவிழந்த முகத்துடன் இருந்தால் உங்களுக்கு பிறக்க போவது பெண் குழந்தையாகவும் இருக்க வாய்ப்புகள் அதிகம்.

---




# பெண்களின் உடல் பருமனும் தைரொய்டும்!

தைரொய்ட் மிகுதியாகவோ, குறைவாகவோ அல்லது தைரொய்ட் எதிர் அணுக்களால் அந்தப் பெண் பாதிக்கப்பட்டது நிரூபிக்கப்பட்டால், அவர்களுக்குத் தகுந்த சிகிச்சை வழங்கி இந்தப் பிரச்சினையைச் சரிசெய்து விடலாம்.

தைரொய்ட் பிரச்சினையால் ஒரு பெண்ணுக்குத் தாய்மை அடைவதில் சிக்கல் இருக்குமானால் அதை உரிய பரிசோதனை மூலம் உறுதி செய்யலாம்.

உடல் பருமன் என்ற சொல், நம் உடலில் தேவைக்கு அதிகமாகக் கொழுப்புச் சத்து சேர்ந்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. உடலில் தேவைக்கு அதிகமாகக் கொழுப்பு சேர்வதற்கு சோம்பல், தவறான உணவுப் பழக்கம் உள்ளிட்ட பல காரணங்கள் உள்ளன. அதே நேரத்தில் தைரொய்ட் பிரச்சினையும் ஒரு காரணம் என்று பரவலாகச் சொல்லப்படுகிறது.

உண்மையில் தைரொய்ட் குறைபாடு உள்ளவர்கள் உடலில் கொழுப்புச்சத்து சேர்வது இல்லை. ஆனால், நீர் அதிகமாகச் சேருகிறது.



**உடல் பருமனுக்கு தைரொய்ட் மட்டுமே காரணம் என்று நினைப்பது தவறு. அதே நேரத்தில் பெண்களின் கொழுப்புச் சத்துக் காரணமாக உடல் பருமன் ஏற்பட்டவர்களுக்கு உடல் எடை அதிகமாக இருக்கும்.**

அந்த நீர்தான் உடலைப் பருமனானதுபோலக் காட்டுகிறது. தைரொய்ட் பிரச்சினைக்காக, தைரொக்ஸின் சிகிச்சையைத் தொடங்கியதும், உடலில் இருந்து நீர் வேகமாக வெளியேறும். சராசரியாக 10 லீற்றர் நீர் வெளியேற்றப்பட்டால், உடல் எடையில் 10 கிலோ அளவுக்கு குறையும்.

எனவே, உடல்பருமனுக்குதைரொய்ட் மட்டுமே காரணம் என்று நினைப்பது தவறு. அதே நேரத்தில் பெண்களின் கொழுப்புச் சத்துக் காரணமாக உடல் பருமன் ஏற்பட்டவர்களுக்கு உடல் எடை அதிகமாக இருக்கும். அவர்களுக்கு தைரொய்ட் உள்ளதாக நினைத்து தைரொக்ஸின் உட்பட மருந்துகளைக் கொடுத்து உடல் எடையைக் குறைக்க முயல்வது தவறான மருத்துவ முறையாகும்.

அதேபோல் குழந்தையின்மைக்கும் தைரொய்ட் காரணமாகச் சொல்லப்படுகிறது. சில பெண்களுக்குக் குழந்தையின்மை என்பது இயல்பானதாக இருக்கும். எனினும் தைரொய்ட் பிரச்சினையால் ஒரு பெண்ணுக்குத் தாய்மை அடைவதில் சிக்கல் இருக்குமானால் அதை உரிய பரிசோதனை மூலம் உறுதி செய்யலாம்.

தைரொய்ட் மிகுதியாகவோ, குறைவாகவோ அல்லது தைரொய்ட் எதிர் அணுக்களால் அந்தப் பெண் பாதிக்கப்பட்டது நிரூபிக்கப்பட்டால், அவர்களுக்குத் தகுந்த சிகிச்சை வழங்கி இந்தப் பிரச்சினையைச் சரிசெய்து விடலாம். அவர்கள் தாய்மை அடையவும் முடியும். இதற்கு மாறாகச் சில பெண்களுக்கு வேறு சில குறைபாடுகளால் மகப்பேறின்மை பிரச்சினை இருக்கும். இதுபோன்ற பெண்களுக்கு தைரொய்ட் சிகிச்சை செய்வதில் பலன் தராது என்கிறார்கள் மருத்துவர்கள்.

## டிஜிட்டல் உலகில் சிறாரைப் பாதுகாப்போம்

டிஜிட்டல் உலகில் சிறார் மாண்பு என்ற தலைப்பில் உரோம் கிரகோரியன் பல்கலைக்கழக உலக மாநாட்டில் கலந்துகொண்டவர்களைத் திருப்பீடத்தில் சந்தித்த திருத்தந்தை பிரான்ஸிஸ், “டிஜிட்டல் உலகில் சிறாரைப் பாதுகாக்க நாம் அனைவரும் உறுதியுடன் ஒன்றிணைவோம். இன்று உலகில் இணையத் தளத்தைப் பயன்படுத்தும் முந்நூறு கோடிக்கும் மேற்பட்ட மக்களில் 25 விழுக்காட்டுக்கும் அதிகமானோர் சிறார்கள்” – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## இணையத்தளம் சிறார்க்கு ஏற்படுத்தும் எதிர்மறை விளைவுகள்

இணையத்தளம் சிறார்களுக்கு ஏற்படுத்தும் எதிர்மறை விளைவுகளைக் குறைத்து மதிப்பிடுவது, தொழில்நுட்பம் வழியாகத் தீர்வுகாணச்செய்வது, இணையத்தளம் பற்றிய பொய்யான கண்ணோட்டம் ஆகிய தவறான அணுகுமுறைகளைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்ஸிஸ், எல்லா நாடுகளிலும் சிறாரின் கண்களில் எப்போதும் மகிழ்ச்சி தெரிவதற்கு நாம் எல்லாரும் ஒன்றிணைந்து செயற்படுவோம். – என்றார்.

# நெபாட் மீன்பிடி வலை உற்பத்தி ஆலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க





யாழ்.மறைமாவட்ட சமுக சேவை அமைப்பாக எஸ்.இயூஜின் பிரான்ஸிஸ் அடிகளாரை இயக்குநராகக் கொண்டு இயங்கும் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள நெபாட் மீன்பிடிவலை உற்பத்தி தொழிற்சாலை ஐந்து லட்சம் ரூபாவை அன்பளிப்பாகப் பெற்றுக்கொண்டது. இந்த அன்பளிப்பு கண்டி உயர் நிலை பாடசாலை லண்டன் கிளை பழைய மாணவர் சங்கத்தால் நெபாட் நிறுவன ஊழியர்களின் நலனுக்காகச் சேகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

06 ஒக்ரோபர் 2017 அன்று நெபாட் நிறுவனத்தை தரிசித்த பழைய மாணவத் தலைவி திருமதி மாலினி சிங்கராயர் முன்னிலையில் இந்த அன்பளிப்பு பணத்தை காசோலையாக முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய தேசிய ஒற்றுமையும் நல்லிணக்க தலைவியுமா கிய திருமதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க நெபாட் நிதி முகாமையாளர் பவானந்தனிடம் கையளித்தார்.

## குருவாக வேண்டும் என்றே இலட்சியம் மாவட்ட முன்னணி மாணவனின் விருப்பம்



மன்னார் கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவன் ஞானசேகர் மெல்கிதன் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் 187 புள்ளிகளைப் பெற்று 2ஆம் நிலையை அடைந்துள்ளார்.

இவர், ‘காலைக் கதிர்’ கிறிஸ்தவ செய்தி இதழுக்கு தனது எதிர்கால இலட்சியம் பற்றித் தெரிவிக்கும்போது –

‘‘அமைதி, சமாதானம், நம்பிக்கை எனபன உருவாக வேண்டும் என்பதற்காக நான் ஒரு குருவாக வேண்டும் என விரும்புகிறேன். இதுவே எனது இலட்சியம்” என்றும் –

இந்த எதிர்காலம் நோக்கிய தன் நல்ல எண்ணத்துடன் எதிர்காலம் நோக்கிப் பயணிக்க வழிகாட்டிய மன்னார் கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். நான் ஒரு குருவாக வேண்டும் என்பதே எனது இலட்சியம் எனத் தெரிவிக்கும் மன்னார் மாவட்டத்தில் 2ஆம் நிலை அடைந்த மன்னார் கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவன் ஞான சேகர் மெல்கிதனின் நீண்ட கால கனவு நனவாக காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் வாழ்த்தி நிற்கிறது.



## மட்டு. தாண்டவன்வெளியின் ஜோசப்வாஸ் அடிகளாருக்கு நினைவுத் தூபி

மட்டக்களப்பில் இருந்து தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா செய்திச்சேவைக்கு ஜே.எச்.இரத்தினராஜா 1710இல் புனித ஜோசப்வாஸ் அடிகளார் தாண்டவன்வெளிக்கு வருகைதந்த போது கைதுசெய்யப்பட்டு வம்மி மரத்தில் கட்டி அடிக்கப்பட்டார் என பாரம்பரிய வரலாறு தெரிவிக்கும் புனித இடத்தில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபியானது 06 ஒக்ரோபர் 2017 அன்று அருட்தந்தை.ஜி.அலக்ஸ் றொபட் அடிகளாரால் திறந்து வைக்கப்பட்டது.

## உண்மையின் எண்ணங்கள்

யாழ் மறைமாவட்டத்தின் சமூக சேவைப் பிரிவாக கியுடெக் காத்தாஸ் என அழைக்கப்படும் மனித முன்னேற்ற நிலையம் யாழ்.மறை மாவட்டத்தில் 1972ஆம் ஆண்டு முதல் இயங்கிவருகிறது. கியுடெக் கரித்தாஸ் நிறுவனம் யாழ்.மறை மாவட்டத்தின் சமுகசேவைப் பிரிவாக இருந்தாலும், மதபேதமின்றி அனைவருக்கும் உதவிக்கரம் நீட்டிவருவது இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் குறிப்பிடப்பட வேண்டியதாகும். 2016ஆம் ஆண்டு முதல் யாழ். மறைமாவட்டத்தின் சமூகசேவைப் பிரிவான கியுடெக் காத்தாஸ் நிறுவனத்தின் இயக்குநராக எஸ். இயுஜின் பிரான்ஸீஸ் அடிகளார் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். அவரின் எண்ணத்திலும் திட்டமிடலிலும் காலத்தின் தேவையை உணர்ந்த பல பணிகள் மேற் கொள்ளப்படுகின்றன என அறிக்கையிட்டோம். இவான் பணி மேலும் சிறக்க காலைக்கதிர் கிஸ்தவச் செய்தி இதழ் வாழ்த்தி நிற்கிறது.

# கச்சதீவு – பாலைதீவு திருநாள் இனிமேல் சனிக்கிழமைகளில்!

திருச்சபையின் வழிபாட்டு ஒழுங்குக்கு அமைய திருவருகைக் காலம், தவக்காலம், உயிர்ப்புக் காலம் ஆகிய காலங்களில் வரும் ஞாயிறு தினங்களிலும் மற்றும் திருக்காட்சி விழா, ஆண்டவரின் திரு உடல் திரு இரத்தம், பரம திரித்துவம், ஆண்டவரின் விண்ணேற்றம், பரிசுத்த ஆவி விழா போன்ற பெரு விழாக்கள் வரும் ஞாயிறு தினங்களிலும் ஆலயப் புனிதர்களின் விழாக்கள் கொண்டாடப்பட முடியாது.



இந்த ஒழுங்கை எமது மறை மாவட்டத்திலும் இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனக்கடந்த 21.09.2017 அன்று யாழ்.ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற குருக்கள் மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கமைய 2018 ஆம் ஆண்டு முதல் இத்தகைய நாள்களில் கொண்டாடப்படும் புனிதர்களின் திருநாள்கள் அந்த ஞாயிறு தினத்துக்கு முன்னதான சனிக்கிழமைகளில் கொண்டாடப்படலாமென அறிவுறுத்தப்படுகின்றது.




தவக்கால ஞாயிறு தினங்களில் இதுவரை கொண்டாடப்பட்டு வந்த கச்சதீவு, பாலைதீவு, கற்கடதீவு, குருசடித்தீவு போன்ற தீவுகளின் புனித அந்தோனியார் திருநாள்களும் வருகிற வருடம் முதல் சனிக்கிழமைகளிலேயே கொண்டாடப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

புனிதர்களின் திருநாள்கள் மேற்படி ஞாயிறு தினங்களில் கொண்டாடப்படுகின்றமையால் அந்த ஞாயிறு தினங்களின் முக்கியத்துவம் மறுக்கப்படுவதைத் தடுப்பதற்காகவே திருச்சபையின் வழிபாட்டு ஒழுங்கில் இத்தகைய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும் பொதுக் காலங்களில் வரும் ஞாயிறு தினங்களில் புனிதர்களின் விழாக்கள் கொண்டாடப்பட அனுமதி வழங்கப்படுகின்றது.

இது பற்றிய விரிவான அறிக்கை விரைவில் எமது ஆயரின் அனுமதியோடு வெளியிடப்படும் என யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் தெரிவிக்கிறார்.



# வீதிப் போராட்டங்களாகக் குறுகிய ஈழத்தமிழரின் உரிமைப் போர்!




கருமுகில் திரண்டு பரவியதால், வானம் இருட்டிக் கிடந்தது.

சந்தியடியில் ஊர்வம்பளக்க ஏரம்பர், வாத்தியார், ஜீவன், ரூபன், பேப்பர் தம்பி மற்றும் செல்லாச்சி ஆகியோர் கூடியிருந்தனர்.

''அநுராதபுரத்துக்கு வழக்கு மாற்றப்பட்ட அரசியல்கைதிகள் மூன்று பேரும், வழக்கை வவுனியாவிலேயே நடத்த வேண்டும் என்று கோரி உண்ணாவிரதம் இருக்காமல் போயிருந்தால் என்ன நடந்திருக்கும்?'' என்று கேட்டு வம்பளப்பை ஆரம்பித்தான் ரூபன்.

கச்சான் கடகத்தை அவிழ்ப்பதில் மும்முரமாயிருந்த செல்லாச்சி, ''இதென்ன கேள்வி, அப்பிடி ஒரு வழக்கு நடக்கிறதே தெரியாமல் போயிருக்கும். மக்கள் போராடத் தொடங்கின பிறகு வாக்குப் பொறுக்கிறவை ஓடிவந்து அதுக்குள்ளை தலையை நுழைக்கிறது தானே இங்கே வழக்கமாகப் போட்டுது'' என்று சினந்தாள்.

அதுவரை கைபேசியைப் பார்த்துக் கொண்டிருந்த ஜீவன், ''உலகத்திலை உரிமைக்காகப் போராடுகிற அமைப்புகள் எல்லாம் இனிமேல் எங்களிட்டை வந்துதான் போராடுவது எப்படி என்று படிக்கப் போகுதுகள்'' என்று சொன்னான்.

''இங்கை வந்து என்னத்தைப் படிக்கிறது'' என்று கேட்டாள் செல்லாச்சி.

அதற்கு சிரித்தபடியே ஜீவன், ''வழக்கமாக அரசியல் தலைமைகள் வரப்போகும் ஆபத்தை முன்கூட்டியே உணர்ந்து, மக்களுக்கு எச்சரித்து, அவர்களைத் திரட்டி, போராட்டங்களை ஆட்சியாளர்களுக்கு எதிராக நடத்துவது வழக்கம். இங்கே பிரச்சினை முத்தி வெடித்த பின்னர், சனமாகப் போராடத் தொடங்கிய பிறகு, அரசியல் தலைமைகள் வேற வழியே இல்லாமல் விழுந்தடித்துக் கொண்டு போராட்டத்தில் பங்கேற்பது வழக்கமாகப் போட்டுது'' - என்றான்.

மற்றவர்கள் கதைப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த வாத்தியார், ''வடமாகாண சபையிலை இருந்து கொஞ்சப்பேர் சிறைக்குப் போய் உண்ணாவிரதம் இருந்த கைதிகளைச் சந்திச்சவை. அது சம்பந்தமான செய்திகளைப் பார்க்கும்போது அழுவதா சிரிப்பதா என்று விளங்கவில்லை'' - என்றார்.

''அதிலை என்ன குறை கண்டனீங்கள்?'' என்று கேட்டார் ஏரம்பர்.

அதற்குவாத்தியார், ''வடக்குமாகாண சபை உண்ணாவிரதமிருக்கும் கைதிகளின் பிரச்சினையில் ஜனாதிபதியும் பிரதமரும் தலையிட வேணும் என்று வழக்கம் போலத் தீர்மானம் போட்டது. அதுக்குப் பிறகு கைதிகளைப் போய்ச் சந்திக்கிறதென்றும் முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, சபை உறுப்பினர்கள் போய் கைதிகளைச் சந்திச்சினம். அது பற்றிவந்த செய்தியைப் பார்க்கும்போது தான் அரசியல் தலைமைகளின் வழிகாட்டுதலில் மக்கள் இயங்குவதா அல்லது மக்கள் வழிகாட்டித்தான் அரசியல் தலைமைகளுக்குத் தெளிவு வருகிறதா என்று சந்தேகம் வருகிறது'' என்று சொல்லி மூச்சு வாங்கினார்.

''குழப்பிறீங்கள் வாத்தியார்'' என்றார் ஏரம்பர்.

வாத்தியாருக்கு உதவப் பேப்பர்தம்பி கதைக்கத் தொடங்கினான்.

''கைதிகளைச் சந்தித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், கைதிகளிடம் கதைச்சவை என்றும், அப்போது கைதிகள் தமது தரப்பு நியாயத்தைச் சொன்னவை என்றும், அதைக் கேட்ட பிறகுதான் கைதிகளின் பக்க நியாயத்தைப் புரிந்துகொண்ட உறுப்பினர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடக் கோரும் தமது வேண்டுகோளைவலியுறுத்தாமல் தவிர்த்தார்கள் எனவும் செய்திகள் தெரிவித்தன. அந்தச் செய்திகள் தவறென்று சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் எவரும் தெரிவிக்காததால் அதனை நம்பலாம்.'' என்று சொல்லி மூச்சு வாங்கினான்.

''இதெல்லாம் நானும் அறிஞ்சனான்'' என்றார் ஏரம்பர்.

தொடர்ந்து கதைத்தான் பேப்பர்தம்பி. ''ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னர் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக இருப்பது அரசியல்கைதிகளின் பிரச்சினை. அப்படிப்பட்ட நிலையில் அநுராதபுரத்துக்கு வழக்கு மாற்றப்படுவதன் சூட்சுமம் கைதிகள் சொல்லித்தான் இவைக்கு விளங்குது என்றால் இவையை எங்கடை பிரதிநிதிகள் என்று சொல்வதில் என்ன அர்த்தம் இருக்கு? என்பதுதான் வாத்தியாரின் கேள்வி'' - என்றான் பேப்பர்தம்பி.

இதனைத் தலையசைத்து ஏற்றுக் கொண்ட வாத்தியார், ''அதுக்காக இந்த ஆறேழு பேரும்தான் இப்படி என்று சொல்லவில்லை.எங்கடை முதலமைச்சர், தான் அறிந்த தகவல்களின்படி 'புலிகளிடம் கைதிகளாக இருந்த படையினரை, புலிகளும் கொலை செய்தார்கள்' என்று காட்டும் சதி இந்த விசயத்தில் இருப்பதாகச் சொன்னார். இப்படி சொல்லிப் போட்டு இருந்தால் அவரின் கடமை முடிந்ததா? 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிக்கப்பட்டது. அதுக்குப் பிறகு 2015 ஆம் ஆண்டு தை மாசம் 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடந்து நல்லாட்சி அரசு வந்தது என்று புளுகிச்சினம். அன்றையிலிருந்து இப்ப வரைக்கும் 2 வருடங்களும் 9 மாதங்களும் ஆகிப் போச்சு. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி, சிறையிலை இருக்கிற அரசியல் கைதிகளை விடுவிக்க இத்தனை கட்சிகளும் தலைவர்களும் இருந்தும் முடியவில்லை என்றால் பிறகு இருந்தென்ன இல்லாமல் போனால்தான் என்ன?'' - என்று ஆவேசமாகக் கேட்டார் வாத்தியார்.

அந்த கோபத்தால் சந்தியடியில் இறுக்கமான அமைதி பரவியது.

அந்த அமைதியைக் கலைத்தான் பேப்பர்தம்பி.

''இந்தச்சிறிய தீவில் காலம்காலமாக வாழ்ந்த ஒரு தனியினம், உரிமைக்காகப் போராடியது.அப்ப அந்தப் போராட்டம் பக்கத்திலையிருக்கிற இந்தியாவுக்குக் கூடச் சரியாகத் தெரியாமல் இருந்தது. பல்லாயிரம் உயிர்களைப் பலி கொடுத்த பிறகுதான், ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டம் சர்வதேசக் கவனத்தை ஈர்த்திருந்தது. ஆனால், இப்ப உரிமைக்கான போரை உடைச்சு சின்னச் சின்ன வீதிப் போராட்டங்களாக மாற்றி நீர்த்துப்போக வைக்கப்பட்டிருக்கு. இன்றைக்குப் பேப்பர்களைப் பாருங்கோ, மூன்று கைதிகளுக்காக ஆங்காங்கே போராட்டங்கள். காணிவிடுவிப்புக்காகப் போராட்டம், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம், அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை சரியில்லை என்று சொல்ல கலந்துரையாடல் என்ற பெயரிலை போராட்டம். இதெல்லாம் காணாது என்று தொண்டர் ஆசிரியர் போராட்டம்,இந்திய மீனவர் அத்துமீறலை எதிர்த்துப் போராட்டம், வேலைவாய்ப்புக் கேட்டுப் போராட்டம், சுகாதாரப் பரிசோதகர் போராட்டம் என்று எத்தனை போராட்டங்கள். உரிமைக்காகப் போராடிய ஓர் இனத்தின் கவனத்தைச் சிதைச்சு, அன்றாட வாழ்க்கைக்காகத் தத்தமது பிரச்சினைகளுக்காகப் போராடும் சிறு கும்பல்களாக சிதறடிச்சிருக்கு. அதுவும் போதாதென்று போதைப் பொருள், கேளிக்கை, வன்முறை என்று அடுத்த தலைமுறைகளையும் கை வைச்சாச்சு. இத்தனைக்கும் பிறகும் நாங்கள் கொழும்புப்பார்வை, யாழ்ப்பாணப் பார்வை என்று மல்லுக்கட்டுறம். ஆனால், எல்லாப் பார்வையுமே கோணல் பார்வையாகவே இருக்கு'' என்று சொல்லி விட்டுப் பெருமூச்சு விட்டான் பேப்பர் தம்பி.

அப்போது செல்லாச்சி, ''நாங்களே எங்கடை தலையிலை மண்ணையள்ளிப் போட்டிட்டு அடுத்தவங்களைப் பிழை சொல்லி என்ன பயன். ஐக்கியநாடுகள் சபையிலை அவகாசத்துக்கு மேலை அவகாசம் கொடுக்கும் போது யோசிச்சிருக்க வேணும். சமாதான காலம் என்று இழுத்துத்தானே புலிகளைப் பிரிச்சவை.'' - என்றாள்.

''இதிலை இன்னொரு விசயமும் இருக்கு'' என்று தொடங்கிய ரூபன், ''விடுதலைக்குப் போராடி உரிமைகளைப் பெற்ற இனங்களின் தலைமைகளில் ஓர் ஒற்றுமையைக் காணலாம். போராடும் தலைமைகளும் உரிமையை இழந்தவர்களாகவே இருப்பார்கள். எங்களுடைய அரசியல்தலைமைகளை எடுத்துப்பாருங்கள். சாதாரண மக்கள் எதிர்கொள்ளும் எந்தப் பிரச்சினையாலும் பாதிக்கப்படாதவர்களாகத்தான் எமது அரசியல் தலைமைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசியல்கைதிகள் உடனடியாக விடுதலையாக வேண்டும் என்பதோ, காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதோ கட்டாயம் கிடையாது. இன்னொரு விதத்தில் பார்த்தால் அவர்களுக்கு இந்தப் பிரச்சினைகள் எல்லாம் அப்படியே இருக்க வேண்டும். அவர்களும் போராட்டம் நடத்தித் தங்களைத் தக்க வைக்கவும் வேண்டும். மக்களுக்குள்ளிருந்து தலைமைகள் உருவாகும்வரை இந்தநிலை மாறாது என்றுதான் நினைக்கிறன்'' - என்றான்.

''கைதிகள் உண்ணாவிரதம் இருந்து போராடினதாலை இந்தப் பிரச்சினை இன்னும் சூடாகவே இருக்கு. இல்லாவிட்டால் அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையைத் தூக்கிப் பிடிச்சபடி ஆளையாள் மாறி மாறி சேறடிக்கத் தொடங்கியிருப்பினம்.'' - என்று ஊர்வம்பைத் தடம் மாற்றினான் ஜீவன்.

''தமிழ் மக்கள் பேரவை ஒரு தீர்வுத் திட்டத்தை உருவாக்கித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கையளித்தது என ஞாபகம். இப்ப வந்திருக்கிற அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் அந்தத் தீர்வுத் திட்ட யோசனைகளும் உள்வாங்கப்பட்டிருக்கோ'' என்று அப்பாவியாகக் கேட்டார் ஏரம்பர்.

''அதெல்லாம் எந்தப் பழைய காகிதக்கடையிலை இப்ப இருக்குதோ?'' என்று சிரித்தபடியே சொன்னான் ஜீவன்.

''அப்பிடிச் சொல்லக்கூடாது ஜீவன்'' என்று நண்பனைக் கண்டித்த ரூபன், ''பேரவையும் உபகுழுவை அமைச்சு, அறிவுரைகளை உள்வாங்கி, திட்ட வரைபொன்றைத் தயாரித்து, அதை மக்கள் பார்வைக்கு வைச்சுத் திருத்தங்கள் செய்து வெளியிட்டது. அதோடை, சர்வதேசச்சமூகத்திடமும், அரசமைப்புச் சபையில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும் கையளித்திருந்தது. இவ்வளவு வேலை பாத்தவையை குறைவாகக் கதைக்கக் கூடாது'' என்று பரிந்து கதைத்தான்.

''அதெல்லாம் சரிதான் மச்சான். இடைக்கால அறிக்கை, பேரவையின் திட்டத்தை அடியோடு நிராகரித்து விட்டதாமே. கப்பல் எத்தனை புயலைச் சந்தித்தது என்பது பிரச்சினையில்லையே. அது கரையை அடைந்ததா என்பதுதானே முக்கியம்'' என்றான் ஜீவன்.

''ஜீவன் சொல்லுறதிலையும் நியாயம் இருக்குத்தானே'' என்று சொன்ன பேப்பர்தம்பி, ''ரிசாட் பதியுதீன், டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களின் பரிந்துரைகள் எல்லாம் இடைக்கால அறிக்கையில் இணைக்கப்பட்டிருக்கு. ஆனால், 'எழுக தமிழ்' பேரணிகளின் மூலம் தமிழ்த் தேசிய இனத்தின் பிரதிநிதியாகத் தாம் நிரூபிக்கப்பட்டதாகச் சொல்லும் தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டம் 'கழிவறைக்காகிதமாக' கருதப்படும் நிலையில் இருப்பது கவலைக்குரியது. உண்மையில் அந்த ஆதங்கம் பலருக்கும் இருக்கு என்பதை மறுக்க முடியாது'' என்று தனது கருத்தைச் சொன்னான்.


''எவ்வளவு காலத்துக்குத்தான் வாயாலை சுடுற வடையிலை பசியாறும் என்று நாங்களும் நம்புவது'' என்று கடுப்படித்தாள் செல்லாச்சி.

''நாடு நாடாகச் சென்று அரசுக்கு ஆலவட்டம் பிடித்து விட்டு, யாழ்ப்பாணத்தில் மட்டும் ஜனாதிபதியின் நிகழ்ச்சியைப் புறக்கணிப்பதற்கும், எழுக தமிழ் பேரணிகளை நடத்தி மீசையை முறுக்கிக் கொண்டே, மாற்று வழியை மறுதலிப்பதற்கும் அதிக வித்தியாசம் இல்லை என்பது தான் மக்களின் அங்கலாய்ப்பாக இருக்கிறது. போற போக்கில் 'ஈழத்து ரஜினி' என்று பேரவைக்காரர் பெயர் வாங்குவினம் போல இருக்கு'' என்று சொன்னான் பேப்பர்தம்பி.

அதைக்கேட்டுப் புன்னகைத்த வாத்தியார், ''இன்றையநிலையில் அரசியல் போராட்ட வழியிலேயே ஈழத்தமிழருக்கான தீர்வு சாத்தியம். அதேசமயம் சர்வதேச நலன்களை முற்றுமுழுதாகப் புறந்தள்ளியும் தீர்வை அடைந்து விடமுடியும் என்று நான் நம்பவில்லை. ஆனால், இங்கு தீர்வைப் பெறுவதில் மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு தீர்வு பெறப்படுகிறதா? அல்லது ஈழத் தமிழருக்கான தீர்வைப் பெற்றுக் கொடுத்த பெயர் தமக்கு வந்தால் போதும் என்று நினைக்கிறார்களா? அல்லது தமது சுய இலாபத்துக்காகத் தமிழர்களிடம் தீர்வைத் திணிக்கத் தரகர்களாகச் செயற்படுகிறார்களா? அல்லது எப்படியாவது நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிச்சுகம் அடைந்தால் போதும் என்று அவாவில் திரிகின்றார்களா? என்பவைதான் எங்கள் அரசியல் தலைமைகள் தொடர்பாக மக்களிடம் எழுகின்ற குழப்பம். இது மக்களை அரசியல் ஆர்வமற்றுப் போகச் செய்திருக்கிறது. இனியும் இந்த நிலைமை தொடர்வது ஈழத் தமிழர்களை மீட்சியே அற்ற நிலைக்குத்தான் தள்ளி விடும்'' என்று கவலையுடன் சொல்லி விட்டு நடக்கத் தொடங்கினார்.

மற்றவர்களும் அவரைத் தொடரவே, கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி.

சந்தியடி அமைதியானது.



# முழு உலகையே திகைக்க வைத்த புரட்சியாளர் சேகுவேரா

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

1953 ஜுலையில் மீண்டும் பயண மொன்றைத் தொடங்கிய சேகுவேரா, இம்முறைபொலீவியா, பெரு, ஈக்குவடோர், பனாமா, கொஸ்தாரிக்கா, நிக்கராகுவா, ஹொண்டுரோஸ், எல் சல்வடோர் ஆகிய நாடுகளுக்குச் சென்றார். அதே ஆண்டு டிசெம்பரில் சேகுவேரா குவாதமா லாவுக்குச் சென்றார். அங்கே மக்களாட்சி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட அரசு ஒன்றுக்குத் தலைமை தாங்கிய குடியரசுத் தலைவர் ஜாக்கோபோ ஆர்பென்ஸ் குஸ்மான் என்பவர் நிலச் சீர்திருத்தங் களின் மூலமும் பிற நடவடிக்கைகளாலும் பெருந்தோட்ட (latifundia) முறையை ஒழிப்பதற்கு முயன்று கொண்டிருந்தார். உண்மையான புரட்சியாளனாக ஆவ தற்குத் தேவையான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் குவேரா, குவாதமாலாவிலேயே தங்கிவிட முடிவு செய்தார்.

குவாதாமாலா நகரில், சே குவே ராவுக்கு ஹில்டா கடேயா அக்கொஸ்தா என்னும் பெண்ணின் பழக்கம் கிடைத் தது. இவர் பெரு நாட்டைச் சேர்ந்த ஒரு பொருளியலாளரும், இடதுசாரி சார் புள்ள அமெரிக்க மக்கள் புரட்சிகர கூட்ட மைப்பு (American Popular Revolutionary Alliance) என்னும் இயக்கத்தின் உறுப்பினரும் ஆவார். இதனால் அவருக்கு அரசியல் மட்டத் தில் நல்ல தொடர்புகள் இருந்தன. இவர் ஆர்பென்சின் அரசின் பல உயரதிகாரி களைச்சேகுவேராவுக்கு அறிமுகப்படுத்தி னார். அத்துடன், பிடல் காஸ்ட்ரோவுடன் தொடர்புகளைக்கொண்டிருந்தவர்களும், கியூபாவைவிட்டு வெளியேறி வாழ்ந்து வந்தவர்களுமான தொடர்புகளும் சேகு வேராவுக்குக் கிடைத்தன. இந்தக் காலத்திலேயே 'சே' என்னும் பெயர் இவருக்கு ஏற்பட்டது. 'சே' என்பது நண்பர் அல்லது தோழர் என்னும் பொருள் கொண்ட ஆர்ஜென்டீனச் சொல்லாகும்.

சில காலத்தின் பின்னர் சேகுவேரா தன்னை பிடல் காஸ்ட்ரோவின் போராட்ட இயக்கத்தில் இணைத்துக்கொண்டார். அந்த இயக்கம் 1959 இல் கியூபாவின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது.



அதன் பின்னர் கியூபாவின் மத்திய வங்கியின் தலைவராக 14 ஆண்டுகள் பணியாற்றினார். அந்தக் காலகட்டத்தில் கரந்தடிப் போர் முறை பற்றிய பல கட்டுரை களையும், புத்தங்களையும் எழுதியிருந் தார்.

1964 டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி அன்று கியூபாவின் பிரதிநிதியாக ஐக்கிய நாடுகள் அவையின் 19 ஆவது பொது அமர்வில் உரையாற்றினார். பின்னர், கொங்கோ- கின்சாசா (தற்போது கொங்கோ ஜனநாயகக் குடியரசு) மற்றும் பொலிவியா போன்ற நாடுகளின் சோச லிசப் போராட்ட வளர்ச்சிக்குத் தனது பங்களிப்பை அளிப்பதற்காக 1965 ஆம் ஆண்டில் கியூபாவில் இருந்து வெளியேறினார்.

சே 1966 ஆம் ஆண்டின் கடைசிகளில் கெரில்லாப் போரை வழி நடத்தும் பொருட்டு உருகுவே நாட்டு போலி பாஸ் போர்ட்டுடன் பொலிவியா நாட்டுக்குள் நுழைந்தார். பல காரணங்களால் பொலிவியா நாட்டைத் தேர்ந்தெடுத்தார் என்று நம்பப்படுகிறது.

அமெரிக்கா பொலிவியாவைவிட கரிப்பியன் பேசின் நாடுகளே தங்கள் பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கக் கூடும் என்று நம்பியதும், அதனால் அமெரிக்காவின் பார்வை பொலிவியா மீது அவ்வளவு தீர்க்கமாக விழவில்லை என்பதும் ஒரு காரணம். இரண்டாவதாக பொலிவியாவின் ஏழ்மையும் அங்கு நிலவிய சமூக மற்றும் பொருளாதார நிலைகளும் எந்நேரமும் அங்கு புரட்சி வெடிக்கச் சாதகமாக இருந்தன. மூன் றாவதாக பொலிவியா ஐந்து பிற நாடு களுடன் தன் எல்லையைப் பகிர்ந்து கொண்டிருந்தது. பொலிவியாவில் கெரில்லாப் போராட்டம் வெற்றி பெறுமே யானால் அதை மற்ற ஐந்து நாடுகளுக் கும் பரவச் செய்துவிடலாம் என்று குவேரா கருதினார்.

ஆனால், ஃபிடெல்காஸ்ட்ரோ தன்னை வஞ்சித்து விட்டார் என சேகுவேரா மிகவும் வருந்தினார் என 1998 ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற பொலிவிய இராணுவ அதி காரி ஒருவர் ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.

பொலிவியாவில் சி.ஐ.ஏ. மற்றும் அமெ ரிக்க சிறப்பு இராணுவத்தினது இராணுவ நடவடிக்கை ஒன்றின்போது சே கைது செய்யப்பட்டார். பொலிவிய இராணுவத்தி னரால் வல்லெகிராண்டுக்கு அருகில் உள்ள லா கிகுவேரா என்னுமிடத்தில் கேரி ப்ராடோ சால்மோன் என்பவரின் தலைமையில் ஒக்ரோபர் 9, 1967 இல் சே குவேரா கொல்லப்பட்டார். சாட்சிகள் மற்றும் கொலையில் பங்குபற்றியவர் களிடமிருந்து கிடைத்த தகவலின்படி, சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல் கொல் லப்பட்டமை உறுதிப்படுத்தப்படுகிறது. கைதியாக அகப்பட்டு நின்ற நேரத்தில் கூட மரணத்தை வரவேற்றார். தன்னை கொல்லவந்தவனைப் பார்த்தும் "ஒரு நிமிடம் பொறு நான் எழுந்து நிற்கிறேன் பிறகு என்னைச் சுடு!" என்று கூறி எழுந்து நின்றிருக்கிறார். (காலில் அப்போது குண்டடிபட்டிருந்தது)

அவரது மரணத்தின்பின், சே குவேரா உலகிலுள்ள சோசலிசப் புரட்சி இயக்கங் களால் மிகவும் மரியாதைக்குரியவராகக் கொண்டாடப்படுகிறார். நினோடிகுஸ்மான் என்ற அந்த அதிகாரி, குவே ராவை சுட் டுக் கொல்வதற்கு முன்பு அவனிடம் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார் எனவும் அப்போது சே அவனுடைய மனக் குமுறலை வெளியிட்டார் என்றும் கூறினார். தான் பெரு நாட்டில் புரட்சி செய்ய முடிவெடுத்தார் எனவும் ஆனால், காஸ்ட்ரோ தான் தன்னை வற்புறுத்தி பொலிவிய நாட்டில் கலகம் விளைவிக்கக் கூறினார் எனவும் சே குவேரா கூறினார் எனத் தகவல் வெளியிற்று. மேலும் சே குவேரா பெரு நாட் டின் விவசாயிகள் தன்னுடைய புரட்சிக்கு ஆதரவு கொடுத்தி ருப்பார்கள் என்றும் பொலிவிய நாட்டில் விவசாய மறுமலர்ச்சித் திட்டத்தால் மக் கள் அவ்வளவு திருப்தியடையாதமை யால் அவர்களின் ஆதரவு எதிர்பார்த்த அளவுக்குக் கிடைக்கவில்லை என்றும் கூறினார் என அந்த அதிகாரி கூறியிருந்தார்.

## சே குவேராவின் நீண்ட புரட்சிப் பயணம்

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

★1957 மே 27, 28- யுவேரப் போர். சூனு 5- இராணுவத்தினுடைய நான்காவது அணித் தளபதியாகிறார்.

★1958 ஜுலை - புரட்சிப்படை பாடிஸ்டாவின் படைகளைத் தோற்கடித்து முன்னேறுகிறது.

★டிசெம்பர் 28 - லாஸ் வில்லாஸின் தலைநகரான சாண்டா கிளாராவின்மீது சே போர் தொடுக்கிறார்.

★1958 ஒகஸ்ட் 21- சிரோ ரிடன்டோ எட்டாவது அணியின் தலைவராகப் பொறுப்பேற்று லாஸ் வில்லாஸ் மாநிலத் துக்குப் போக உத்தரவு.

★ஒக்ரோபர் 10 ஆம் நாளன்று, எஸ்கம்ப்ரே மலைகளை, அவரின் படைப் பிரிவு அடைகிறது.

★டிசெம்பர் சான்டா கிளாரா முற்றுகை நடைபெறுகிறது. அந்த மாதம் 28-31 நாள்வரை தலைமை ஏற்றுப் போரை நடத்துகிறார்.

★ 1959

ஜனவரி 1 – சாண்டா கிளாரா, சேவின் வசமாகிறது. பாடிஸ்டா ஓடித்தப்பிவிடுகிறார். சே ஹவானாவை நோக்கி முன்னேறு கிறார்.

ஜனவரி 2 - காஸ்ட்ரோ அறிவித்த பொது வேலை நிறுத்தத்தால் நாடே ஸ்தம்பிக்கிறது.

ஜனவரி 3 - சே ஹவானாவை அடைந்து கபானா கோட்டையைக் கைப் பற்றுகிறார்.

ஜனவரி 8 - காஸ்ட்ரோ ஹவானா வந்து சேர்கிறார்.

மே 17 - உழவுத்துறையை முன் னேற்றுவதற்கான திட்டங்கள் அறிவிக் கப்படுகின்றன.

ஜுன் 2 - சேகுவும், அலெய்டா மார்ச் ஸும் திருமணம் செய்துகொள்கிறார்கள்.

ஜுன் 12 – வணிகம் மற்றும் தொழில் நுட்ப ஒப்பந்தங்களைத் தீர்மானிப்பது தொடர்பாக சே நீண்ட பயணத்தை மேற்கொண்டு ஐரோப்பா, ஆபிரிக்கா, மற் றும் ஆசிய நாடுகளுக்குச் செல்கிறார்.

ஒக்ரோபர் 7 – உழவுத்துறையின் மறுமலர்ச்சிக்கான தேசிய நிறுவனத்தில் சேதொழிற்றுறைக்குதலைவராக நியமிக் கப்படுகிறார்.

நவம்பர் 26 - சே, தேசிய வங்கியின் தலைவராக நியமிக்கப்படுகிறார்.

1960

ஒக்ரோபர் – சோவியத் கூட்டமைப்பு, கிழக்கு ஜேர்மனி, செக்கோஸ்லோ வேகியா, சீனா, வடகொரியா ஆகிய நாடுகளுக்கு இரண்டுமாத சுற்றுப் பயணத்தை மேற்கொள்கிறார்.

நவம்பர் 24 - சே - அலெய்டாவின் முதற்குழந்தை அலேய்தித்தா பிறக்கி றாள்.

1961

ஜனவரி 3 - அமெரிக்க அரசு கியூபாவு டனான ராஜதந்திர உறவுகளை முறித் துக்கொள்கிறது.

பெப்ரவரி 23- சேவை அமைச்ச ராக்கி தொழிற்றுறை அமைச்சகம் நிறு வப்படுகிறது.

ஓகஸ்ட் 8 - உருகுவேயில் நடை பெற்ற அமெரிக்க நாடுகள் அமைப்பின் கருத்தரங்கில் கியூபாவின் சார்பில் சே உரை நிகழ்த்துகிறார்.

1962

மே 20 -சேவுக்கும் அலெய்டாவுக் கும் கமீலா பிறக்கிறான்.

ஒகஸ்ட் 27 - சே சோவியத்துக்குப் பயணம் மேற்கொள்கிறார்.

1963

ஜுன் 14- சே வுக்கும் அலெய்டாவுக் கும் சிலியா பிறக்கிறாள்.

ஜுலை 3 - பிரான்ஸிடம் இருந்து அப்போதுதான் சுதந்திரம் பெற்ற அல் ஜீரியாவுக்கு பயணம் மேற்கொண்டு அந்நாட்டின் அதிபர் அகமது பென் பெல் லாவை சந்திக்கிறார்.

1964

பெப்ரவரி 24 - சே வுக்கும் அலெய் டாவுக்கும் எர்னஸ்டிடோ பிறக்கிறான்.

மார்ச் 14 -சே கியூபா திரும்புகிறார்.

ஒக்ரோபர் 31 – காங்கோவின் புரட் சிப்படையினருக்குப் பயிற்சி தர ஒரு கியூப படைக்குழுவினரோடு தாமும் காங்கோ புறப்படும் சே, விடை பெற்றுக்கொள்கிறார் என ஃபிடல் காஸ்ட்ரோவுக்கு கடிதம் எழுதுகிறார்.

டிசெம்பர் – காங்கோ படையெடுப்பு தோல்வியடைந்ததன் பிறகு சே இரகசிய மாகக் கியூபாவுக்குத் திரும்பி வருகிறார். பொலிவியா படையெடுப்புக்காக வீரர் களைத் திரட்டுகிறார்.

★1966

நவம்பர் - சே மாறு வேடத்தில் பொலிவியா போய் சேருகிறார்.

★1967

மார்ச் 23- முதல் கரந்தடி தாக்குதலில் சேவின் அணி வெற்றிகரமாக பொலி விய ராணுவப் பிரிவைச் சிதறடிக்கிறது.

ஏப்ரல் 16 – ஆசிய, ஆபிரிக்க, லத்தீன மெரிக்க நாடுகளின் ஒற்றுமைக்காக நடத்தப்பட்ட முக்கண்டக் கருத்தரங்கில் இரண்டு மூன்று அல்ல, பல வியட்நாம் களை படைக்கலாம் என்ற சேவுடைய அறிக்கை வாசிக்கப்படுகிறது.

ஓகஸ்ட் 4 - ஒரு விட்டோடி, பொலி விய படைக்குத் தலைமை தாங்கி நடத்தி சே அணியின் ஆயுதத் தளத்தை நோக்கி முன்னேறுகிறான்.

செப்ரெம்பர் 26 - கரந்தடி வீரர்களை பொலிவிய அரச படைகள் சுற்றிவளைக் கின்றன.

ஒக்ரோபர் 8 – மிஞ்சியிருந்த சே உட் பட 17 வீரர்களும் பொறிக்குள் அகப்பட் டுக்கொள்கிறார்கள். போரில் காயமடையும் சே கைதுசெய்யப்படுகிறார்.

ஒக்ரோபர் 9 - சே கொலை செய்யப் படுகிறார்.

அவரது இறுதிக்கூற்று வருமாறு:- என்னைக் கொல்வதற்காகவே இங் குள்ளாய் என்பது எனக்குத் தெரியும். சுடு, கோழையே.., ஓர் ஆளைதான், நீ கொல்லப் போகிறாய்

1968

ஜுலை 1 - பிடல் காஸ்ரோவின் முன்னுரையுடன் சேவின் பொலிவிய நாட்குறிப்பு கியூபாவில் வெளியிடப் படுகிறது.

1995-கொலை செய்து புதைக்கப் பட்ட சேவினதும் மற்ற இரு வீரர்களதும் உடலங்களைத் தேடியெடுக்கும் பணி தொடங்குகிறது.

1997

ஜுன் 28 – பொலிவியாவின் வேலே கிராண்ட் அருகே கடைா தே அர்ரோயாவில் ஏழு வீரர்களின் சடலங்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

ஜுலை 14 - சடல எச்சங்கள் கியூ பாவை வந்தடைகின்றன.

ஒக்ரோபர் 13 – ஹவானா புரட்சி சதுக்கத்தில் விழா நடைபெறுகிறது.

ஒக்ரோபர் 14- சேவின் சடல எச்சங்கள் சாண்டா கிளாராவுக்கு மாற்றப்படுகின் றன.

# ஈரானுடன் அணுசக்தி ஒப்பந்தம் வரலாற்றில் மோசமான சம்பவம்




## ட்ரம்ப் தெரிவிப்பு

வொஷிங்டன்,ஒக்.15

ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை முறித்துக்கொள்வதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்து வருகிறது. இந்த நிலையில் கடந்த 2015ஆம் ஆண்டு ஈரானுடன் அமெரிக்கா அணு ஆயுத ஒப்பந்தம் செய்துகொண்டது. இதைனையடுத்து, அணுத் திட்டம், அணு ஆயுதத் தயாரிப்பு உள்ளிட்ட விடயங்களில் அமெரிக்காவிடம், ஈரான் சரணடைந்தது. இதன் மூலம் பல ஆண்டுகளாக நீடித்த இந்தப் பிரச்னையில் சுமுகமாக தீர்வு எட்டப்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்தநிலையில், ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தம் முறிந்துவிட்டது என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் திடீரென அறிவித்தார். இதுதொடர்பாகவெள்ளை மாளிகையில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய ட்ரம்ப், ஈரானுடனானஅணுஒப்பந்தம் முறிந்துவிட்டது. ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தம் செய்துகொண்டது அமெரிக்க வரலாற்றில் மோசமான ஒரு சம்பவம். அது இன்றுடன் முடிந்து விட்டது. - என்றார்.

ஈரான் மீது மேலும் சில புதிய தடைகள் விதிக்க முடிவெடுத்துள்ளேன் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார். வடகொரியாவுடன் இணைந்து ஈரான் அணு ஆயுத சோதனைகளில் ஈடுபட்டுவருகிறதா? என்பதை விசாரிக்க வேண்டும் எனவும் அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

## இந்தியா- இலங்கை கூட்டு இராணுவப் பயிற்சி

இந்தியா-இலங்கை இராணுவம் இடையே கூட்டு பயிற்சி, மகாராஷ்டிர மாநிலம், புணேயில் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கியது.

2013ஆம் ஆண்டு முதல் இருநாட்டு இராணுவத்தினருக்கு இடையே இந்தப் பயிற்சி நடத்தப்பட்டு வருகின்றது. அதன்படி, தற்போது நடைபெறுவது 5ஆவது பயிற்சி ஆகும். இதற்கு 'மித்ர சக்தி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி மொத்தம் 14 நாள்கள் நடைபெறவுள்ளது. பயிற்சியில், பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவுள்ளது.

இதுதொடர்பாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில், பயங்கரவாதத்தால் எழும் சவாலை இந்தியாவும், இலங்கையும் நன்றாகப் புரிந்துகொண்டுள்ளன என்ற செய்தியை இந்தப் பயிற்சி வெளிப்படுத்தும்; மேலும், பயங்கரவாத அச்சுறுத்தலை இருநாடுகளும் ஒன்றுடன் ஒன்று உறுதுணையாக இருக்கும் என்ற செய்தியையும் இந்தப் பயிற்சி வெளிப்படுத்தும் என்று தெரிவித்துள்ளார்.

## நடிகர் கமலஹாசன் குறித்து மகள் ஸ்ருதி பேட்டி

நடிகர்கமலஹாசன்அரசியலுக்கு வருகின்றமை தொடர்பாக அவரது மகளும், நடிகையுமான ஸ்ருதி ஹாசன் கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் கூறியவை வருமாறு:-

எனது தந்தை அரசியலுக்கு வருவாரானால் அவருக்கு நான் ஆதரவு அளிப்பேன்.

அரசியல் மட்டுமல்ல அப்பா என்ன செய்தாலும் அவருக்கு நான் ஆதரவாக இருப்பேன்.

அவர் எந்த ஒரு செயலை செய்தாலும் முழு அர்ப்பணிப்புடன் செய்வார், அதனால் அரசியலிலும் சிறந்து விளங்குவார் எனக் கூறியுள்ளார்.

மேலும் தனக்கு அரசியல் பற்றி அதிகம் தெரியாத காரணத்தால் அது பற்றி தன்னால் கருத்துக் கூற முடியாது என்று தெரிவித்துள்ளார். (ப)

## புதுடில்லியில் விவசாயிகள் 90 ஆவது நாளாக போராட்டம்



புதுடில்லி,ஒக்.15

தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கம் சார்பில் டில்லியில் நடந்து வரும் தமிழகவிவசாயிகளின்போராட்டம் நேற்றுமுன்தினம்90ஆவது நாளை எட்டியுள்ளது.

தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கம் சார்பில் டில்லியில் நடந்து வரும் தமிழகவிவசாயிகளின்போராட்டம் நேற்றுமுன்தினம் 90ஆவது நாளை எட்டியது. தொடர்ந்து பல நாள்கள் போராட்டம் நடத்தியும் மத்திய அரசு கண்டுகொள்ளவில்லை என்று கூறி வருத்தம் தெரிவித்த விவசாயிகள் அதைப் போராட்டத்தில் வெளிப்படுத்தினர்.

பிரதமர் மோடி வேடம் அணிந்த ஒருவர் நாற்காலியில் அமர்ந்திருக்க, அய்யாக்கண்ணு உள்ளிட்ட விவசாயிகள் அவரது காலை வணங்கி மண்டியிட்டனர். இதே போல் பன்னாட்டு நிறுவன உரிமையாளர்என்றபெயர்ப்பலகையை கழுத்தில் தொங்கவிட்ட ஒருவர் உயரமான நாற்காலியில் அமர வைக்கப்பட்டிருந்தார்.

அதாவது, பிரதமர் மோடி பன்னாட்டு நிறுவனங்களை ஆதரித்து, விவசாயிகளைப் புறக்கணிப்பதை வெளிப்படுத்தும் வகையில் இந்த போராட்டம் அமைந்தது. (ப)

## தென் ஆபிரிக்க அதிபர் மீது 783 ஊழல் குற்றச்சாட்டுக்கள்



### விசாரிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு

கேப்டவுன்,ஒக்.15

தென் ஆபிரிக்க அதிபராக ஜேக்கப் ஷுமா மீது 783 ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கத் தென் ஆபிரிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தென் ஆபிரிக்க அதிபராக ஜேக்கப் ஷுமா பதவி வகித்து வருகின்றார். இவர் மீது 783 ஊழல் வழக்குகள் உள்ளன. இராணுவத்துக்கு போர் விமானங்கள், ரோந்து படகுகள் மற்றும் ஆயுதங்கள் வாங்கியதில் ஊழல் நடந்துள்ளது எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த 1999ஆம் ஆண்டு பிரான்ஸை சேர்ந்த ஒரு நிறுவனத்திடம் இருந்து இவற்றை வாங்கியுள்ளார் எனவும், வர்த்தகர் ஷபீர் ஷாயிக்கிடம் இருந்து கையூட்டு பெற்றுள்ளார் எனவும் புகார் கூறப்பட்டது. இக்குற்றச்சாட்டு கடந்த 2005ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டு எதிர்க்கட்சிகளால் கிளப்பப்பட்டது.

இவை தவிர பண மோசடி, பதவியை பயன்படுத்தி பலரை மிரட்டி பணம்பறித்தல்உள்ளிட்ட வழக்குகளும் இவர் மீது உள்ளன. இந்த வழக்குகள் கீழ் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. ஆனால்அவைதள்ளுபடி செய்யப்பட்டன.

அதையடுத்து கடந்த ஆண்டு எதிர்க்கட்சியான ஜனநாயக கூட்டணி அதிபர் ஜேக்கப் ஷுமா மீது உயர் நீதிமன்றத்தில் மீண்டும் வழக்கு தொடர்ந்தார். அதில் அவர் இந்த வழக்குகளை எதிர்கொள்ளவேண்டும். அது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் எனத் தீர்ப்பு கூறியுள்ளது.

இந்தத் தீர்ப்பு தனக்கு ஏமாற்றம் அளித்துள்ளதாகவும், அதை எதிர்ப்பதாகவும் ஷுமா தெரிவித்துள்ளார். (ப)

## சரக்கு கப்பல் மூழ்கி விபத்து: இந்தியர்கள் 11 பேர் உயிரிழப்பு

மணிலா,ஒக்.15

பிலிப்பைன்ஸ் கடல் பகுதியில் புயலில்சிக்கி மூழ்கிய சரக்குக் கப்பலில் சென்ற11இந்தியர்கள் பலியாகியுள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

ஹெங்ஹாங் பகுதியை சேர்ந்த 33,205 தொன் எடையுள்ள சரக்குக்கப்பல் பசுபிக் பெருங் கடல் பகுதி வழியாக சென்ற போது புயலில் சிக்கி, பிலிப்பைன்ஸ் எல்லையில் இருந்து சுமார் 280 கிலோ மீற்றர் தூரத்தில் நேற்று நீரில் மூழ்கியது.

கப்பலில் இருந்த 26 இந்தியர்களில் 15 பேர் மீட்கப்பட்ட நிலையில் காணாமல் போன 11 பேர் சாவடைந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் அவர்களின் உடல்களைத் தேடும் பணியில் ஜப்பான் நாட்டு கடலோரக் காவல் படையைச்சேர்ந்த இரு ரோந்துப் படகுகள் மற்றும் மூன்று விமானங்கள் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனஎன முதல் கட்டத் தகவல் வெளியாகியுள்ளது.

## யுனெஸ்கோ தலைவர் தேர்தல் போட்டி; பிரான்ஸின் ஆட்ரே அஸவுலே வெற்றி

பாரிஸ்,ஒக்.15

யுனெஸ்கோ அமைப்பின் புதிய தலைவராகப் பிரான்ஸின் முன்னாள் கலாசாரத்துறை அமைச்சர் ஆட்ரே அஸவுலே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.


யுனெஸ்கோ, ஐக்கிய நாடுகள் அவையின் முக்கிய துணை நிறுவனங்களில் ஒன்று. இந்த நிறுவனம், இதன் உறுப்பு நாடுகளிடையே கல்வி, அறிவியல், பண்பாடு மற்றும் தொடர்புத் துறைகளில் ஒத்துழைப்பை ஊக்குவித்து வருகின்றது.

இந்த வகையான ஒத்துழைப்பால் உலகில் அமைதியையும், பாதுகாப்பையும் ஏற்படுத்தி, அதன் மூலம் இன, மொழி, மத, பால் வேறுபாடின்றி, உலக மக்கள் அனைவருக்குமான நீதி, சட்ட விதிமுறைகள், மனித உரிமைகள் மற்றும் ஐக்கிய நாடுகள் உரிமை ஆவணத்தில் அறிவிக்கப்பட்டிருக்கும் அடிப்படை சுதந்திரம் ஆகியவற்றுக்கு உலகளாவிய ரீதியில் கிடைக்கும் மதிப்பை உறுதி செய்வதே இந்த அமைப்பின் நோக்கமாகும்.

இந்த அமைப்பின் தலைவராகக் கடந்த 2009 ஆம் ஆண்டு பல்கேரியாவின் இரினா பொகொவா தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது பதவிக்காலம் முடியவுள்ள நிலையில் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது, இதில் யுனெஸ்கோ அமைப்பின் உறுப்பு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்று வாக்களித்தனர். இந்தத் தேர்தலில் பிரான்ஸின் முன்னாள் கலாசாரத்துறை அமைச்சர் ஆட்ரே அஸவுலேவும், அவரை எதிர்த்து கட்டாரின் ஹமத் பின் அப்துல்அஜிஸ் அல்-கவாரியும் போட்டியிட்டனர்.

வாக்குப்பதிவு முடிந்ததும் வாக்குகள் எண்ணப்பட்டன. இதில் ஆட்ரேவுக்கு 30 வாக்குகளும், அப்துல்அஜிஸுக்கு 28 வாக்குகளும் கிடைத்தன. இதையடுத்து ஆட்ரே வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டது.

# நிர்வாண மோனாலிசா ஓவியம்? கிடைத்தது பிரான்ஸில்





இத்தாலிய மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய முக்கிய ஓவியர் லியனார்டோ டாவின்ஸி (1452-1519). இவரது உலகப் புகழ் பெற்ற ஓவியமே மோனாலிஸா. துணி வியாபாரியான ஃப்ரான்செஸ்கோ டெல் ஜியோ கொண்டோ மனைவி லிசா கெரார்டினியின் ஓவியமே இது என்று நம்பப்படுகிறது.

கடந்த 150 ஆண்டுகளாக ஒரு கலைத் தொகுப்பில் காணப்படும், ''மொன்னா வண்ணா'' என அறியப்படும் இந்த ஓவியம் ஏற்கெனவே லியனார்டோ டாவின்ஸியின் ஸ்டுடியோவில் இருந்தது எனக் கூறப்படுகிறது.

தற்போது, டாவின்ஸியே இந்த இரண்டையும் வரைந்திருப்பார் என்று கூறுவதற்குப் போதிய தகவல்கள் கிடைத்திருக்கின்றன என வல்லுநர்கள் கூறுகின்றனர்.

பாரிஸில் உள்ள புகழ்பெற்ற லோவ்ரீ அருங்காட்சியகத்தில் இந்த ஓவியத்தை ஆய்வு செய்த அருங்காட்சியகக்காப்பாட்சியர்கள் குறைந்தபட்சம் இந்த ஓவியத்தின் ஒரு பகுதியையாவது டாவின்சி வரைந்திருப்பார் என்று நம்புகிறார்கள்.

வடக்கு பாரிஸில் உள்ள சான்டில்லி அரண்மனையில் இயங்கும் கோண்டே அருங்காட்சியகத்தில் உள்ள மறுமலர்ச்சிக் கால ஓவியங்களின் தொகுப்பில் 1862 முதல் இந்த ஓவியம் இருந்தது.

இத்தாலிய மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய முக்கிய ஓவியர் லியனார்டோ டாவின்ஸி (1452-1519). இவரது உலகப் புகழ்பெற்ற ஓவியமே மோனாலிஸா. துணி வியாபாரியான ஃப்ரான்செஸ்கோ டெல் ஜியோ கோண்டோ மனைவி லிசா கெரார்டினியின் ஓவியமே இது என்று நம்பப்படுகிறது.

இந்த ஓவியம் வெளுத்துப் போனதல்ல. தமது கடைசி காலத்தில் மோனாலிஸாவோடு கூடவே டாவின்ஸ் வரைந்த ஓவியங்கள் எவை என்பதை ஆராய்ந்து வருகிறோம், என்கிறார் காப்பாட்சியர் மத்தியூ டெல்டிக்யூ.

உயர்ந்த தரமுள்ள இந்த ஓவியம், 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தை, அதாவது டாவின்ஸியின் காலத்தைச் சேர்ந்தது என லோவ்ரீ அருங்காட்சியகத்தின் பழம்பொருள் காப்பு வல்லுநர் மோட்டின் உறுதி செய்துள்ளார்.

இதுவும் மோனாலிஸா என்று கூற டெல்டிக்யூ அடுக்கும் காரணங்கள்: கைகளும், உடம்பும் ஒன்றுபோலவே உள்ளன. படங்களின் அளவும் ஏறத்தாழ ஒன்று. இந்தப் படத்தில் உருவத்தைச் சுற்றிலும் இடப்பட்டுள்ள சிறு துளைகள், இந்த ஓவியத்தை கேன்வஸில் படியெடுத்திருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன.

அதே நேரம் இந்த ஓவியத்தின் தலைக்குமேல் காணப்படும் தீட்டல்கள் வலதுகை பழக்கம் உடையவர் வரைந்ததைப் போல உள்ளன. ஆனால், டாவின்ஸி இடது கைப் பழக்கமுடையவர் என்கிறார் மோட்டின். இது தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுக்க சிறிது காலம் பிடிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில்

## பெற்றோல் - டீசல் கார்களுக்குத் தடை!



ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் வருகிற 2020ஆம் ஆண்டு முதல் பெற்றோல் மற்றும் டீசல் கார்களைப் பயன்படுத்தத் தடை விதித்துள்ளது.

காற்றில் பரவும் காபனீரொட்சைட் அளவின் அதிகரிப்புக் காரணமாகப் பருவ நிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே, காற்றில் காபனீரொட்ஸைட் கலப்பதைத் தடுக்கத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக கரும்புகையை வெளியிடும் பெற்றோல் மற்றும் டீசல் எரிபொருள் பயன்படுத்தும் கார்களைத் தடை செய்யச் சர்வதேச நாடுகள் திட்டமிட்டுள்ளன.

இங்கிலாந்து, ஜேர்மனி உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகளில் வருகிற 2020ஆம் ஆண்டில் இருந்து பெற்றோல் மற்றும் டீசல் கார்கள் தயாரிக்கவும், பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஏற்றபடி இப்போதே அதற்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளத் தொடங்கிவிட்டன.

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் வருகிற 2020 ஆம் ஆண்டில் இருந்து GAS மூலம் இயங்கும் கார்களை இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதற்காக ஒத்துழைப்பு அளிக்கும் வகையில் லண்டனில் உள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் வருகிற 2020ஆம் ஆண்டு முதல் இந்த வகைக் கார்களைப் பயன்படுத்தத் தடை விதித்துள்ளது.

இதற்கிடையே பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் காற்று மாசுபடுவதைத் தடுக்க 2030ஆம் ஆண்டு முதல் GAS மூலம் இயங்கும் கார்களைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான அறிவிப்பை பாரீஸ் மேயர் ஆன்னி ஸ்ரீஹிடால்கோ நேற்றுமுன்தினம் வெளியிட்டார். அதற்கு வசதியாக வருகிற 2024ஆம் ஆண்டு முதல் அனைத்து டீசல் கார்களுக்கும் தடை விதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# இளம் பந்துவீச்சாளர்களின் உதவியோடு இலங்கையை வீழ்த்தியது பாகிஸ்தான்

ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி 83 ஓட்டங்களால் இலங்கையை வீழ்த்தியுள்ளதுடன் தொடரிலும் 1:0 என முன்னிலை அடைந்துள்ளது.

டுபாய் சர்வதேச மைதானத்தில் ஆரம்பமாகியிருந்த இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் உபுல் தரங்க முதலில் களத்தடுப்பைத் தேர்வுசெய்தார்.

டெஸ்ட் தொடரை 2:0 எனக் கைப்பற்றிய இலங்கை அணியில் ஒரு நாள் போட்டியில் இரண்டு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. உபாதைக்கு உள்ளாகிய அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் நுவன் பிரதீப் ஆகிய வீரர்களுக்குப் பதிலாக தினேஷ் சந்திமால் மற்றும் லஹிரு கமகே ஆகிய வீரர்கள் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

மறுமுனையில் பாகிஸ்தான் அணியில் ஒரு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. காயம் காரணமாக இந்த ஒரு நாள் தொடரில் விளையாடும் வாய்ப்பை முழுமையாக இழந்த மொஹமட் அமீருக்குப் பதிலாக இடது கை வேகப்பந்து வீச்சாளர் ரும்மான் ரயீஸ் அழைக்கப்பட்டிருந்தார்.

தொடர்ந்து பந்துவீச்சுக்குச் சாதகமான ஆடுகளத்தில் பாகிஸ்தான் வீரர்கள் தமது துடுப்பாட்டத்தை ஆரம்பம் செய்திருந்தனர். பக்கர் ஷமான் மற்றும் அஹ்மட் ஷேசாத் ஆகியோரால் தொடங்கப்பட்ட பாகிஸ்தானின் இன்னிங்ஸ் ஆரம்பத்தில் மெதுவாகவே காணப்பட்டிருந்தது.

போட்டியின் நான்காவது ஓவரை வீசிய வலது கை வேகப்பந்து வீச்சாளரான லஹிரு கமகே பாகிஸ்தானின் முதல் விக்கெட்டை அகில தனஞ்சயவின் பிடியெடுப்போடு பதம்பார்த்தார். இதனால் இலங்கை பந்து வீச்சாளர்களை சந்திக்க மிகவும் சிரமப்பட்ட அஹ்மட் ஷேசாத் ஓட்டமேதுமின்றி மைதானத்தைவிட்டு வெளியேறினார். போட்டியின் ஆரம்பத்தில் கிடைக்கப்பெற்ற இந்த விக்கெட் இலங்கைக்கு நல்லதோர் ஆரம்பத்தைத் தந்தது.

ஷேசாத்தின் விக்கெட்டை அடுத்து மற்றைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் புதிதாகக் களம் நுழைந்த பாபர் அசாமுடன் இணைந்து புதிய இணைப்பாட்டம் ஒன்றைக் கட்டியெழுப்பத் தொடங்கினார். 64 ஓட்டங்கள் வரையில் நீடித்த பாகிஸ்தானின் இரண்டாவது விக்கெட் இணைப்பாட்டம், அகில தனஞ்சயவால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. தனஞ்சயவால் பாகிஸ்தானின் இரண்டாம் விக்கெட்டாக வீழ்த்தப்பட்ட பக்கர் ஷமான் 45 பந்துகளுக்கு ஒரு சிக்ஸர் மற்றும் 4 பவுண்டரிகள் மற்றும் உள்ளடங்கலாக 43 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.



தொடர்ந்து சீரான இடைவெளியில் பாகிஸ்தான் தமது மூன்றாவது விக்கெட்டையும் பறிகொடுத்தது. எனினும், களத்தில் ஆட்டமிழக்காது நின்ற பாபர் அசாம் சொஹைப் மலிக்குடன் இணைந்து பெரியதோர் இணைப்பாட்டம் ஒன்றுக்கு வித்திட்டார். இந்த இரண்டு வீரர்களாலும் பாகிஸ்தானின் நான்காம் விக்கெட்டுக்காக அதிவலுவான 139 ஓட்டங்கள் இணைப்பாட்டமாக பகிரப்பட 50 ஓவர்கள் நிறைவில் பாகிஸ்தான் 6 விக்கெட்டுகளை இழந்து 292 ஓட்டங்களைக் குவித்துக் கொண்டது.

பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்டத்தில் பாபர் அசாம் தனது ஆறாவது ஒரு நாள் சதத்தோடு 131 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக 103 ஓட்டங்களை குவித்திருந்தார். அதேபோன்று அதிரடி துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய சொஹைப் மலிக் வெறும் 61 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 2 சிக்ஸர்கள் மற்றும் 6 பவுண்டரிகள் அடங்கலாக 81 ஓட்டங்களை விளாசியிருந்தார்.

சற்று மோசமான களத்தடுப்பைக் காட்டிய இலங்கை அணியின் பந்து வீச்சில் சுரங்க லக்மால் 47 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் அகில தனஞ்சய, லஹிரு கமகே, திசர பெரேரா மற்றும் ஜெப்ரி வன்டர்சேய் ஆகிய வீரர்கள் தலா ஒரு விக்கெட் வீதமும் பதம் பார்த்திருந்தனர்.

தொடர்ந்து வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட சற்று சவாலான இலக்கான 293 ஓட்டங்களை 50 ஓவர்களில் பெறப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நல்லதோர் ஆரம்பத்தைக் காட்டியிருந்த போதிலும் விரைவான முறையில் தமது முன் வரிசைத் துடுப்பாட்ட வீரர்களை இழந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான நிரோஷன் திக்வெல்ல இலங்கை அணியின் முதல் விக்கெட்டாக வெறும் 19 ஓட்டங்களுடன் ரும்மான் ரயீஸால் ஆட்டமிழக்கச்செய்யப்பட்டார். அதனை அடுத்துக் களம் நுழைந்த தினேஷ் சந்திமாலும் மீண்டும் சிறப்பாகச் செயற்பட்ட அதே ரயீஸால் வீழ்த்தப்பட்டிருந்தார். சந்திமாலின் விக்கெட்டுக்காக இலங்கை மூன்றாம் நடுவரின் உதவியை நாடிய போதிலும் அது பலன் தரவில்லை.

இலங்கையின் வெற்றி இலக்கை அடையும் பயணத்தில் விரைவான இரண்டு விக்கெட்டுகள் பறிபோக நிதானமான முறையில் இலங்கை வீரர்கள் செயற்படத்தொடங்கினர். எனினும், பாகிஸ்தான் அணியின் பகுதிநேர சுழல் வீரர் மொஹமட் ஹபீஸ் அணித் தலைவர் உபுல் தரங்கவையும் போல்ட் செய்து மேலும் இலங்கைக்கு அழுத்தங்களைத் தந்தார்.

இன்னும் போட்டியின் 16 ஆவது ஓவரை வீசிய வலதுகை வேகப்பந்து வீச்சாளரான ஹசன் அலி, அந்த ஓவரில் தொடர்ச்சியாக குசல் மெண்டிஸ் மற்றும் மிலிந்த சிறிவர்தன ஆகியோரின் விக்கெட்டுகளைக் கைப்பற்றி இலங்கைக்கு அதிர்ச்சியளித்தார். இதனால் ஒரு கட்டத்தில் இலங்கை 67 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இப்படியான ஒரு தருணத்தில் ஜோடி சேர்ந்த லஹிரு திரிமான்ன மற்றும் திசர பெரேரா ஆகியோர் சிறிது நேரம் போராட்டத்தை வெளிப்படுத்தினர். இலங்கை அணியின் இந்த இணைப்பாட்டம் திசர பெரேராவின் விக்கெட்டோடு சுழல் வீரர் சதாப் கானால் தடுத்து நிறுத்தப்பட்டது.

தொடர்ந்து லஹிரு திரிமான்னவும் அரைச் சதம் கடந்த நிலையில் ஆட்டமிழக்க 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை பறிகொடுத்த இலங்கை அணி 209 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 83 ஓட்டங்களால் போட்டியில் தோல்வியடைந்ததுடன் ஒரு நாள் போட்டிகளில் தமது எட்டாவது தொடர்ச்சியான தோல்வியையும் பதிவு செய்து கொண்டது.

இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக லஹிரு திரிமான்ன 74 பந்துகளை எதிர்கொண்டு 3 பவுண்டரிகள் அடங்கலாக 53 ஓட்டங்களை குவித்திருந்தார். அத்தோடு, பின்வரிசையில் ஆறுதல் தரும் விதமாகச் செயற்பட்ட அகில தனஞ்சய, தனது கன்னி அரைச் சதத்துடன் மொத்தமாக 5 பவுண்டரிகள் அடங்கலாக 50 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழப்பின்றி காணப்பட்டிருந்தார். மேலும் தனஞ்சய, இலங்கை அணியின் எட்டாம் விக்கெட்டுக்காக ஜெப்ரி வன்டர்சேய் உடன் இணைந்து 68 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில் ரும்மான் ரயீஸ் மற்றும் ஹசன் அலி ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுகள் வீதம் கைப்பற்றித் தமது அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர்.

# சுப்பர் 10 அணிகளுக்குள் வட்டக்கச்சி, வலைப்பாடு

(கங்கா)

மைலோ கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில்,



14 வயதுப்பிரிவின் சுப்பர் 10 அணிகளுக்குள் வட்டக்கச்சி மத்திய கல்லூரி மற்றும் வலைப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணிகள் உள்நுழைந்தன.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ குழுமமும், யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலகங்கள் இணைந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள கால்பந்தாட்டக் கழகங்கள் மற்றும் பாடசாலை அணிகளுக்கிடையில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தி வருகின்றன.

கிளிநொச்சி - யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் 11 இடங்களில் இந்தச் சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் 14 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகள் 12 ஆம் திகதி வியாழக்கிழமை மருதநகர் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

முதற்சுற்று ஆட்டங்களில், கிளிநொச்சி ஸ்ரீ விக்னேஸ்வரா அணி 2:0 என்ற கோல்கள் கணக்கில் கிளிநொச்சி மத்திய கல்லூரியையும், சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி 1:0 என்ற கோல் கணக்கில் பிரமந்தனாறு மகா வித்தியாலய அணியையும், கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி, 3:2 என்ற கோல்கள் கணக்கில் திருவையாறு மத்திய மகா வித்தியாலய அணியையும் வென்றன. வட்டக்கச்சி மத்திய கல்லூரி, இரணைதீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, வலைப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணிகளும் நேரடியாக இரண்டாம் சுற்றுப் போட்டியில் பங்குபற்றின.

இரண்டாம் சுற்றில் வட்டக்கச்சி மத்திய கல்லூரி அணி 5:0 என்ற கோல்கள் கணக்கில் ஸ்ரீ விக்னேஸ்வரா அணியையும், இரணைதீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி, 1:0 என்ற கோல் கணக்கில் சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணியையும், வலைப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி 4:0 என்ற கோல் கணக்கில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி



அணியையும் வென்றன. இரண்டாம் சுற்றுக்கு நேரடியாகத் தகுதி பெற்ற, முழங்காவில் மகா வித்தியாலய அணியும், தர்மபுரம் மத்திய கல்லூரி அணியும் போட்டிக்குச் சமுகமளிக்கவில்லை.

மூன்றாவது சுற்றில் வலைப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி 1:0 என்ற கோல் கணக்கில் இரணைதீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணியை வென்றது. மூன்றாவது சுற்றில் எதிரணி இல்லாமையால் வட்டக்கச்சி மத்திய கல்லூரி அணி வெற்றியைப் பெற்றது.

இதனடிப்படையில் கிளிநொச்சி - யாழ்ப்பாணம் மாவட்டங்களைச் சேர்ந்த 14 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள சுப்பர் 10 அணிகளுக்குள் வலைப்பாடு மற்றும் வட்டக்கச்சி அணிகள் உள்நுழைந்துள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir



# கிளிநொச்சியில் நேற்று மைத்திரி வழங்கிய உறுதி





காணாமல் ஆக்கப்பட்டவர் தொடர்பில் விரைவான நடவடிக்கை எடுப்பார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நேற்றுத் திறந்து வைத்த தன் பின்னர் உரையாற்றுகையில் இந்தவிடயத்தை அவர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தைத் திறந்து வைத்த பின்னர் கிளிநொச்சி ஏ-9 வீதியில் அமைந்துள்ள பால் விற்பனை நிலையத்தையும் அவர் திறந்து வைத்தார்.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாக கடந்த 237 நாள்களாகபோராட்டத்தில்ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்று ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக காத்திருந்தனர்.

விற்பனை நிலையத்தினை திறந்து வைக்க வருகை தந்த ஜனாதிபதி வீதியில் நின்ற மக்களைச் சந்தித்து அவர்களுடன் நட்புறவுடன்கலந்துரையாடினார்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை கொழும்பிற்கு கூட்டிச் சென்று அங்கு கலந்துரையாடுவதற்கு அங்கு வாகன வசதி ஏற்படுத்தி தருவதாக குறிப்பிட்டார்.

காணாமல் போனவர்கள் மறைத்து வைக்கப்பட்டதாக சொல்லப்படுகின்ற இடங்களை சென்று பார்வையிடுவதற்கும் தான் ஒருங்கு செய்வார் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேரடியாக மகஜர் ஒன்றினையும் கையளித்துள்ளனர்.

## மைத்திரியைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உங்கள் பிரச்சினையைத் தீர்க்கவும் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தீர்கள்.

இனிமேல் நாம் வன்முறையில்ஈடுபடமுடியாது.இன்னொரு யுத்தத்தை எதிர்கொள்ள முடியாது. யுத்தத்தால் நாம் இழந்தவை அதிகம். எல்லாப் பக்கங்களிலும் அதனால் இழப்புத்தான்.

எனவே நாம் இனிமேல் கறுப்புக் கொடி ஏந்தி விரோதம் காட்டத் தேவையில்லை. வெள்ளைக் கொடி ஏந்தி சமாதானம் பேணுவோம்.

விரோதம், வன்முறையில் ஈடுபட்டால், அதனால் சக்தி பெற்றுப் பலமடையப் போவது வேறு ஆள்கள்தான்.

நாங்கள் தமிழர்களும், சிங்களவர்களும், முஸ்லிம்களும் ஒற்றுமைபட்டு வாழவேண்டும்.

ஒரு நீதியான – சகோதரத்துவம் மிக்க – பண்பான – சகலரும்சகோதரர்களாகவாழுகின்ற – நாட்டைக் கட்டி எழுப்புவதற்கு என்னுடன் சேர்ந்து செயற்பட வாருங்கள் என நான் உங்கள் ஒவ்வொருவரையும் அழைக்கின்றேன்.

என்னை நீங்கள் பலவீனப்படுத்தினால், மீண்டும் பேய்களுக்குத்தான் பலம் கூடும். அவை தலையெடுத்தாடும். – என்றார் ஜனாதிபதி.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லிணக்கம் ஏற்படுவதற்கான புறச் சூழலைப் பெரிதும் பாதித்து நிற்கின்றது.

இந்த விடயத்தில் தீர்க்கமான அரசியல் தீர்மானங்கள் அவசியப்படுகின்றன. அதை அரசியல் தலைமைகள் எடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது எனக் கருதுகிறேன்.

இன்று (ஞாயிறு) ஒரு பொது நிகழ்வில் ஜனாதிபதியைச் சந்திப்பேன் என நினைக்கின்றேன். அப்போது அடுத்து வரும் நாள்களில் இவ்விடயம் குறித்து பேசுவதற்கான ஏற்பாட்டைச் செய்து கொள்வேன் என நம்புகின்றேன் – என்றும் சம்பந்தன் மேலும் கூறினார்.

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈழமக்கள் புரட்சிக விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

யாழ். இந்துகல்லூரி முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பேச்சு நடத்தியிருந்தார். பேச்சில் ஈடுபட்டவர்களினுடைய கோரிக்கை தொடர்பில் தாம் அவர்களுடன் கொழும்பில் பேசலாம் என்று அங்கு ஜனாதிபதி கூறியிருந்தார்.

இது குறித்து அந்த இடத்தில் வைத்து சுரேஷ் பிறேமச்சந்திரன் கூறியவை வருமாறு: –

சிறையில் அவர்கள் உயிருடன் போராடுகின்றார்கள். 20 நாள்கள் கடந்து அவர்களது போராட்டம் தொடரும் நிலையில் இப்போது மைத்திரியாருடன் கூடிப்பேசப் போகின்றார் என்பது தெரியவில்லை. அவரது பதில் ஏற்றுக் கொள்ளமுடியாத ஒன்று. அந்தக் கைதிகளின் உயிருடன் விளையாடுகின்றது இந்த அரசு.

சாதாரணமாக இலங்கை ஜனாதிபதியால் தீர்க்கக்கூடிய தொரு விடயத்திற்காக யாருடன் மைத்திரி கூடிப்பேசப்போகின்றார் என்பது தெரியவில்லை. – என்றார் அவர்.

## பேய்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:–

தமிழ்மக்களின் அவலத்துக்கு ஒரு முடிவு கட்டுவதற்காகவே நல்லாட்சி அரசின் உதயத்துக்குத் தமிழ்மக்கள் உதவினார்கள்.

தெற்கில் பேய் வரும் பிசாசு வரும் என்பதற்காகத் தமிழர்கள் தொடர்ந்தும் அவலங்களை எதிர்கொண்டபடி வாழமுடியாது. அதற்கு ஒரு முடிவு கட்டப்பட வேண்டும்.

அதுவே எமக்கு முக்கிய விடயம். அதற்கான முயற்சிகளை நாம் எடுப்போம். – பேய் வந்தாலும், பிசாசு வந்தாலும். – என்றார் அவர்.

## கறுப்புக் கொடி பேச அழைத்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது இடம்பெற்றது.

அரசியல்கைதிகள்விடுவிப்பு விடயத்தை வலியுறுத்தி நேற்று முன்தினம் வடமாகாணம் முழுவதும் கடையடைப்பு இடம்பெற்றது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்காது ஜனாதிபதி யாழ். வந்தால் அவருக்குக் கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்பது என அறிவிக்கப்பட் டிருந்தது.

அத்தகைய அஹிம்சை வழிப் போராட்டத்துக்குத் தடை உத்தரவு வழங்க யாழ். நீதிமன்றமும் நேற்று மறுத்திருந்தது.

இந்தப் பின்புலத்திலேயே நேற்றுக் காலை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இடம்பெற்ற தேசிய தமிழ்த் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள வந்த ஜனாதிபதிக்குக் கறுப்புக் கொடி காட்டப்பட்டது.

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகே ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார்பொன்னம்பலம், ரெலோவின் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் உட்பட நூற்றுக்கும் அதிகமானோர் அந்தச் சந்தி மூலையில் கறுப்புக் கொடியுடன் நின்றனர்.

அந்த மூலையில் தமது வாகன அணி திரும்பியபோது ஆர்ப்பாட்டக்காரரை அவதானித்த ஜனாதிபதி உடனடியாகத் தமது வாகனத்தை நிறுத்தி அதைவிட்டு இறங்கினார். நேரடியாகத் தமது மெய்க்காவலர்கள் சூழ்ந்து வர ஆர்ப்பாட்டக்காரர்களை நெருங்கிச் சென்று அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டார்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆங்கிலத்திலும், சிவாஜிலிங்கம் சிங்களத்திலுமாக மிக ஆக்ரோஷமாகஜனாதிபதியுடன் சத்தமிட்டுப் பேசினர்.

சம்பந்தப்பட்ட அரசியல்கைதிகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படியும் –

அவர்களதுவழக்கைமீண்டும் வவுனியாவுக்கு மாற்றும்படியும் அவர்கள் குரல் எழுப்பிக் கோஷமிட்டுக் கோரினர்.

அது குறித்துப் பேசுவதற்குக் கொழும்புக்கு வருமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்பை அவர்கள் ஏற்க மறுத்தனர்.

சுமார் ஐந்து நிமிட நேரம் அப்பகுதியில் நின்று உரையாடிய ஜனாதிபதி அதையடுத்து அங்கிருந்து புறப்பட்டு, தமது வாகன அணியுடன் சேர்ந்த யாழ். இந்துக் கல்லூரியை அடைந்தார்.

## உண்ணாவிரதக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிந்தியதகவல்களின்பிரகாரம் அநுராதபுரம் அரசினர் வைத்தியசாலையின் தீவீர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கபட்டுள்ள அவர்களது உடல்நிலை கவலைக்கிடமாக அமைந்துள்ளது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக அநுராதபுரம் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் அவர்களுள் மதியரசன் சுலக்சன் தானாக முன்வந்து மீண்டும் சிறை திரும்பி போராட்டத்தை முன்னெடுத்திருந்தார். ஏனைய இருவரும் சில நாள்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுத் திரும்பி போராட்டத்தில் இணைந்திருந்தனர்.

சிறையில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள இந்த மூன்று அரசியல் கைதிகளதும் போராட்டம் நேற்றுடன் 20ஆவது நாளைத் தாண்டியுள்ளது.

கைதிகளாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அவர்கள் முன்னெடுக்கும் 11ஆவது தடவையான உணவுத் தவிர்ப்பு போராட்டம் இதுவாகும்.

இலங்கை ஜனாதிபதியின் யாழ்ப்பாண வருகையின் போது தமது கோரிக்கை தொடர்பில் ஒரு நியாயமான முடிவு கிடைக்குமென்ற நம்பிக்கை அவர்களிடமிருந்ததாக குடும்பத்தவர்கள் தெரிவித்தனர். இந்நிலையினில் உண்ணாவிரதம் நடப்பது தொடர்பில் ஏதும் தெரியாதமை போன்று ஜனாதிபதி புதிதாகப் பேசுவதற்குக் கொழும்புக்கு வருமாறு அழைப்புவிடுத்தமை கண்துடைப்பென அவர்கள் கவலை வெளியிட்டுமுள்ளனர்.

நேற்று மதியத்தின் பின்னர் கைதிகளின் உடல்நிலைமை தாறுமாறாக மோசமடைய தொடங்கியதையடுத்தே வைத்தியசாலைக்கு அவர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனக் குடும்பத்தவர்கள் தெரிவித்தனர்.

## கறுப்புக் கொடி தேடிச் சென்றார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச வருமாறு நான் அவர்களை அழைத்தேன். அவர்கள் அதற்கு வரத் தயாராக இல்லை.

தமது கோரிக்கையை உடனே நிறைவேற்றுங்கள் என என்னிடம் கோருகின்றார்கள். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், பேசித்தான் தீர்க்க முடியும். வன்முறையால் தீர்க்க முடியாது" – இவ்வாறு நேற்று ஆதங்கத்துடன் தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

யாழ். இந்துக்கல்லூரி நிகழ்வில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பிலேயே அவர் இவ்வாறு கருத்தை முன்வைத்தார்.

நான் யாழ் வரும் போது சில சம்பவங்கள் இங்கு இடம் பெற்றன. சில போராட்டங்கள், சில ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. நான் பல வருடங்கள் அரசியல் செய்து வருகிறேன். எனக்கு இவை பற்றி எல்லம் நன்றாகத் தெரியும். என்னை ஜனாதிபதியாக நீங்கள் எல்லோரும் சேர்ந்துதான் தெரிவு செய்தீர்கள். பிரச்சினைகளைத் தீர்க்கத்தான் 62 லட்சத்து சிம்பதாயிரம் பேர் வாக்களித்து என்னை ஜனாதிபதி ஆக்கினீர்கள்.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும், பொருளாதாரத்தை மேம்படுத்தி, ஏழ்மை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதற்காகத் தெரிவுசெய்தீர்கள்.

அத்தனை பேரும் என்னுடன் வந்து கலந்துரையாடி பிரச்சினைகளைத் தீர்க்க வாருங்கள். நான் உங்களுக்கு அழைப்பு விடுகிறேன்.

கறுப்பு கொடி காட்டினார்கள். உரத்துச் சத்தம் இட்டார்கள். அது எனக்கு எதிர்ப்பாக இருக்கலாம்.

நான் அவர்களைப் பார்க்க போனேன். ஏன் என்று கேட்டேன். விடயத்தை சொன்னார்கள். பிரச்சினைகள் இருந்தால் பேச்சுக்கு வர சொல்லிக்கேட்டேன். அது முடியாது, இப்போதே தங்கள் கோரிக்கைக்கு முடிவு தாருங்கள் எனக் கோருகிறார்கள்.

எந்தப் பிரச்சனை என்றாலும் அனைத்துத் தரப்புகளுடனும் பேசித்தான் ஆக வேண்டும். என்னுடன் பேசலாம். முரண்பாடு ஏற்படுத்த கூடாது, வன்முறை வேண்டாம் .

இந்தநாட்டில் இனியுத்தத்தை ஏற்படுத்த முடியாது. யுத்தத் தால் அனுபவப்பட்டுள்ளோம்.

செல்வந்தர்கள் வெளிநாடு போய்விடுவார்கள். ஆனால் ஏழைகள்தான் கஷ்டப்படுகிறார்கள்.

அவர்களின் தலைவர் இறந்துவிட்டார். அதனால் ஏற்பட்ட பாதிப்பு அனைவருக்கும் தெரியும். எனவே இங்கு கறுப்பு கொடி உயர்த்தத் தேவை இல்லை. சமாதானத்துக்கு வெள்ளை கொடி உயர்த்த வேண்டும்.

விரோதம், வன்முறை ஏற்படுத்தினால் சக்தி பெறுவது வேறு ஆட்கள்தான். எல்லா இனத்தவர்கள் மத்தியிலும் சகோதரத்துவத்தை ஏற்படுத்த தான் நான் செயற்பட்டு வருகிறேன்.

அனைவருக்கும் ஒரே நியாயத்தை ஏற்படுத்தவே நான் செயற்படுகிறேன். – என்றும் ஜனாதிபதி கூறினார்.

# கைதிகள் விவகாரம் முடிவுக்கு ஜனாதிபதி அவசர உத்தரவு?

கொழும்பு, ஒக். 15

அனுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும் மூன்று அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணையை வவுனியாவில் நடத்துவதற்கு சட்டமா அதிபர்திணைக்களம் மீண்டும் மறுப்பு வெளியிட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனாலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமைவாக ஜனாதிபதி செயலகம், சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பாக அமைச்சர் மனோ கனேசன் ஜனாதிபதியுடன் இரண்டு தடவைகள் பேசியுள்ளார். எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தன் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி சுமந்திரனும் சட்ட மா அதிபருடன்பேசி இருந்தார்.

இது தொடர்பாகச் சட்டமா அதிபருடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாடினார் என்றும் ஆனாலும், வழக்கு விசாரணையை வவுனியாவில் நடத்த மறுப்பு தெரிவிக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமைவாக வழக்கு விசாரணையை வவுனியாவில் நடத்துவதற்கான சட்ட விளக்கங்களைக் கொடுத்து வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.



வழக்கு விசாரணையை அனுராதபுரத்துக்கு மாற்றினால் மொழிப் பிரச்சினை ஏற்படும் என்றும் சிங்களத்தில் எழுதப்பட்ட பிரதிகளில், கைதிகள் கையொப்பமிட நேரிடும் என்றும் அமைச்சர் மனோ கனேசன் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேவேளை, ஜே.வி.பியின் அரசியல் கைதிகளுக்கு அரசு அன்று பொது மன்னிப்பு வழங்கியது போல் தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்கு அரசு ஏன் பின்நிற்கின்றது என சம்பந்தனும், ஜனாதிபதிக்கு எழுதிய தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, மூன்று அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணை அனுராதபுரம் நீதிமன்றத்துக்கு மாற்றப்படாது என ஜனாதிபதி, நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கு கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் எழுதிய கடிதத்தில் உறுதி அளித்திருந்தார்.

இந்த நிலையில், சட்டமா அதிபர் திணைக்களம் ஜனாதிபதியின் உத்தரவுகளையும் மீறி, இந்த மூன்று அரசியல் கைதிகளின் வழக்கு விவகாரத்தில் ஏன் தன்னிச்சையாகச் செயற்படுகின்றது என மனித உரிமை ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கைதிகளுக்கு ஆதரவாகத் தமிழர் பிரதேசங்களில் நேற்று முன்தினம் முழுமையான கடையடைப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(க)

## கால்வாயில் தவறி விழுந்தது யானை!



கொழும்பு, ஒக். 15

பொலன்னறுவ செவன பிடிய-கினிதமன பிரதேசத்தில்கால்வாயில்விழுந்தயானை ஒன்றை வன ஜீவராசி அதிகாரிகள் காப்பாற்றியுள்ளனர்.

இந்த யானை நேற்றுமுன்தினம் இரவு கால்வாயில் விழுந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இந்த யானைக்கு 30 வயது இருக்கும் என அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்த யானையைக் காப்பாற்றுவதற்கு வெஹெரகல மற்றும் வெலிகந்த வனத் திணைக்கள அதிகாரிகளும் மக்களும் கைகோர்த்துள்ளனர்.

கயிறு,டயர் மற்றும் ஏனியின் மூலம் யானையை வெளியே கொண்டுவந்துள்ளனர்.

காப்பாற்றப்பட்ட யானை காட்டுக்குள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா. நிலைமாறுகால நீதிக்கான பிரதிநிதி



பப்லோ டி கிரீஷ் குழுவினர் மன்னாரில்

ஐக்கிய நாடுகள் சபையின் நிலைமாறுகால நீதிக்கான விசேட பிரதிநிதி பப்லோ டி கிரீஷ் தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை மன்னாருக்கு விஜயம் செய்துள்ளனர்.

இந்த விஜயத்தின்போது மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவை பப்லோ டி கிரீஷ் தலைமையிலான குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இதேவேளை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் சிலரையும் அவர் சந்தித்துள்ளார்.

அத்துடன், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ள பப்லோ டி கிரீஷ் தலைமையிலான குழுவினரிடம் மகஜர்களையும் கையளித்துள்ளனர்.

இவ்வாறாயினும், பப்லோ டி கிரீஷ் குழுவினரின் சந்திப்புக்கள் தொடர்பாகச் செய்தி சேகரிக்கச்சென்ற ஊடகவியலாளர்களுக்குஅனுமதிமறுக்கப்பட்டது.

## வாழ்க்கைச் செலவைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் அமைச்சர் ரிஷாத்!

கொழும்பு, ஒக். 15

மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இந்த வாரம் கூடிய வாழ்க்கைச் செலவின கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது என்றும் அவர் கூறி உள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசித் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு 5 லட்சம் மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

இந்தியாவிலிருந்து ஒரு லட்சம் மெட்ரிக் தொன் அரிசி உடனடியாக இறக்குமதி செய்யப்படவுள்ளது.

எஞ்சிய தொகை மியன்மார், பாகிஸ்தான், தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து கொள்வனவு செய்யப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

உரிய நாடுகளின் தூதுவர்களிடம் இருந்து இது தொடர்பான விலைக் கோரிக்கையும் பெற்றுக்கொள்ளப்பட்டது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைப்பது தொடர்பில் அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை தொடர்பாகவும் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதியினதும், பிரதமரினதும் வழிகாட்டலில், பிரதமரின் செயலாளரின் தலைமையில் உயர்மட்ட அமைச்சரவைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு நாளை திங்கட்கிழமை கூடி பல்வேறு முக்கிய முடிவுகளை மேற்கொள்ள உள்ளது.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் 500அத்தியாவசியப் பொருள்களுக்கான விலைகளைக் குறைத்து எனது அமைச்சின் கீழான லங்கா சதொசவில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை விலைக் கழிவு அமுலில் இருக்கும். ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும், ரயில்வே நிலையங்களிலும், அரச நிறுவனங்களிலும் முடியுமானவரைசதொச விற்பனைக் கிளைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தனவுடன் பேச்சு நடத்தியுள்ளோம் .

அத்துடன், தனியார் முகவர்களுடனும் சதொசகிளைகளை ஆரம்பிப்பது பற்றிக் கலந்தாலோசித்துள்ளோம்.

லங்காசதொசவில் ஒருகிலோ அரிசி 74 ரூபாவுக்கு விற்பனை செய்யவும், நாட்டின் 25 மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்படவுள்ள மொத்த வியாபார நிலையங்களில் ரூபா 74 இற்கு ஒரு கிலோ அரிசியை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

சதொசவில் தற்போது தேங்காய் ஒன்றின் விலை 65 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. தெங்கு அபிவிருத்திச் சபை எமக்கு வழங்கும் தேங்காய்களையும்; இலாபமின்றி நாம் விற்பனை செய்து வருகின்றோம்.

லங்கா சதொச, நகரங்களை மையமாக வைத்தே தற்போது தேங்காய்களை விற்பனை செய்து வருகின்றது. எனினும், தேங்காய் அதிகமான அளவில் எமக்குக் கிடைக்கப் பெற்றால் நாடு முழுவதும் இதனை விஸ்தரிக்க முடியும். லங்கா சதொச கிளையில் வெள்ளைநாட்டரிசி 65 ரூபா, வெள்ளைச் சம்பா அரிசி 90 ரூபா, நாடு 74



ரூபா, வெள்ளைச் சீனி 107 ரூபா, சிவப்பு பருப்பு கிலோ 152 ரூபா, ஒரு கிலோ பெரிய வெங்காயம் 134 ரூபா, உருளைக்கிழங்கு கிலோ 125ரூபா, ரின்மீன் (425 கிறாம்) 129ரூபா ஆகிய விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அங்கு கருத்து வெளியிட்ட வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அசோக தெரிவிக்கையில்-

பிரதேச செயலகங்கள் உட்பட அரச நிறுவனங்களிலும் விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்குத் தேவையான பொருள்கள் சதொச ஊடாக சலுகை விலையில் வழங்கப்பட இருக்கின்றன.

மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான பல்வேறு யோசனைகள் வரவு - செலவுத் திட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

(ப)

## யாழ். இந்துவில் ஜனாதிபதி







## ஜனாதிபதியை வரவேற்கிறார் வடக்கு விவசாய அமைச்சர்








நேற்றுக் காலை நிலாவரையில் 'விளைச்சல் பெருகிட ஒரு மித்து எழுவோம்' – என்ற தேசிய உணவு உற்பத்திப் புரட்சியின் வட மாகாண நிகழ்ச்சித் திட்டம் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வு வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சு விடுத்த விசேட அழைப்பை ஏற்று இந்த நிகழ்வில் ஜனாதிபதி பங்கு பற்றினார். இது மாகாண விவசாய அமைச்சின் நிகழ்வு என்பதால் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனின் விசேட அனுமதியுடன் இந்த நிகழ்வில் மாகாண விவசாய அமைச்சர் பங்குபற்றினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

# தியாகி அறக்கொடை நிறுவனத்தின் மாதாந்த உதவித்திட்ட கொடுப்பனவு நிகழ்வு









தியாகி அறக்கொடை நிறுவனத்தின் மாதாந்த உதவித் திட்டத்தின் ஊடாக உதவி பெறுவோருக்குரிய ஒக்டோபர் மாதக் கொடுப்பனவுகளையும் மேலும் தீபாவளி அன்பளிப்புப் பொருள்களையும் வழங்கும் நிகழ்வு அறக்கொடையின் யாழ். சொர்ணாம்பினை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக தமிழகத்தின் 'சுப்பர் சிங்கர்' பிரியங்கா, யாழ். போதனா வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்தியர்கள் இருவர் மற்றும் நிறுவனத்தின் ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

வறிய குடும்ப மாணவரின் கல்வி மேம்பாட்டிற்காக 375 மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு, நலிவுற்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் 260 பயனாளிகளுக்கான மாதாந்தக் கொடுப்பனவு, நலிவுற்ற குடும்பங்களில் போஷாக்குக் குறைவான – ஒரு வயதுக்கு உட்பட்ட – அறுநூறு குழந்தைகளுக்கு சத்துணவு தயாரிக்கும் பொருள்கள் அடங்கிய பொதி, மகளிர் சேமிப்புத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 75 பயனாளிகளுக்கு மாதாந்த சேமிப்புத் திட்டம், மாணவர்கள், முதியோருக்கான மூக்குக் கண்ணாடி, இம்முறை இத்தரப்பினர் எல்லோருக்குமான தீபாவளி அன்பளிப்புப் பொதி என மாதாந்தம் சுமார் பத்து லட்சம் ரூபாவுக்கான உதவிகளை இவ்வாறு தியாகி அறக்கொடை நிலையம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.10.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.